நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## நெல் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும்: ராமதாஸ்

நெல் கொள்முதல் விலையை குவிண்டாலுக்கு ரூ.2,500-ஆக உயர்த்த வேண்டும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக வியாழக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை:

தேசிய விவசாயிகள் ஆணையத்தின் பரிந்துரைப்படி ஒரு குவிண்டால் நெல்லுக்கு கொள்முதல் விலையாக ரூ.2,636 வழங்க வேண்டும்.

தமிழகத்தில் கடந்த ஆண்டு வரலாறு காணாத வறட்சி நிலவியதால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

அதற்குப் பிறகு இப்போதுதான் முதல்முறையாக குறுவைப் பயிர் சாகுபடி செய்துள்ளனர். கடந்த ஆண்டில் அவர்கள் பட்ட கடனை அடைக்க வேண்டுமானால் நடப்பாண்டில் நெல்லுக்குக் கட்டுப்படியாகும் விலையைத் தர வேண்டியது அவசியமாகும்.

எனவே, காவிரிப் பாசன மாவட்டங்களில் உடனடியாக நேரடி நெல்கொள்முதல் நிலையங்களைத் திறக்க வேண்டும்.

தேசிய விவசாயிகள் ஆணையத்தின் பரிந்துரைப்படி இல்லாவிட்டாலும், குறைந்தபட்சமாக சாதாரண வகை நெல்லுக்கு ஒரு குவிண்டாலுக்கு ரூ.2,250-ம், சன்ன வகை நெல்லுக்கு ரூ.2,500-ம் கொள்முதல் விலையாக நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

## வரத்து அதிகரிப்பு: வெங்காயம் கிலோவுக்கு ரூ.15 குறைந்தது



வரத்து அதிகரித்துள்ளதால் வெங்காயத்தின் விலை கிலாவுக்கு ரூ.15 வரை குறைந்துள்ளது.

அத்தியாவசிய காய்கறிகளில் முக்கியமான ஒன்றான வெங்காயம், கடந்த சில நாள்களுக்கு முன்பு கிலோ ரூ.65 வரை விற்கப்பட்டது.

வெங்காய விலை உயர்வுக்கு வரத்து குறைவு, பதுக்கல் உள்ளிட்ட பல்வேறு காரணங்கள் கூறப்பட்டன.

இந்த நிலையில் கோயம்பேடு மார்க்கெட்டுக்கு புதன்கிழமை முதல் வெங்காய வரத்து அதிகரித்து காணப்பட்டது. இதனால் கிலோவுக்கு ரூ.15 வரை விலை குறைந்துள்ளது.

இது குறித்து, கோயம்பேடு மார்க்கெட் வெங்காய வியாபாரிகள் சங்க ஆலோசகர் சௌந்தரராஜன் வியாழக்கிழமை கூறியது: மகாராஷ்டிரம், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய பகுதிகளில் இருந்து மார்க்கெட்டுக்கு வெங்காயம் விற்பனைக்காக கொண்டுவரப்படுகிறது. உற்பத்தி அதிகமாக இருந்தபோது ஒரு லாரிக்கு 15 டன் வீதம் 80 லாரிகள் வரை வெங்காயம் கொண்டுவரப்பட்டது. கடந்த சில மாதங்களாக வரத்து குறைந்ததால் 35 முதல் 40 லாரிகளில் மட்டுமே வெங்காயம் கொண்டுவரப்பட்டது. அதனால் விலை அதிகரித்து காணப்பட்டது.

தற்போது உற்பத்தி சற்று அதிகரித்திருப்பதால் 2 நாள்களாக 55 லாரிகளில் வெங்காயம் கொண்டுவரப்பட்டது. வரத்து அதிகரித்துள்ளதால் வெங்காயத்தின் விலை கிலோவுக்கு ரூ.15 வரை குறைந்து காணப்படுகிறது. இதனால் ஹோட்டல் உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் அதிகளவில் வெங்காயத்தை வாங்கிச் செல்கின்றனர் என்றார்.

இதே போல் மற்ற மார்க்கெட்டுகளிலும் முதல் தர பெரிய வெங்காயம் கிலோ ரூ.50-க்கும், இரண்டாம் தர வெங்காயம் ரூ.35 முதல் ரூ.40-க்கும் விற்பனை செய்யப்பட்டது. சிறிய வெங்காயம் தரத்துக்கு ஏற்றவாறு கிலோ ரூ.45 முதல் ரூ.60 வரை விற்பனையானது.

## நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலை அதிகரிப்பு

நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை அதிகரித்து முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். குவிண்டாலுக்கு ரூ.50 முதல் ரூ.70 வரை உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்த ஆலோசனைக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஜெயலலிதா தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்துக்குப் பிறகு, நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை உயர்த்துவது குறித்த அறிவிப்பை அவர் வெளியிட்டார். அந்த அறிவிப்பின் விவரம்:

நடப்பு காரீப் பருவத்துக்கு விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்முதல் செய்வதற்கான குறைந்தபட்ச ஆதார விலையை மத்திய அரசு அறிவித்துள்ளது. மத்திய அரசின்

அறிவிப்புப்படி, சாதாரண நெல்லுக்கான விலை குவிண்டாலுக்கு ரூ.1,310 எனவும், சன்ன ரக நெல்லுக்கான விலை குண்டாலுக்கு ரூ.1,345 எனவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து, நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை மாநில அரசு நிர்ணயம் செய்யும் வகையில் ஆலோசிக்கப்பட்டது. இது தொடர்பான கூட்டத்தில் நடைபெற்ற விரிவான கலந்தாய்வுக்குப் பிறகு, நெல் பயிரிடும் விவசாயிகளின் நலன்களைக் கருத்தில் கொண்டு, சாதாரண நெல்லுக்கு குவிண்டாலுக்கு மத்திய அரசால்

நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகையுடன் தமிழக அரசின் சார்பில் ரூ.50 வழங்கப்படும்.

மேலும், சன்ன ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள ரூ.1,345 என்ற தொகையுடன் கூடுதலாக மாநில அரசு சார்பில் ரூ.70 அளிக்கப்படும்.

அக்டோபர் 1 முதல்: மாநில அரசின் கூடுதல் தொகையையும் சேர்த்து சாதாரண நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.1,360-ம், சன்ன ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.1,415-ம் அக்டோபர் 1 ஆம் தேதி முதல் வழங்கப்படும்.

மேலும், நெல் விளையும் பூமியான காவிரி பாசனப் பகுதிகளில் தேவைக்கேற்ப நேரடி கொள்முதல் நிலையங்களைத் திறக்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்துக்கு அனுமதி வழங்குமாறு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

காவிரிப் பாசனப் பகுதி அல்லாத இடங்களில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறக்க அனுமதி வழங்கவும் சம்பந்தப்பட் மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் இந்த நடவடிக்கை மூலம் விவசாயிகளின் வருமானம் பெருகுவதுடன், அவர்களின் வாழ்வு மேலும் ஏற்றம் பெறும் என்று முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

முதல்வர் தலைமையில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர்கள் ஓ.பன்னீர்செல்வம், நத்தம் ஆர்.விஸ்வநாதன், கே.பி.முனுசாமி, ஆர்.வைத்திலிங்கம், செ.தாமோதரன், செல்லூர் கே.ராஜு, ஆர்.காமராஜ், தலைமைச் செயலாளர் ஷீலா பாலகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

### அரசின் காய்கறி சேமிப்பு மையத்தால் அதிக லாபம்

தமிழக அரசின் காய்கறிகள் சேமிப்பு மையத் திட்டத்தால் அதிக லாபம் கிடைப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியத்துக்கு உள்பட்ட மல்லியங்குப்பம் கிராமத்தில் செப்டம்பர் 1-ம் தேதி தமிழக அரசு சார்பில் பெருநகரக் காய்கறித் தொகுப்பு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் காய்கறி சேமிப்பு மையம் திறக்கப்பட்டது.

இந்த மையத்தில் சோழரம், வீராக்குளம், மல்லியங்குப்பம் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த தோட்டப்பயிர் விவசாயிகள் தங்களது விளைப்பொருள்களை விற்பனை செய்து வருகின்றனர்.

இதில் இடைத்தரகர்கள் தலையீடு இல்லாததால் விளைப்பொருளுக்கு ஏற்ற விலை கிடைப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

இது குறித்து இத்திட்டத்தில் பயனடைந்த கீரை விவசாயி தாமு கூறியது:

இதற்கு முன்பு விவசாயிகள் தங்களது விளைப்பொருளை பெரியபாளையத்தை அடுத்த ஆரணிக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்ய வேண்டும்.

சில சமயங்களில் ஒரே ரக காய்கறிகள் அதிகளவில் சந்தைக்கு வந்துவிடும். அப்போது விளைப்பொருள்கள் மிகவும் குறைவான விலைக்கே விற்பனையாகும்.

இதனால் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டது. மேலும் இடைத்தரகர்களே விளைப்பொருளின் விலையில் பாதியினை எடுத்துக் கொள்வார்கள்.

தற்போது தமிழக அரசின் திட்டத்தால் எங்களது விளைப்பொருள்களுக்கு உரிய விலை கிடைக்கிறது. இங்குள்ள கூட்டுறவுத்துறை அலுவலர்கள், மின்னணு இயந்திரங்கள் மூலம் எடைபோட்டு உரிய விலை நிர்ணயம் செய்கின்றனர் என்றார்.

வெண்டைக்காய், கத்திரி பயிர் செய்யும் ராணி கூறியது:

இந்த காய்கறி சேமிப்பு மையத்தின் மூலம் எங்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது.

இத்திட்டத்தால் விவசாயிகள் தங்களின் மொத்த நிலங்களில் பயிரிட்டு, அதனை முறையாக சந்தைப்படுத்தி லாபம் பெற முடிகிறது என்றார்.

இது குறித்து தோட்டக் கலைத்துறை அலுவலர் கூறியது:

திருவள்ளூர் மாவட்டத்தில் பெருநகரக் காய்கறி தொகுப்பு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் காய்கறிகள் சாகுபடி செய்ய சோழவரம் ஒன்றியத்தில் 23 குழுக்கள், பூவிருந்தவல்லி ஒன்றியத்தில் 7 குழுக்கள், திருவள்ளூர் ஒன்றியத்தில் 9 குழுக்கள், திருத்தணி ஒன்றியத்தில் 12 குழுக்கள், எல்லாபுரம் ஒன்றியத்தில் 4 குழுக்கள், ஆர்.கே.பேட்டை ஒன்றியத்தில் 10 குழுக்கள் என மொத்தம் 65 குழுக்கள் தோட்டக்கலைத் துறையினரால் அமைக்கப்பட்டுள்ளது.

அந்த குழுக்களில் இதுவரை 987 விவசாயிகள் பங்கேற்றுள்ளனர். தற்போது இம்மாவட்டத்தில் காய்கறிகள் 1,696 ஹெக்டேர் நிலத்தில் சாகுபடி செய்யப்படுகிறது.

மானியங்கள்...

காய்கறி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு சாகுபடி செய்ய 1 ஹக்டேர் பரப்புக்கு 75 சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது.

அதன்படி, உயர் விளைச்சல் ரகங்களுக்கு ரூ.22 ஆயிரத்து 500, வீரிய ரகங்களுக்கு ரூ.33 ஆயிரத்து 750 என மானியம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் நிழல் வலை அமைக்க 50 சதவீதம் மானியம் அளிக்கப்படுகிறது.

ரூ.8 லட்சம் மதிப்பில் காய்கறிகள் சேகரிப்பு மையம் அமைக்க 100 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.

வாகனங்களுக்கு ஏற்ப மானியம்:

காய்கறிகளை விற்பனைக்காக ஏற்றிச் செல்ல 6 மெட்ரிக் டன் கொள்ளளவுக் கொண்ட ரூ.24 லட்சம் மதிப்பிலான வாகனம் வாங்குவதற்கு 40 சதவீதம் மானியமாக ரூ.9.6 லட்சமும், 3 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட ரூ.14 லட்சம் மதிப்பிலான வாகனத்துக்கு 40 சதவீதம் மானியமாக ரூ.5.6 லட்சம் வழங்கப்படுகிறது.

மேலும் காய்கறிகளை பாதுகாப்பாக எடுத்துச் செல்ல ஏதுவாக தலா ரூ.150 மதிப்பிலான 5 ஆயிரத்து 668 பிளாஸ்டிக் கிரேடுகள் 50 சதவித மானியத்தில் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் மல்லியங்குப்பத்தில் முதல்கட்டமாக காய்கறிகள் சேமிப்பு மையம் தொடங்கப்பட்டுள்ளது. மேலும் 3 மையங்கள் விரைவில் தொடங்கப்படும் என்றார் அவர்.

## மேலூர்: ஒருபோக சாகுபடிக்குத் தண்ணீர் வந்தது

மேலூர் ஒருபோகச் சாகுபடி பகுதி விவசாயத்துக்கு வைகை அணையிலிருந்து புதன்கிழமை திறந்துவிடப்பட்ட தண்ணீர், குறிச்சிப்பட்டி கண்மாய்க்கு வியாழக்கிழமை இரவு வந்து சேர்ந்தது.

ஒருபோகச் சாகுபடி பகுதியில் 1 லட்சம் ஏக்கரில் சம்பா நெல் சாகுபடியாகும். வழக்கமாக செப். 15-இல் தண்ணீர் திறக்கப்படும். தற்போது தாமதமாகத் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. வியாழக்கிழமை காலை கள்ளந்திரி மதகிலிருந்து 600 கனஅடி தண்ணீர் மேலூர் பகுதிக்கு திறக்கப்பட்டது. பிரதான கால்வாயின் கடைசியிலுள்ள குறிச்சிப்பட்டி கண்மாய்க்கு இரவு 200 கனஅடி நீர் வந்தது.

இதனை அப்பகுதி விவசாயிகள் மலர் தூவி, இலையில் சூடம் ஏற்றி நீரில் மிதக்கவிட்டு வரவேற்றனர். கால்வாயில் தண்ணீர் வந்ததையடுத்து மேலூர் சுற்றுவட்டாரத்தில் வியாழக்கிழமை இரவு இடி மின்னலுடன் லேசாக மழை தூறியது. பிரதான கால்வாயில் கூடுதல் நீர் வெள்ளிக்கிழமை காலை வந்ததும், அனைத்து கிளைக் கால்வாய்களிலும் தண்ணீர் திறக்கப்படும் என பிரதான கால்வாய் கோட்ட கண்காணிப்பு பொறியாளர் செல்வராஜ் தெரிவித்தார்.

### நத்தத்தில் நிரந்தர தினசரி சந்தை துவக்கம்

நத்தத்தில் ரூ. 24 லட்சம் மதிப்பில் நிரந்தரமாக தினசரி சந்தைக்கான கடைகள் கட்டி முடிக்கப்பட்டு, புதன்கிழமை துவக்க விழா நடைபெற்றது.

நத்தம் பஸ் நிலையத்தில் இருந்து செந்துறை பிரிவு வரை நெடுஞ்சாலையோரம் 200-க்கும் மேற்பட்ட கடைகள் இருந்தன. நத்தம் பேரூராட்சிப் பகுதியில் ரூ. 10 கோடி மதிப்பில் சாலை மேம்பாட்டுத் திட்டபணிகள் நடைபெற்று வரும் நிலையில், இந்த சாலையோரக் கடைகளால் போக்குவரத்து பாதிக்கப்பட்டு, பொதுமக்கள் மிகவும் சிரமப்பட்டு வந்தனர்.

எனவே பொதுமக்கள் நலன் கருதி, சாலையோரக் கடைகளை இடமாற்றம் செய்ய பேரூராட்சி நிர்வாகம் முடிவு செய்தது. அதனடிப்படையில், பின்தங்கிய பகுதி மானிய நிதி திட்டம் மூலம் ரூ. 20 லட்சம் மற்றும் பொது நிதியிலிருந்து ரூ. 4 லட்சம் என மொத்தம் ரூ. 24 லட்சம் மதிப்பில், சட்டப்பேரவை உறுப்பினர் அலுவலகம் அருகே புதிதாக 221 சிறிய கடைகள் கட்டி முடிக்கப்பட்டன.

இதன் தொடக்க விழா, பேரூராட்சித் தலைவர் விஜயலட்சுமி தனபால் தலைமையில் நடைபெற்றது. இந்த விழாவில், பேரூராட்சி துணைத் தலைவர் முகமது அப்பாஸ், கவுன்சிலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டனர். சுகாதார ஆய்வாளர் சடகோபி நன்றி கூறினார்.

### இலவச கால்நடை மருத்துவ முகாம்

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி அருகே

கிருங்காக்கோட்டையில் இலவச கால்நடை மருத்துவ முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

ஊராட்சித் தலைவர் ராசியப்பன் தலைமை தாங்கி முகாமை துவக்கி வைத்தார். முகாமுக்கு சேவுகா அரிமா சங்கச் செயலாளர் செல்வகுமார், பொருளாளர் செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் தலைவர் சந்திரசேகர் வரவேற்றார். முகாமில் கால்நடை மருத்துவர்கள் மோகன்ராஜ், தமிழரசி ஆகியோர் தலைமையில்

சிங்கம்புணரி மற்றும் பிரான்மலை கால்நடை மருத்துவக் குழுவினர் சிகிச்சை அளித்தனர். முகாமில் சுமார் 500 மாடுகளுக்கு தடுப்பூசியும், 350 ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் மற்றும் தடுப்பூசியும், 25 மாடுகளுக்கு செயற்கை முறை கருவூட்டலும் செய்யப்பட்டது.

மருத்துவ முகாமில் சிறந்த 10 கிடேரி கன்றுகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. முகாமில் சேவுகா அரிமா சங்க நிர்வாகிகள் கணேஷ்குமார், ஜெயக்குமார், ரவீந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டானர். முகாமுக்கான ஏற்பாடுகளை தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் சிங்கம்புணரி சேவுகா அரிமா சங்கம் ஆகியோர் இணைந்து செய்திருந்தனர்.

### வறட்சி நிவாரண நிதி வழங்குவதில் கோவை மாவட்டம் புறக்கணிப்பு

வறட்சி நிவாரண நிதி வழங்குவதில் கோவை மாவட்டம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக குறைதீர்க் கூட்டத்தில் விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

பொள்ளாச்சி சார் ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது.

சார் ஆட்சியரின் நேர்முக உதவியாளர் சக்திவேல் தலைமை வகித்தார். பி.ஏ.பி. திட்டக்குழுத் தலைவர் பரமசிவம், ஆழியாறு பாசன சபைத் தலைவர் சின்னச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக் கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

ஆறுமுகம்: மத்திய அரசின் 100 நாட்கள் வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் ஊராட்சிகளில் வேலை இல்லாமல் தொழிலாளர்கள் சாலையோரத்தில் படுத்துறங்கும் நிலை உள்ளது. அண்டை மாநிலமான கேரளத்தில் ஊராட்சிகளில் வேலை இல்லாதபோது, மத்திய அரசின் 100 நாட்கள் வேலை உறுதியளிப்புத் திட்டப் பணியாளர்கள் விவசாயப் பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

இதனால், அரசு நிதி வீணாவது தவிர்க்கப்படுகிறது. தமிழகத்திலும் இதேபோன்று மத்திய அரசின் 100 நாட்கள் வேலை உறுதியளிப்புத் திட்டத்தை விவசாயப் பணிகளில் இணைக்க வேண்டும்.

நல்லப்பன்: வறட்சி நிவாரண நிதி அனைத்து மாவட்டங்களிலும் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், கோவை மாவட்டம் மட்டும் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

மனோகர்: பி.ஏ.பி. திட்டத்தில் வெள்ளாளபாளையம் கிளைக் கால்வாயில் தண்ணீர் திருடப்படுகிறது. அதிகாரிகள் இதைக் கண்டுகொள்வதில்லை.

நல்லமுத்து: பொள்ளாச்சி சுற்றுப் பகுதிகளில் தென்னை மரங்களில் நோய்த் தாக்குதல் அதிகமாக உள்ளது.

சார் ஆட்சியரின் நேர்முக உதவியாளர்: அனைத்துக் குறைகளின் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

### மாட்டுச்சந்தைக்கு வெளிமாநில வியாபாரிகள் வருகை குறைவு

ஈரோடு கருங்கல்பாளையம் மாட்டுச் சந்தைக்கு வெளிமாநில வியாபாரிகள் வருகை வியாழக்கிழமை குறைந்தது.

வாரந்தோறும் வியாழக்கிழமை நடைபெறும் இச்சந்தையில் மாடுகள், எருமைகளை விற்பனை செய்ய ஈரோடு, நாமக்கல், சேலம், தருமபுரி, கரூர், திண்டுக்கல், திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் வருகின்றனர். இவற்றை கொள்முதல் செய்ய தமிழகம் மட்டுமன்றி, கேரளம், ஆந்திரம், கர்நாடக வியாபாரிகளும் வருவது வழக்கம்.

கடந்த மாதம் வரை தீவனப் பற்றாக்குறை காரணமாக மாடுகள், எருமைகளை விவசாயிகள் விற்பனை செய்ய ஆர்வம் காட்டினர். ஆனால், சில வாரங்களுக்கு முன்பு பெய்த மழை காரணமாக ஆங்காங்கே புல்கள் முளைத்துவிட்டதால், தீவனம் எளிதாகக் கிடைக்கிறது. இதனால் மாடுகளை விற்பனை செய்ய விவசாயிகளிடம் ஆர்வம் குறைந்துவிட்டது.

இதனால், மாட்டுச்சந்தைக்கு விற்பனைக்காகக் கொண்டுவரப்படும் மாடுகள், எருமைகளின் எண்ணிக்கை குறைந்துக் கொண்டே வருகின்றன. ஆந்திராவில் நடைபெறும் தெலுங்கானா, சீமாந்திரா போராட்டம் காரணமாக அங்கிருந்து வரும் வியாபாரிகள் எண்ணிக்கை முற்றிலும் குறைந்துவிட்டது.

கேரள, கர்நாடக வியாபாரிகளும் குறைந்த எண்ணிக்கையில்தான் ஈரோடு சந்தைக்கு வந்தனர். இந்த வாரம் 350 பசுமாடுகளும், 300 எருமைகளும் விற்பனை வந்தன. சந்தைக்கு கொண்டுவரப்பட்ட 90 சதவீத மாடுகள், எருமைகள் விற்பனை செய்யப்பட்டன. பசு மாடு ரூ.18,000 முதல் ரூ.32,000 வரையும், எருமைகள் ரூ.16,000 முதல் ரூ.33,000 வரையும் விற்பனை ஆனதாக சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.

### பவானிசாகர் அணை நீர்மட்டம்

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 78.70 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 2,074 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,300 கன அடி நீரும், வாய்க்காலில் 2,560 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர்இருப்பு 15 டி.எம்.சி.

### உத்திரகாவேரி ஆற்றுப் பாலம்: எம்எல்ஏ ஆய்வு

மாதனூர் ஊராட்சி ஒன்றியம் உத்திரகாவேரி ஆற்றின் குறுக்கே ரூ.30 லட்சம் செலவில் கட்டப்பட்டு வரும் பாலத்தின் கட்டுமானப் பணியை ஆம்பூர் தொகுதி எம்எல்ஏ அ.அஸ்லம் பாஷா அண்மையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆம்பூர் சட்டப்பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் மாதனூர் ஊராட்சி ஒன்றியம் ராமநாயினிகுப்பம் ஊராட்சி நெடுமிபாளையம் கிராமத்தில் உத்திரகாவேரி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டப்பட்டு வரப்படுகிறது. அப்பணியை எம்எல்ஏ அ.அஸ்லம் பாஷா ஆய்வு செய்தார். அதிமுக மாதனூர் ஒன்றியச் செயலர் ஜோதி ராமலிங்கராஜா, ஆம்பூர் தொகுதி செயலர் அகரம்சேரி ஆர்.வெங்கடேசன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் அன்பரசன், மாதனூர் ஒன்றியக்குழு உறுப்பினர்கள் ஜெய்சங்கர், கருணாமூர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.

### திருந்திய நெல் சாகுபடி வயலில் வேளாண் அதிகாரிகள் ஆய்வு

வெம்பாக்கம் வட்டார வேளாண்மை மையம் சார்பில் திருந்திய நெல் சாகுபடி செய்யப்பட்ட வயலில் வேளாண் அதிகாரிகள் புதன்கிழமை ஆய்வு மேற்கொண்டனர்.

வடமணப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி கே.கிருஷ்ணனின் நிலத்தில் பயிர் செய்திருந்த திருந்திய நெல் சாகுபடி முறையை வேளாண்மை துணை இயக்குநர் சு.கிருஷ்ணராஜ் பார்வையிட்டார்.

பின்னர் நெல் வயலில் செயல் விளக்கத்தினை அமைத்தல், மானியத்தோடு கூடிய திட்டம் குறித்தும், திருந்திய நெல்சாகுபடி முறையில் பயிர் செய்வதனால் வேளாண்மை துறையின் வழங்கப்படும் மான்யம் மற்றும் உயர்விளைச்சல் குறித்து தெரிவித்தார். வேளாண்மை உதவி இயக்குநர் கோ.பாண்டியன், வட்டார தொழில்நுட்ப மேலாளர் ச.சிவசங்கர், தொழில்நுட்ப வல்லுநர் மு.பழனி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### சித்தேரியில் பணப் பயிர்கள் சாகுபடி செய்ய நடவடிக்கை

தருமபுரி மாவட்டம், சித்தேரி மற்றும் சுற்றுப் பகுதிகளில் பணப் பயிர்கள் சாகுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் தெரிவித்தார்.

தருமபுரி மாவட்டத்தில் வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை, வேளாண் பொறியியல் துறை, பட்டு வளர்ச்சித் துறை உள்ளிட்ட விவசாயிகள் தொடர்புடைய துறைகளின் செயலாக்கத்தை மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் வியாழக்கிழமை பார்வையிட்டார்.

அப்போது அவர் கூறியது:

தருமபுரி மாவட்டத்தில் வேளாண் தொடர்புடைய அனைத்துத் துறைகளிலும் பல்வேறு திட்டங்களின் கீழ் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில் 200 விவசாயிகள் குழுக்கள் உள்ளன. நபார்டு வங்கியின் மூலம் அனைத்துத் துறை திட்டங்கள் மற்றும் செயலாக்கம் குறித்து நடைபெற உள்ள கருத்தரங்கில் இந்த விவசாயிகள் பங்கேற்க அழைக்கப்படுவர்.

மேலும், பட்டு வளர்ச்சித் துறையில் மண்ணிலிருந்து பட்டு வரை என்கிற அடிப்படையில் இந்தத் துறையில் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் குறித்து விளக்கப்பட உள்ளது. இதன் மூலம் பட்டுத் தொழிலை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அவர்களுக்கு பயிற்சி மற்றும் திட்டங்கள் விளக்கப்பட உள்ளது. பட்டு நெசவுக்கான இயந்திரங்களை வாங்குவதற்கு கடனுதவி வழங்கப்படும்.

சித்தேரியில் வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் 17 இடங்களில் ரூ.50 லட்சம் மதிப்பில் கிணறுகள் வெட்ட்டப்பட்டுள்ளது. இதனை ஒருங்கிணைத்து பணப் பயிர்கள் பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது.

ஒகேனக்கல்லில் ஒருங்கிணைந்த சுற்றுலாத் திட்டத்தின் கீழ் மூலிகைத் தோட்டம் வளர்த்தல், அழியும் நிலையில் உள்ள பயிர்வகைகளை காத்திடும் வகையில் தோட்டம் அமைத்தல், காவிரிப் பூங்கா அமைத்தல் ஆகியவை செயல்படுத்தப்பட உள்ளது.

மேலும், இந்த மாவட்டத்தில் உற்பத்தியாகும் சாமை உள்ளிட்ட தினை வகைகள், பயிறு வகைகள், நறுமணத் தைலங்கள் ஆகியவற்றை மதிப்புக் கூட்டி சந்தைப்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்தார் மாவட்ட ஆட்சியர்.

அப்போது, வேளாண்மைத் துறையின் துணை இயக்குநர்கள் பி.வேணுகோபால், மாது, பெருமாள், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் க.கலைச்செல்வி, வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் கே.முருகேசன், பட்டு வளர்ச்சித் துறையின் மண்ட இணை இயக்குநர் வி.பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### விளைச்சல் அதிகரிப்பால் பூக்கள் விலை கடும் சரிவு

தருமபுரி மாவட்டத்தில் பூக்களின் விளைச்சல் அமோகமாக இருப்பதால் விலையில் கடும் சரிவு காணப்படுகிறது. 100 எண்ணிக்கை ரோஜா பூக்கள் ரூ.20-க்கு கிடைக்கிறது.

தருமபுரி மாவட்டத்தில் பாலக்கோடு வட்டத்துக்குள்பட்ட போலம்பட்டி, கோவிலூர், சுண்ணாம்பட்டி, புலிக்கரை, சோமனஹள்ளி, காமலாபுரம், ராமியம்பட்டி உள்பட சுற்றுப்புற கிராமங்களில் சுமார் 500 ஏக்கர் பரப்பளவில் பூக்கள் பயிரிடப்படுகின்றன.

ஆண்டு முழுவதும் விளைச்சல் கிடைக்கும் பூக்களை விளைவிப்பதற்கு தண்ணீர் அதிகளவில் தேவைப்படுகிறது. இங்குள்ள கிராமங்களில் கிணற்றுப் பாசனம் மற்றும் மழையை நம்பிதான் பூக்கள் விளைவிக்கப்படுகின்றன.

கிராமப்புறப் பகுதிகளில் ரோஸ், பட்டன் ரோஸ், செண்டு மல்லி, சம்பங்கி ரகம் அதிகளவில் பயிரிடப்பட்டு வருகிறது. தினந்தோறும் அதிகாலையில் பறிக்கப்படும் பூக்கள் தருமபுரியில் உள்ள கமிஷன் மண்டிக்கு விற்பனைக்கு கொண்டு வரப்பட்டு ஏலம் விடப்படுகிறது.

கடந்த மாதம் வரையில் கிணற்றுப் பாசனத்தை நம்பி பூக்கள் பயிரிடப்பட்டதால் எதிர்பார்த்த அளவில் விளைச்சல் கிடைக்கவில்லை. மேலும், முகூர்த்த சீசன், கோயில் திருவிழாவால் பூக்களின் விலை அதிகரித்து காணப்பட்டது. சில நாள்களாக கிராமப்புறங்களில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் அதிகளவில் மழை பெய்ததால் விளைச்சல் இரண்டு மடங்கு அதிகரித்து கமிஷன் மண்டிக்கு பூக்கள் வரத்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

வியாழக்கிழமை காலை நிலவரப்படி 100 ரோஸ் பூ ரூ.20-க்கும், பட்டன் ரோஸ் கிலோ ரூ.30-க்கும், சம்பங்கி ரூ.40-க்கும், செண்டு மல்லி ரூ.10-க்கும் விலை போனதால் விவசாயிகளின் வருவாய் கணிசமாகக் குறைந்தது.

இதுகுறித்து பூமாண்டஹள்ளி ஊராட்சிக்குள்பட்ட போலம்பட்டியைச் சேர்ந்த விவசாயி தீ.சிவசக்தி கூறியது:

சொட்டுநீர்ப் பாசனம் அமைத்தால் ஓர் ஏக்கருக்கான செலவை அரசு மானியமாக வழங்குவதால், இங்குள்ள விவசாயிகள் அனைவரும் சொட்டுநீர்ப் பாசனம் முறையில் பூக்கள் பயிரிட்டு வருகிறோம். தற்போது, மழை அதிகம் பெய்து மகசூல் அதிகரித்துள்ளதால் எதிர்பார்த்ததை விட விலை குறைந்துள்ளது. அடுத்து வரும் திருமண சீசன் போது விலை அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றார் அவர்.

### காவிரி நீரை பள்ளாபாளையம் ஏரியில் நிரப்பக் கோரிக்கை

பரமத்தி வேலூர் வட்டம், ஜேடர்பாளையம் அருகே உள்ள பள்ளாபாளையம் ஏரியை, காவிரியில் இருந்து வீணாகச் செல்லும் தண்ணீரால் நிரப்பி, விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும், பறவைகளுக்கும் உதவிட வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பள்ளாபாளையம் ஏரி சுமார் 100 ஏக்கருக்கு மேல் பரபப்பளவைக் கொண்டுள்ளது. அதிக மழை பெய்யும் காலங்களில் மட்டும் இந்த ஏரி நிரம்புவதாகவும், அதுபோன்ற நேரங்களில் உள்நாட்டு, வெளி நாட்டுப் பறவைகள் ஏராளமாக வந்து செல்வதாகவும், இந்த ஏரியில் மீன் வளர்ப்பு மூலம் ஏலம் விடப்படும் தொகை அரசுக்கு பெரும் வருவாயாக இருந்ததாகவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

ஆனால், தற்போது அதிக அளவில் மழை இல்லாத காரணத்தால் இந்த ஏரி சிறிய குட்டை போல காட்சியளித்து வருகிறது. பள்ளாபாளையம் ஏரியில் இருந்து ஜேடர்பாளையம் படுகை அணைக்கு சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. ஜேடர்பாளையம் படுகை அணையில் இருந்து ராட்சத மின் மோட்டார்கள் மூலம் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள ராசிபுரம், நாமக்கல், எலச்சிபாளையம், பட்டணம் உள்ளிட்ட 8 ஒன்றியங்களில் 1081 கிராமங்களைச் சேர்ந்த குடியிருப்புகளுக்கு தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

குடிநீர்த் தேவையைப் பொறுத்து 6 ராட்சத மின் மோட்டார்கள் மூலம் தண்ணீர் எடுப்பதற்கான வசதிகள் இந்த நீர் உந்து நிலையத்தில் செய்யப்பட்டுள்ளன. இந்தப் பகுதிகளுக்கு அதிக அளவில் தண்ணீர் தேவை இல்லாத நேரங்களில் 2 முதல் 4 மோட்டார்கள் மட்டும் 24 மணி நேரமும் இயக்கப்பட்டு, குடிநீர் எடுக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

குடிநீரின் தேவைகள் அதிகம் இல்லாத நேரத்தில் 175 குதிரைத் திறன் கொண்ட 2 மோட்டார்கள் மூலம் இந்த ஏரிக்கு காவிரித் தண்ணீரைக் கொண்டு வந்து நிரப்ப வேண்டும். இதனால், நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து, இந்தப் பகுதியில் உள்ள பெரும்பகுதி விளை நிலங்கள் பயன்பெறும்.

மேலும், கிணறுகளும், ஆழ்துளைக் கிணறுகளும் நிரம்ப வாய்ப்புள்ளது. இந்த ஏரியில் மீன் பிடித் தொழில் மூலம் மீனவர்களுக்கும், அரசுக்கும் கணிசமான வருவாய்க் கிடைக்க வாய்ப்புள்ளது.

மீண்டும் இந்தப் பகுதிக்கு உள்நாடு மற்றும் வெளிநாட்டுப் பறவைகள் வந்து செல்வதற்கும் வசதியாக இருக்கும் என்று அந்தப் பகுதி மக்களும், விவசாயிகளும் தெரிவித்தனர்.

எனவே, தமிழக அரசும், மாவட்ட நிர்வாகமும் ஏரியைத் தூர்வாறி, காவிரி நீர் மூலம் நிரப்புவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

## முட்டை விலை தொடர்ந்து சரிவு

புரட்டாசி மாதத்தையடுத்து, தமிழகத்தில் முட்டை விற்பனை 20 சதவீதம் பாதிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, முட்டை கொள்முதல் விலையும் தொடர்ந்து சரிந்து வருகிறது.

நிகழாண்டு புரட்டாசி மாதம் கடந்த 17-ஆம் தேதி தொடங்கியதை அடுத்து, தமிழகம் முழுவதும் முட்டை விற்பனை வெகுவாகக் குறைந்தது.

கடந்த 19-ஆம் தேதி ரூ.3.35-ஆக இருந்த முட்டைப் பண்ணைக் கொள்முதல் விலை 23-ஆம் தேதி 10 காசுகள் குறைக்கப்பட்டு ரூ.3.25ஆக நிர்ணயிக்கப்பட்டது.

தொடர்ந்து, வியாழக்கிழமை மேலும் 10 காசுகள் குறைக்கப்பட்டு, ரூ.3.15ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

புரட்டாசி மாதம் முடிய இன்னும் 3 வாரங்கள் இருப்பதால், முட்டை கொள்முதல் விலையில் மேலும் சரிவு ஏற்படக் கூடும் என்று நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்தது.

கடுமையான தீவன விலையேற்றத்துக்கு மத்தியில் முட்டை கொள்முதல் விலை தொடர்ந்து குறைந்து வருவதால், உற்பத்தியாளர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் கூறியது:

புரட்டாசியைத் தொடர்ந்து விஜயதசமி, நவராத்திரி பண்டிகைகள் வருவதால், முட்டை விற்பனை உயர்வதற்கான வாய்ப்பு இல்லை. முட்டை வியாபாரிகள் வழக்கமாக ஒரு வாரத்துக்குத் தேவையான முட்டைகளை கொள்முதல் செய்வர்.

ஆனால், பண்டிகைகள் காரணமாக தினமும் தேவையான அளவு மட்டுமே கொள்முதல் செய்கின்றனர். இதனால், பண்ணைகளில் முட்டைகள் தேங்கும் நிலை உள்ளது என்றனர் அவர்கள்.

பிற மண்டலங்களில் முட்டை விலை நிலவரம்: சென்னை-ரூ.3.28, பெங்களூரு ரூ.3.20, மைசூரு-ரூ.3.22, ஹைதராபாத்-ரூ.3.08, மும்பை-ரூ.3.40, விஜயவாடா-ரூ.3.17, கொல்கத்தா-ரூ.3.57, பர்வாலா-ரூ.3.05, தில்லி-ரூ.3.19.

## உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை விளக்கி மரத்தடி பிரசாரம்

உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை விளக்கி தெருமுனை பிரசாரம் மற்றும் மரத்தடி பிரசாரம் மேற்கொள்ள மாவட்டக் காங்கிரஸ் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

நாமக்கல் மாவட்டக் காங்கிரஸ் குழுக் கூட்டம் அந்தக் கட்சியின் மாவட்டத் தலைவர் ஜி.ஆர்.சுப்பிரமணியம் தலைமையில் நாமக்கல்லில் வியாழக்கிழமை நடைபெற்றது. மாவட்டம் முழுவதும் வாக்குச்சாவடி தோறும் 5 பேர் நியமித்து பூத் கமிட்டி அமைத்திடவும், அவை குறித்து 30-ஆம் தேதிக்குள் மாவட்டக் காங்கிரஸ் கூட்டத்தில் தெரிவிக்கவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து, உணவு பாதுகாப்புச் சட்டத்தை நிறைவேற்றியதற்காக மத்திய அரசுக்கு வரவேற்பு தெரிவிக்கப்பட்டதுடன், இந்தச் சட்டத்தின் சிறப்புகள் குறித்து மாவட்டம் முழுவதும் தெருமுனை பிரசாரம், மரத்தடி பிரசாரம் மேற்கொள்வது, மகாத்மா காந்தி

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் மத்திய அரசு நிர்ணயித்துள்ள தினக் கூலியைப் பிடித்தம் செய்யாமல் மாநில அரசு தொழிலாளர்களுக்கு வழங்கிடவும் வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாவட்ட துணைத் தலைவர் புள்ளியப்பன், சேந்தைதங்கம், நடேசன், மாவட்டச் செயலர் சதீஸ்குமார், மாவட்ட வழக்குரைஞர் பிரிவு தலைவர் தனபால், துணைத் தலைவர் ராஜ்குமார், மாவட்டப் பொருளாளர் பொன்னுச்சாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## எரிபூச்சிகள் தாக்கிய தென்னைகளுக்கு மருந்து தெளிப்பு

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் எரி பூச்சிகள் தாக்கிய தென்னை மரங்களுக்கு வேளாண் துறை சார்பில் மருந்து தெளிக்கப்பட்டது.

காவேரிப்பட்டணம் ஒன்றியம், பென்றஅள்ளி மற்றும் மஞ்சமேடு கிராமங்களில் சுமார் 250 ஏக்கர் பரப்பளவில் உள்ள 8288 தென்னை மரங்கள் நத்தைப் புழுக்கள் (எரி பூச்சிகள்) எனும் புதிய வகை புழுக்களின் தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த புழுக்கள் பச்சை கலந்த மஞ்சள் நிறம், வெள்ளைக் கோடுகளுடன் 4 வரிசை ரோமங்களுடன், ரோமங்களின் நுனி சிவப்பு அல்லது கருப்பு நிறுத்துடன் காணப்படும். இந்த நத்தைப் புழுக்கள் தென்னை ஓலைகளைச் சுரண்டியும், கடித்தும் சாப்பிட்டு மிகப் பெரிய சேதத்தை உருவாக்கி, இதன்மூலம் மரங்கள் காய்ந்து காணப்படுகின்றன.

இதனால், பச்சையம் முழுவதும் சுரண்டப்பட்டு மரத்தின் வளர்ச்சி குன்றி, விளைச்சல் முழுவதும் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், வியாழக்கிழமை கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் தலைமையில் வேளாண்மை இணை இயக்குநர் ராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சுமதி, காவேரிப்பட்டணம் வேளாண்மை உதவி இயக்குநர் ராஜேந்திரன், வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) பச்சையப்பன், பையூர் மண்டல ஆராய்ச்சி நிலைய தலைவர் புத்தர் மற்றும் வேளாண்மை உதவி அலுவலர்கள் குழு பாதிக்கப்பட்ட தென்னை மரங்களைப் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இதில் மரங்களுக்கு தெளிக்க வேண்டிய மருந்துக் குறிப்புகள் அடங்கிய விழிப்புணர்வுக் கையேடு வழங்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து, தென்னை மரங்களுக்கு 5 டிராக்டர்கள் மூலம் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மவுண்டட் தெளிப்பானை கொண்டு மரங்களுக்கு மருந்து

தெளிக்கப்பட்டது.

### பாசனத்துக்கு நீர் கேட்டு மறியல்

நாகை மாவட்டம்,தலைஞாயிறு அருகே கருகும் நெல் பயிர்களைக் காப்பாற்ற பாசன ஆறுகளில் தண்ணீர் அளிக்க வலியுறுத்தி விவசாயிகள் வியாழக்கிழமை சாலை மறியலில் ஈடுபட்டனர்.

காவிரி படுகை வெண்ணாறு கோட்டத்திலிருந்து பல்லவராயன் ஆறு,அய்யூரான் வாய்க்கால்,பெட்டையாறு போன்ற ஆறுகள் மூலம் பாசனம் பெறும் உத்திரங்குடி உள்ளிட்ட 35 -க்கும் மேற்பட்ட கிராமங்களில் நிகழ்பருவத்தில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வறண்ட வானிலை நீடித்துவரும் நிலையில், ஆற்றில் போதியளவு தண்ணீர் இல்லாததால் பயிர்கள் கருகும் அபாயம் உள்ளது. இந்நிலையில்,ஆற்றில் போதிய அளவு தண்ணீர் திறந்துவிட வலியுறுத்தி இந்த மறியலில் ஈடுபட்டனர்.

தகவலறிந்த பொதுப்பணித் துறை வெண்ணாறு கோட்ட உதவிச் செயற்பொறியாளர் சிதம்பரநாதன்,உதவிப் பொறியாளர் பார்த்தசாரதி,திருக்குவளை துணை வட்டாட்சியர் உள்ளிட்டோர் நடத்திய பேச்சுவார்த்தையில் மறியல் விலக்கிக் கொள்ளப்பட்டது.

இதில் திமுக விவசாயத் தொழிலாளர் அணி நாகை மாவட்ட துணைத் தலைவர் சுபாஷ்சந்திரபோஸ்,சிபிஎம் திருவாரூர் மாவட்ட செயலர் நாகராசன்,பல்வேறு விவசாயிகள் சங்க அமைப்பு நிர்வாகிகள் இடும்பையன்,நாகேந்திரன்,

பிரகாஷ்,கோவிந்தராஜ்,சௌந்தரராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இந்த மறியலால் சுமார் 1 மணி நேரத்துக்கு மேல் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

### பயிர்க் கடன் தர வங்கிகள் மறுப்பு

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் பயிர்க்கடன் தர மறுப்பு தெரிவிப்பதால், கடன் வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென விவசாயிகள் வலியுறுத்தினர்.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட வருவாய் அலுவலர் எம்.ஏ. சுப்பிரமணியன் தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் பங்கேற்ற பாமாயில் உற்பத்தி சங்கத் தலைவர் முருகேசன் பேசியது:

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள கிராமங்களில், மாவட்ட நிர்வாகம் சார்பில் கடன் வழங்கும் முகாம்கள் நடத்தப்பட்டன. இதில் அனைத்து வங்கியாளர்களும் பங்கேற்று, விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்களை பெற்றனர். ஆனால், இதுவரை விண்ணப்பித்த விவசாயிகளுக்கு கடன் வழங்கவில்லை. இதுதொடர்பாக வங்கியாளர்களை

அணுகினால், முறையான பதில் அளிக்காமல் விவசாயிகள் அலைக்கழிக்கப்படுகின்றனர் என்றார்.

தமிழக விவசாயிகள் சங்க மாநிலச்செயலர் ஆர். ராஜாசிதம்பரம் பேசியது: வெங்காய குளிர்பதனக் கிடங்கு கட்டி இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகியும், அதனை செயல்பாட்டிற்கு கொண்டுவரவில்லை. இது குறித்து சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் முறையிட்டால், மின்வாரிய அலுவலர்களால் காலதாமதம் ஆகிறது என கூறுகின்றனர். அதனை விரைவில் பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும்.

கடந்த ஆண்டு, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாயிகள் பெற்ற கடனை திரும்ப செலுத்திய பிறகும், நிகழாண்டு விவசாயிகளுக்கு கடன் வழங்க வங்கியாளர்கள் மறுப்பு தெரிவிக்கின்றனர். எனவே, கூட்டுறவு சங்கங்கள் மற்றும் வங்கிகளில் கடன் வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் என். செல்லதுரை பேசியது: விவசாயிகளுக்கு வழங்கப்படும் பயிர்க்கடன் அறிவிப்பாக மட்டுமே உள்ளது. இப்பிரச்னையில் மாவட்ட நிர்வாகம் கவனம் செலுத்த வேண்டும். கூட்டத்தில், வேளாண்மை துணை இயக்குநர் ஆல்பிரட், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) இரா. கனகசபை, மின்வாரிய செயற்பொறியாளர் வளர்மதி, தோட்டக்கலை துணை இயக்குநர் (பொ) இந்திரா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### செப். 30 வரை வானிலை பயிர்க் காப்பீட்டு திட்டத்தில் சேரலாம்

பெரம்பலூர் மாவட்டத்தில் மக்காச்சோளம்- 3 சாகுபடி செய்துள்ள விவசாயிகள், செப். 30-ம் தேதி வரை வானிலை பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் சேரலாம் என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் மாவட்டத்தில், சோழமண்டலம் பொது காப்பீட்டு நிறுவனம் வானிலை பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

இந்தத் திட்டத்தில் நடப்பு காரீப் பருவத்தில் பயிர்களுக்கு ஏற்ப அதிகம் மற்றும் குறைவான மழை, தொடர்ச்சியான வறட்சி மூலம் பயிர் பாதிக்கப்பட்டு மிகக் குறைவான மகசூல்

பெற்றால், விவசாயிகள் காப்பீட்டுத் தொகை பெற்றுக்கொள்ளலாம்.

எனவே, பாதிப்புதரும் இயற்கை சீற்றங்களிடமிருந்து காத்துக்கொள்ள வானிலை பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் காப்பீடு செய்து விவசாயிகள் பயன்பெறலாம்.

இந்தத் திட்டத்தில், குத்தகைதாரர் உள்பட அனைத்து விவசாயிகளும் பயன்பெறலாம். மானாவாரி மக்காச்சோளம்- 3 பயிரிட்டுள்ள விவசாயிகள் காப்பீட்டுத் தொகையான ரூ. 8 ஆயிரத்திற்கு, பிரிமியமாக ரூ. 200-ஐ செப். 30-ம் தேதிக்குள் செலுத்த வேண்டும்.

இந்தத் திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் விதைத்த ஒரு மாதத்திற்குள் அல்லது காப்பீடு நிறுவனம் நிர்ணயம் செய்த கடைசி தேதிக்குள் உரிய

படிவத்தை நிறைவு செய்து, இட்ர்ப்ஹம்ஹய்க்ஹப்ஹம் ஙந எங்ய்ங்ழ்ஹப் ஐய்ள்ன்ழ்ஹய்ஸ்ரீங் இர்ம்ல்ஹய்ஹ் கண்ம்ண்ற்ங்க் ல்ஹஹ்ஹக்ஷப்ங் ஹற் இட்ங்ய்ய்ஹண்

என்ற பெயருக்கு பிரிமியத்தை காசோலையாக அளிக்க வேண்டும்.

கடன் பெறாத விவசாயிகள் வேளாண்மை விரிவாக்க மையம், கடன் பெறும் விவசாயிகள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி கிளை அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கியை அணுகி பயன்பெறலாம்.

திட்டத்தில் சேரும் விவசாயிகள், தங்களது பெயரில் வங்கி சேமிப்பு கணக்கு, புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டையின் நகல் மற்றும் சிட்டா நகலுடன் விண்ணப்பிக்கலாம்.

இதுதொடர்பான விவரங்களுக்கு, வட்டார வேளாண்மை உதவி இயக்குநர்களை பெரம்பலூர் 90470 72766, ஆலத்தூர் 90470 72764, வேப்பூர் 90470 72763, வேப்பந்தட்டை 90470 72768 ஆகிய செல்போன் எண்களிலும், சோழமண்டல பொதுக்காப்பீடு நிறுவன அலுவலரை 89396 12974, வேளாண்மை

அலுவலர்களை பெரம்பலூர் 81449 16148, வேப்பூர் 98438 52444, வேப்பந்தட்டை 94435 90920, ஆலத்தூர் 86083 88197, துணை வேளாண்மை அலுவலர்களை பெரம்பலூர் 76399 14464, வேப்பந்தட்டை 80981 93683, ஆலத்தூர் 99656 52046 ஆகிய செல்போன் எண்களிலும் தொடர்புகொள்ளலாம்.

### சம்பாவில் ஹெக்டேருக்கு 20 டன் நெல் மகசூல் தேவை: திருவாரூர் ஆட்சியர்

திருவாரூர் மாவட்டத்தில் விவசாயிகள் சம்பா சாகுபடியில் ஹெக்டே ருக்கு 20 டன் நெல் மகசூல் பெற உழைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார் மாவட்ட ஆட்சியர் சி. நடராசன்.

மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள சம்பா சாகுபடிகுறித்த விவரங்களை அறிந்து, விவசாயிகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனை வழங்கும் வகையில், புதன்கிழமை

பத்திரிகையாளர்களுடனான வேளாண் சுற்றுலாவுக்கு மாவட்ட நிர்வாகம் ஏற்பாடு செய்திருந்தது.

அதன்படி திருக்கரவாசல், பெரியக்குடியில் இயந்திர முறையில் நேரடி நெல் விதைப்பு வயல், கீராளத்தூர், ஆதிச்சக்குடியில் மனித உழைப்பு மூலம் நேரடி நெல் விதைப்பு வயல், நெடுவாக்கோட்டையில் திருந்திய நெல் சாகுபடி முறையில் செய்யப்பட்ட குறுவைப் பயிர், காரிக்கோட்டையில் இயந்திர முறையில் நெல் நடவு செய்ய நாற்றாங்கால் தயாரிப்பு இடம் மற்றும் இயந்திர நடவு பணி ஆகிய இடங்கள் பார்க்கப்பட்டன.

பயணத்தின்போது ஆட்சியர் சி. நடராசனிடம், திருத்தங்கூர் விவசாயிகள் தங்களது பகுதிக்கு தண்ணீர்த் தேவையென்றும், இப்பகுதிக்கு வரும் பாசன வாய்க்கால்கள் தூர்வார வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தனர்.

இதேபோல பெரியக்குடியில் விவசாயி பழனிவேல் அறுவடைக் காலங்களில் வேளாண்துறை சார்பில் கூடுதலாக இயந்திரங்கள், மண் சமன் செய்யும் இயந்திரங்கள் வழங்க வேண்டும். விவசாயிகள் குறித்த காலத்தில் நேரடி நெல் விதைப்பை மேற்கொண்டு அதிக மகசூல் பெறும் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்றார்.

அதற்கு ஆட்சியர், ஓரிரு நாட்களில் பாசனத்துக்கு பற்றாக்குறையின்றி தண்ணீர் கிடைத்துவிடும். நேரடி நெல்விதைப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் அடத்தியாகவுள்ள பயிர்களைப் பிடுங்கி வெற்று இடங்களில் நடவு செய்ய வேண்டும்.

சம்பாவுக்குத் தேவையான உரங்கள் கையிருப்பில் உள்ளன. விவசாயிகள் தங்களது சாகுபடி நிலத்தில் கால்வாய் ஓரங்களில் தென்னை மற்றும் தோட்டப் பயிர்களை வளர்த்துப் பயன் பெற வேண்டும் என்றார் அவர்.

மாவட்டத்தில் சம்பா சாகுடி செய்யவுள்ள 1.30 லட்சம் ஹெக்டேரில், 70,412 ஹெக்டேரில் நேரடி நெல் விதைப்புப் பணி செய்யப்பட்டுள்ளது. நேரடி நெல் விதைப்பு வயல்களில் முளைத்துள்ள களைகளை அகற்ற அரசு மானிய விலையில் களைக்கொல்லி மருந்து வழங்கி வருகிறது என்றார் அவர்.

வேளாண் இணை இயக்குர் அ. கணேசன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் க. மயில்வாகனன் ஆகியோர் உடனிருந்தனர்.

### ரப்பர் விலை தொடர் சரிவு

ரப்பர் விலை தொடர் சரிவால், கன்னியாகுமரி மாவட்ட ரப்பர் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டு வருகிறது.

கோட்டயம் சந்தையில் கடந்த வார இறுதியில், தரம்பிரிக்கப்படாத ரப்பர் விலை கிலோ ரூ. 174 ஆக இருந்தது. கடந்த சனிக்கிழமை முதல் ரப்பர் விலை தொடர்ந்து சரிந்து வருகிறது.

வியாழக்கிழமை கோட்டயம் சந்தையில் வர்த்தம் முடியும்போது, தரம்பிரிக்கப்படாத ரப்பர் விலை கிலோ ரூ. 157.50 ஆகக் குறைந்தது. மேலும், ஆர்எஸ்எஸ் 4 தர ரப்பர் விலை கிலோ ரூ. 172, ஆர்எஸ்எஸ் 5 தர ரப்பர் ரூ. 167, ஐஎஸ்என்ஆர் 20 ரப்பர் ரூ.165 ஆகவும் சரிந்தது.

இந்திய ரப்பர் சந்தை நிலவரம்போலவே சர்வதேச ரப்பர் சந்தைகளான பாங்காங், டோக்கியோ ஆகிய சந்தைகளிலும் ரப்பர் விலை குறைவாக இருப்பதாக ரப்பர் வணிகர்கள் தெரிவித்தனர்.

பாங்காங் சந்தையில் வியாழக்கிழமை நிலவரப்படி ஆர்எஸ்எஸ் 4 தர ரப்பர் விலை கிலோ ரூ. 162.72 ஆக இருந்தது. இது குறித்து குலசேகரத்தில் ரப்பர் விவசாயி ஒருவர் கூறும்போது, இப்போது கேரளத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் மழை சற்று தணிந்துள்ளது. இதனால் ரப்பர் பால்வடிப்பு மும்முரமாகி உற்பத்தி அதிகரித்து வருகிறது.

இந்நிலையில், விலையில் தொடர் சரிவு ஏற்பட்டுள்ளது. எனினும் முன்பேர வர்த்தக சூதாட்டம் காரணமாகவே வேகமான விலை சரிவுகள் ஏற்படுகின்றன. விலை சரிவால் ரப்பர் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றார்.

### பனைத் தொழிலாளர்களுக்குப் பயிற்சி

சாத்தான்குளம் அருகேயுள்ள ஆசீர்வாதபுரத்தில் புனித லூக்கா சி.டி.சி. சார்பில் பனைத் தொழிலாளர்களுக்கு பனையேறும் கருவி குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது.

இம்முகாமுக்கு திட்ட இயக்குநர் லேவி அசோக் சுந்தர்ராஜ் தலைமை வகித்தார். கோவை ஆசீர் டெக் நிறுவன ஒருங்கிணைப்பாளர் வெங்கட் பங்கேற்று, பனையேறும் கருவியை இயக்கும் முறை குறித்து செயல்முறை விளக்கம் அளித்தார்.

இதில், பேய்க்குளம், சாலைபுதூர், பழனியப்பபுரம், ஆசீர்வாதபுரம், மீரான்குளம், பனைக்குளம் உள்ளிட்ட பகுதியைச் சேர்ந்த தொழிலாளர்கள் பலர் பங்கேற்றனர். திட்ட ஒருங்கிணைப்பாளர் தாமஸ் கிருபாகரன் நன்றி கூறினார்.

### அரசுப் பொருள்காட்சியில் மண் பரிசோதனை : ஆட்சியர்

தூத்துக்குடியில் நடைபெற்றுவரும் அரசுப் பொருள்காட்சியில் வேளாண்மைத் துறை அரங்கில் விவசாயிகள் இலவசமாக மண்பரிசோதனை செய்து கொள்ளலாம் என ஆட்சியர் ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: தூத்துக்குடி வ.உ.சி. மைதானத்தில் அரசுப் பொருள்காட்சி கடந்த 20 நாள்களாக நடைபெற்று வருகிறது. இதனை 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பார்வையிட்டுள்ளனர். இந்த பொருள்காட்சியில் செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சமூகநலத் துறை, பள்ளி கல்வித் துறை, இந்து சமய அறநிலையத் துறை, காவல்துறை போன்ற 26-க்கும் மேற்பட்ட அரசுத் துறைகள், அரசின்

நலத்திட்டங்களால் பயன் அடைந்த மக்கள் குறித்து புகைப்படங்களை வைத்துள்ளன. விதவிதமான ராட்டினங்கள், பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்துள்ளன.

வேளாண்மைத் துறை சார்பில் வைக்கப்பட்டுள்ள அரங்கில் விவசாயிகள் தங்களுடைய நிலத்தின் மண்ணை எடுத்து வந்து பரிசோதனை செய்து கொள்ளலாம். நாள்தோறும் மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை பரிசோதனை செய்யப்படும். இதனை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் அவர்.

தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

## விவசாயக் குழுவில் விவசாயிகள் தேர்வு! மானியத்தில் வேளாண் கருவிகள்




மதுரை:தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், மதுரை மாவட்டத்தில் விவசாயக் கருவிகள் வழங்குவதற்கு, 2ம் முறையாக விவசாயிகள் தேர்வு செய்யப்பட உள்ளனர். சிறு, குறு விவசாயிகளுக்கு பயன்படும் வகையில், விவசாய பொறியியல் துறை மூலம், நூறு சதவீத மானியத்தில் விவசாயக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலும் முதற்கட்டமாக, நான்கு குழுக்கள் தேர்வு செய்யப்பட்டு, குழுவிற்கு ரூ.3.75 லட்சம் மதிப்புள்ள உழவுக்கருவி, நடவுக்கருவி, களையெடுக்கும் கருவிகள் இலவசமாக வழங்கப்பட்டன. மதுரையில், கிழக்கு ஒன்றியத்தில் அப்பன்திருப்பதி, மேற்கில் குலமங்கலம், அலங்காநல்லூரில் கொண்டையம்பட்டி, வாடிப்பட்டியில் சி.புதூர் பகுதி விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டனர். நான்கு குழுக்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, சொசைட்டியாக பதிவு செய்யப்பட்டது. பெயரைப் பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு, குறைந்த கட்டணத்தில் விவசாயக் கருவிகள் வாடகைக்கு வழங்கப்படுகின்றன. சங்கத் தலைவர் அருள் பிரகாசம் கூறியதாவது: விவசாயிகள் அனைத்து கருவிகளையும் வாங்க முடியாது. இதுவரை 60 விவசாயிகள் உழவுக் கருவிகளை பயன்படுத்தியுள்ளனர். டீசலும், ஆப்பரேட்டருக்கு கட்டணம் கொடுப்பதோடு, மிகக்குறைந்த வாடகை வசூலிக்கிறோம். அதுவும் இக்கருவிகளை பராமரிப்பதற்கு ஆகும் செலவிற்காக தான். வேளாண் பொறியியல் துறை மூலம் கருவிகளை இயக்க பயிற்சி அளித்தால், மற்றவர்களை எதிர்பார்க்காமல் நாங்களே கையாள்வோம். எந்த இடத்தில் விதை நடுவது, களையெடுப்பது என்பதை இயந்திரங்களின் மூலம் கண்காணிப்போம், என்றார். பயிற்சி குறித்து, உதவி செயற்பொறியாளர் பெரியசாமி கூறுகையில், ""அக்., 7 முதல்,

கருவிகளை கையாள்வது குறித்து, விவசாயிகளுக்கு ஒரு வாரம் பயிற்சி அளிக்க உள்ளோம். இக்குழுக்கள் சிறப்பாக செயல்படுவதால், அடுத்த கட்டமாக நான்கு குழுக்கள் தேர்வு செய்யப்பட உள்ளன. விவசாயிகள் சொசைட்டியில் உறுப்பினராக பெயரை பதிவு செய்யலாம்," என்றார்.

## நெல் நாற்றங்காலில் குலைநோய் : கட்டுப்படுத்த அதிகாரி ஆலோசனை




வடலூர் : குறிஞ்சிப்பாடி பகுதியில் நெல் நாற்றங்காலில் குலை நோய், சாறு உறிஞ்சும் பூச்சி ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட பயிர்களை விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலைய நிபுணர்கள் ஆய்வு செய்தனர். குறிஞ்சிப்பாடி வட்டாரத்தில் சம்பா பருவத்தில் 5,000 எக்டேர் நெல் பயிரிடு பணிகள் தொடங்கியுள்ளது. இதற்கான நாற்றங்கால் விதைப்பு செய்யப்பட்டுள்ளது. ஒரு சில இடங்களில் இலைகளில் கண் வடிவத்தில் பழுப்பு நிற புள்ளிகள், இலை முழுவதும் மஞ்சள் நிறமாகி காணப்பட்டது. இது குறித்து விவசாயிகள் புகார் செய்ததைத் தொடர்ந்து. விருத்தாசலம் வேளாண்மை அறிவியல் நிலைய தாவர நோய் குறியீட்டு நிபுணர் சரவணன் பாதிக்கப்பட்ட பயிர்களை ஆய்வு செய்து விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினார். பின்னர் அவர் கூறுகையில், "கடந்த சில நாட்களாக மழை இல்லாததால் வெப்பத்தின் தாக்கம் அதிகளவு உள்ளது. இதனால் பயிரில் சாறு உறிஞ்சு பூச்சி அதிகரித்து உள்ளது. மேலும் கரும்புள்ளி நோய் அதிகரித்து, குலை நோய் தாக்கி பயிர்களின் இலைகளில் கண் வடிவத்தில் பழுப்பு நிற புள்ளிகள் தோன்றியுள்ளது. இவற்றை கட்டுப்படுத்த ட்ரைசைக்ளசோல் மருந்தினை 1 லி., தண்ணீருக்கு 1 கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும். சாறு உறிஞ்சு பூச்சுகளைக் கட்டுபடுத்த புரபெனோபாஸ் மருந்தினை 1 லி., தண்ணீருக்கு 2 மி.லி., என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும்' என்றார்.

## பருவமழையை பயன்படுத்தி விவசாயத்தை மேம்படுத்த திட்டம் : கோவையில் இன்று அமைச்சர், அதிகாரிகள் ஆலோசனை

வடகிழக்கு பருவமழையை பயன்படுத்தி, விவசாயத்தை மேம்படுத்துதற்கான திட்டங்களை முடிவு செய்ய, சென்னையில் நடக்க இருந்த கூட்டம், கடைசி நேரத்தில், கோவைக்கு மாற்றப்பட்டது. அந்த கூட்டம், இன்று நடக்கிறது. இதில், அமைச்சர் மற்றும் அதிகாரிகள் பங்கேற்கின்றனர். சம்பா நெல் சாகுபடி : கர்நாடகாவில், கொட்டிய தென்மேற்கு பருவமழையால், காவிரியில் இருந்து மேட்டூர் அணைக்கு தண்ணீர் கிடைத்தது. இதை பயன்படுத்தி, சம்பா நெல் சாகுபடி பணி தீவிரமாக நடந்து வருகிறது. அடுத்த மாதம், 20ம் தேதி முதல் வடகிழக்கு பருவமழை துவங்கும் என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்து உள்ளது. கடந்தாண்டு வறட்சியால் சாகுபடி பாதித்த நிலையில், வடகிழக்கு பருவமழை மூலம், மாநிலம் முழுவதும் சாகுபடி பரப்பு அதிகரிக்கும் என, வேளாண் துறை அதிகாரிகள் கணித்துள்ளனர். ஆனால், விதை நெல், தானியம் மற்றும் காய்கறி விதைகள், உர விலை உயர்வு மற்றும் கூலியாட்கள் பற்றாக்குறையால், சாகுபடி பரப்பு குறையும் அபாயமும் உள்ளது. மாவட்ட வேளாண் மற்றும் தோட்டக்கலை அதிகாரிகள் மூலம், உயர் அதிகாரிகளுக்கு, இத்தகவல் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இதையடுத்து, விவசாய மேம்பாட்டிற்கு செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் குறித்து ஆலோசனை நடத்த முடிவு செய்யப்பட்டது. இதற்காக, வேளாண் அமைச்சர் தாமோதரன், செயலர் சந்தீப் சக்சேனா, வேளாண் ஆணையர் ராஜேந்திரன், தோட்டக்கலைத் துறை ஆணையர் சத்யபிரதா சாகு உள்ளிட்டோர் பங்கேற்கும் முக்கிய ஆலோசனை கூட்டத்தை சென்னையில் நடத்த முடிவு செய்யப்பட்டது. கோவை வேளாண் பல்கலை இதில், அனைத்து மாவட்ட வேளாண் மற்றும் தோட்டக்கலைத்துறை அதிகாரிகளை அழைத்து, கருத்து கேட்கவும் திட்டமிடப்பட்டது. ஆனால், சென்னையில் நடத்துவதை விட, இக்கூட்டத்தை அமைச்சரின் சொந்த மாவட்டமான கோவையில் நடத்தினால், சிறப்பாக இருக்கும் என கருதப்பட்டது. இதையடுத்து, கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில், இக்கூட்டத்தை நடத்துவது என, கடைசி நேரத்தில் முடிவு செய்யப்பட்டது. இதுகுறித்த தகவல், அதிகாரிகளுக்கு உடனடியாக தெரிவிக்கப்பட்டது. அதன்படி, கோவையில் இன்று, விவசாய மேம்பாடு தொடர்பான கூட்டம் நடக்கிறது.
இது குறித்து, வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: இந்தாண்டு நெல் சாகுபடி, 48 லட்சம் ஏக்கர்; சிறு தானியங்கள், 26 லட்சம் ஏக்கர்; பயறு வகைகள், 25 லட்சம் ஏக்கர்; எண்ணெய் வித்துக்கள், 16 லட்சம் ஏக்கரில் மேற்கொள்ள, அரசு இலக்கு

நிர்ணயித்துள்ளது.

இயற்கை விவசாயம் : பருவமழையை பயன்படுத்தி, அரசின் உற்பத்தி இலக்கை எட்டுவது குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்படும். வேளாண் இயந்திரமயமாக்கல், இயற்கை விவசாயம், சூரிய மின் சக்தி மோட்டார் வழங்கும் திட்டம் குறித்தும் ஆலோசிக்கப்படும். வேளாண் பேராசிரியர்களின் கருத்தை அறிய, கோவையில் இக்கூட்டம் நடத்தப்படுகிறது. இவ்வாறு, அவர் கூறினார்.

## வாழை மரத்தின் நடுவில் "தார்'

ப.வேலூர்: ப.வேலூர் அருகே, வாழை மரத்தின் நடுவில், வாழைத்தார் தள்ளியதை, அப்பகுதி மக்கள் அதிசயமாக பார்த்துச் சென்றனர். ப.வேலூர் அடுத்த படமுடிபாளையத்தைச் சேர்ந்த விவசாயி ராஜேந்திரன், 35. அவர், தனது தோட்டத்தில் வாழை மரங்கள் சாகுபடி செய்துள்ளார். ஒரு ரஸ்தாளி மரத்தின் நடுவில், வாழைத்தார் தள்ளியது. இயற்கைக்கு மாறாக, தார் தள்ளியுள்ளதால், அப்பகுதி மக்கள் அதிசயமாக, அந்த மரத்தை பார்த்துச் செல்கின்றனர்.

## பயிர்களுக்கான காப்பீடு முகாம்

திருச்செங்கோடு: "நடப்பு காரீப் பருவத்தில், பயிர்களுக்கு, ஒரு ஏக்கருக்கு பிரீமிய தொகை, 808 ரூபாய் காப்பீடு செய்து பயன்பெறலாம்' என, திருச்செங்கோடு வேளாண் உதவி இயக்குனர் நமச்சிவாயம் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: திருச்செங்கோடு வட்டாரத்தில், நடப்பு காரீப் பருவத்தில், பயிர்களுக்கு காப்பீடு செய்து பயன்பெற காப்பீடு முகாம் நடக்கிறது. செப்டம்பர், 23ம் தேதி கருமாபுரம் கிராமத்துக்கு, கோழிக்கால்நத்தம் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்திலும், 25ம் தேதி, வட்டூர் கிராமத்துக்கு, வட்டூர் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்திலும், மேம்படுத்தப்பட்ட தேசிய வேளாண் பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ், நிலக்கடலை பயிருக்கு பயிர் காப்பீடு செய்ய முகாம் நடக்கிறது. இந்த சிறப்பு முகாமில், விவசாயிகள் கலந்து கொண்டு, ஒரு ஏக்கருக்கு பிரீமியத் தொகை, 808 ரூபாய் செலுத்தி, பயன்பெறலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பருவ மழை குறித்த ஆலோசனை கூட்டம்

தர்மபுரி: தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில், வடகிழக்கு பருவமழை முன் ஏற்பாடுகள் குறித்த ஆலோசனை கூட்டம் நடந்தது. டி.ஆர்.ஓ., ராமர் தலைமை வகித்தார். கலெக்டரின் நேர்முக உதவியார் (பொது) ரஹமத்துல்லாகான் வரவேற்றார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் வீரணன் முன்னிலை வகித்தார். கலெக்டர் விவேகானந்தன் பேசியதாவது: பருவமழையொட்டி, தர்மபுரி மாவட்டத்தில் உள்ள அனைத்து அலுவலர்களின் முகவரி மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய டெலிஃபோன் எண் மற்றும் மொபைல்ஃபோன் எண்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். முன் ஏற்பாடுகள் குறித்து, கோட்டம், வட்டார அளவில் ஆலோசனை கூட்டம் நடத்த வேண்டும். பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடம் தணிக்கும் வகையில் இயற்கை இடர்பாடுகளை உடனுக்குடன் மாவட்ட நிர்வாகத்துக்கு தெரிவிக்க வேண்டும். கலெக்டர் அலுவலத்தில் உள்ள கட்டுப்பாடு அறையில் உள்ள கட்டணம் இல்லாத டெலிஃபோன் எண், 1077ல், 24 மணி நேரம் தொடர்பு கொள்ளலாம். பொது மக்கள் கூடும் இடங்களில் இயற்கை இடர்பாடுகள் குறித்து, செயல்முறை விளக்கம் அளிக்க வேண்டும். மழையால் ஏரி மற்றும் நீர் தேக்கங்கள் நிரம்பி தண்ணீர் வெளியேறுவதை முன் கூட்டியே பொது மக்களுக்கு தெரிவிக்க வேண்டும். வெள்ளம் ஏற்படும் பகுதிகளில் தடுப்பு நடவடிக்கை எடுக்க மணல் மூட்டைகள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். மழைக்கு முன் கூட்டியே நீர் ஆதார பகுதி ஆக்கிரமிப்புகளை அகற்றிட வேண்டும். மழை நேரத்தில் மின் ஒயர்கள் கீழே விழுந்தால், உடனடியாக அகற்ற போதிய நடவடிக்கை எடுக்க வேண்டும். பருவமழையால் பாதிப்பு, பயிர் சேதம் ஆகியவற்றை உடனுக்குடன் எடுக்க வேண்டும்.இவ்வாறு பேசினார்.

## சாம்பல் பூசணிக்கு நல்ல விலை தர்மபுரி விவசாயிகள் எதிர்பார்ப்பு

தர்மபுரி: சாம்பல் பூசணி சாகுபடி குறைந்ததாலும், சாகுபடி செய்யப்பட்டுள்ள சாம்பல் பூசணி நன்கு விளைந்துள்ளதாலும், இந்தாண்டு ஆயுத பூஜை விற்பனையில், எதிர்பார்த்த லாபம் கிடைக்கும், என விவசாயிகள் தெரிவித்தனர். ஆயுதபூஜையையொட்டி, தர்மபுரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் சாம்பல் பூசணி, 500 ஏக்கருக்கு மேல் சாகுபடி செய்வது வழக்கம். ஆயுதபூஜை விற்பனைக்காக தர்மபுரி மாவட்டத்தில் இருந்து சேலம், கோவை, சென்னை போன்ற மாவட்டங்களுக்கும், தர்மபுரி மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் சாம்பல் பூசணி விற்பனைக்கு அனுப்புவது வழக்கம். இந்தாண்டு மாவட்டத்தில் எதிர்பார்த்த அளவு தென்கு மேற்கு பருவமழை பெய்யாததால்,

விவசாயிகள் சாம்பல் சாகுபடி பூசணியை, 300 ஏக்கருக்கும் குறைவாக நடவு செய்துள்ளனர். ஆயுத பூஜை துவங்க உள்ள நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன் பெய்த மழையின் காரணமாக சாம்பல் பூசணி தற்போது நன்கு வளர்ந்துள்ளது. இந்தாண்டு சாம்பல் பூசணி சாகுபடி குறைந்துள்ளதாலும், தற்போது சாம்பல் பூசணி நன்கு வளர்ந்துள்ளதாலும் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர். இது குறித்து குரும்பட்டியை சேர்ந்த விவசாயி ஒருவர் கூறியது; குறைந்த பாசன வசதியுள்ள இப்பகுதியில் ஆண்டு தோறும் விவசாயிகள் ஆயுதபூஜை விற்பனைக்காக, சாம்பல் பூசணியை சாகுபடி செய்வது வழக்கம். கடந்தாண்டு சாம்பல் பூசணி உற்பத்தி அதிகரித்ததால் வியாபாரிகள், ஒரு சாம்பல் பூசணியை, 5 ரூபாய் வரை மட்டும் வாங்கி சென்றனர். இதனால், எங்களுக்கு எதிர்பார்த்த லாபம் கிடைக்கவில்லை. இந்தாண்டு மாவட்டத்தில் சாம்பல் பூசணி சாகுபடி குறைந்துள்ளதாலும், சாகுபடி செய்யப்பட்டுள்ள சாம்பல் பூசணி நன்கு வளர்ந்துள்ளதாலும், ஒரு சாம்பல் பூசணி, 10 ரூபாய் முதல், 15 ரூபாய் வரை வாங்கி கொள்வதாக வியாபாரிகள், விவசாயிகளிடம் முன்பணம் கொடுத்துள்ளனர். இதனால், சாம்பல் பூசணி சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு, இந்தாண்டு கூடுதல் வருமானம் கிடைத்துள்ளது. இவ்வாறு கூறினார்.

### விதைப்பண்ணை அமைக்க வேண்டுகோள் : விவசாயிகளுக்கு அழைப்பு

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், நெல் பயிரில் திருந்திய நெல் சாகுபடி முறையில், விதைப்பண்ணை அமைத்து அதிக லாபம் வேளாண் துறை வேண்டுகோள் விடுத்துள்ளது. விதை சான்று உதவி இயக்குனர் கிருஷ்ணன் வெளியிட்ட அறிக்கை: வெப்ப சலனம் காரணமாக தர்மபுரி மாவடட்த்தில் நல்ல மழை பெய்ந்துள்ளது. இந்த மழையை பயன்படுத்தி விவசாயிகள் சாகுபடி பணியில் தீவிரம் காட்டி வருகின்றனர். இந்த பருவத்தில், ஆடுதுறை, 39, ஐ.ஆர்.,20, ஆடுதுறை, 43 ஆகிய நெல் ரகங்களை சாகுபடி செய்யலாம். திருந்திய நெல் சாகுபடி முறையில் சாகுபடி செய்து அதிக லாபம் பெற முடியும். திருந்திய நெல் சாகுபடி முறையில் சிக்கன பாசனம் மூலம் தண்ணீர் தட்டுப்பாட்டை குறைக்க முடியும். மண்ணின் காற்றோட்டத்தையும், நுண்ணுயிர் செயல்பாட்டையும் அதிகரிக்க முடியும். பயிரில் தழை சத்து தேவையினை குறைக்க இயலும். களைகளை இயற்கை உரமாக மாற்றலாம். விதை நெல்லின் தேவை குறைக்கப்படுகிறது. மொத்தத்தில், நெல்லின் விளைச்சல் கூடுகிறது. திருந்திய நெல் சாகுபடி முறையில் நாற்று விட ஏக்கருக்கு இரண்டு முதல் மூன்று கிலோ விதை

போதுமானது. ஒரு சென்ட் பரப்பில் நாற்று விட வேண்டும். நல்ல திடமான நாற்றுகள் பெற ஒரு சென்ட் நாற்றுக்களுக்கு இரண்டு கிலோ டி.ஏ.பி., இட வேண்டும். வேர் அறுபடாமல் நாற்றுகளை பறிக்க, நாற்று பிடுங்க முதல் நாள் மாலையில், 20 கிலோ ஜிப்சம் இட்டு, நீர் பாய்ச்சிட வேண்டும். மறு நாள் காலையில் நாற்றுக்களை பறித்து நடவு செய்ய வேண்டும். துல்லிய சமன் செய்த நடவு வயலில், 14 முதல் 15 நாட்கள் வயதுடைய நாற்றுக்களை 25க்கு 25 செ.மீ., இடைவெளியில் குத்துக்கு ஒரு நாற்று வீதம் நடவு செய்ய வேண்டும். நடவு செய்த, 30, 45, 60ம் நாட்களில் கோனோவீடர் கருவி மூலம் களை எடுக்க வேண்டும். இதனால், மண்ணில் காற்றோட்டம் ஏற்படுகிறது. பழைய வேர்கள் வெட்டப்பட்டு,நாற்றில் புது வேர்கள் முளைக்கிறது. இயற்கையான முறையில் களை கட்டுப்படுத்தப்பட்டு பயிரின் வளர்ச்சி மற்றும் தூர் கட்டுதல் ஊக்குவிக்கப்படுகிறது. உர மேலாண்மை இலை வண்ண அட்டையை பயன்படுத்த வேண்டும். உரம் இடும் போது, யூரியாவை குறைத்து பொட்டாஷ் உரத்தை அதிகம் சேர்த்து உரிய காலத்தில், உரிய நேரத்தில் இட வேண்டும். வழக்கமான நெற்பயிருகிளூகு அதன் பருவம் முழுவதும், 2 செ.மீ., அளவுக்கு குறையாமல் தண்ணீரை சீராக இருக்க வைப்பதற்கு பதில் திருந்திய நெல் சாகுபடி முறையில் நீர் மறைய நீர் கட்டினால் போதுமானது.
நடவு வயலில் தொழு உரம் இடுதல், உழவு செய்து நடவு வயல் தயார் செய்தல், பூஞ்சான விதை நேர்த்தி, உயிர் உர விதை நேர்த்தி, ஜிங்க் சல்பேட் இடுதல், அடியுரமாக காம்பளக்ஸ் உரங்கள் இடுதல் மற்றும் நடவு செய்த மூன்றாம் நாள் களைக்கொல்லி இடுதல் போன்றவை வழக்கமான முறைப்படி செய்ய வேண்டும்.
விதைப்பண்ணை அமைத்து தரமான விதை உற்பத்தி செய்து வேளாண் துறைக்கு வழங்கினால், உள்ளூர் சந்தை விலையுடன் பிரிமியம் சேர்த்து கிலோவுக்கு சராசரி, 25 ரூபாய் வரை விலை கிடைக்கும். அப்போது, 3,500 ரூபாய் முதல் 4,000 கிலோவுக்கு கிடைக்கும். விவசாயிகள் அந்தந்த வட்டாரத்தில் உள்ள வேளாண் உதவி இயக்குனரை அணுகி நெல் பயிர்க்கு தேவையான ஆதார விதைகளை பெற்று சான்று விதைப்பண்ணை திருந்திய நெல் சாகுபடி முறையில் அமைத்து இரு மடங்கு உற்பத்தியையும், தரமான விதை உற்பத்தி செய்து, வேளாண் துறைக்கு வழங்கி, மும்மடங்கு வருமானம் பெறலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## தென்னையை தாக்கும் நத்தைப்புழு: கட்டுப்படுத்த வேளாண்துறை அதிரடி

கிருஷ்ணகிரி: போச்சம்பள்ளி அடுத்த மஞ்சமேடு, பென்ட்ரஅள்ளி பகுதியில் நத்தை புழுக்களின் தாக்குதல் அதிகரித்து, 250 ஏக்கரில் இருந்த, 8,500 தென்னை மரங்கள் சேதமானது. இத்தாக்குதலை கட்டுப்படுத்த வேளாண் துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் முதல் முறையாக கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அடுத்த மஞ்சமேடு மற்றும் பென்ட்ரஅள்ளி பகுதியில் தென்னையில் நத்தை புழுக்களின் தாக்குதல் இருந்து வருகிறது. நத்தை புழுக்கள் தென்னை ஓலைகளை சுரண்டியும், கடித்தும் சாப்பிட்டு மிகப்பெரிய சேதத்தை உருவாக்கி வருகிறது. கடந்த ஒரு வாரத்தில் நத்தை புழுக்களின் தாக்குதல் அதிகரித்து இந்த பகுதியில் இருந்த, 8,500 தென்னை மரங்கள் காய்ந்துவிட்டது. நத்தை புழுக்களின் தாக்குதல் அளவுக்கதிகமாக உள்ளதால் மற்ற பகுதிகளில் உள்ள தென்னை மரங்களுக்கும் புழுக்கள் பரவும் என்பதால், வேளாண் துறையினர் உடனடியாக இந்த புழுக்களின் தாக்குதலை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தனர். காற்றில் பரவும் தன்மை கொண்ட இந்த வகை புழுக்கள் எளிதில் பக்கத்தில் உள்ள தோப்புகளுக்கும் சென்று விடுவதால், விவசாயிகள் ஒருங்கிணைந்து மருந்து தெளித்தால் மட்டுமே புழுக்களின் தாக்குதலை கட்டுப்படுத்த முடியும் என்பதை அந்த பகுதி விவசாயிகளுக்கு வேளாண் துறையினர் கூறினர். நேற்று காலை மஞ்சமேடு பகுதியில்,113 விவசாயிகள் ஒருங்கிணைந்து மருந்து தெளிக்கும் பணியில் ஈடுபட்டனர். இதற்காக ஐந்து டிராக்டர் மவுண்டர்கள் பயன்படுத்தப்பட்டது. டிராக்டரில் உள்ள தண்ணீரில் மோனோகுரோட்டோபாசுடன், காப்பர் ஆக்ஸி குளோரைடு எனும் பூஞ்சான கொல்லி மருந்தை கலந்து விசை தெளிப்பான் மூலம் தெளிக்கப்பட்டது. இதற்காக, ஒரு லட்ச ரூபாய் மதிப்புள்ள மருந்துகள் விவசாயிகளுக்கு வேளாண் துறை மூலம் இலவசமாக வழங்கப்பட்டது. ஒருங்கிணைந்த மருந்து தெளிக்கும் நிகழ்ச்சியை கலெக்டர் ராஜேஷ் துவக்கி வைத்தார். மாவட்ட வேளாண் இணை இயக்குனர் ராதாகிருஷ்ணன், வேளாண் உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) பச்சையப்பன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) சுமதி, காவேரிப்பட்டணம் வேளாண் உதவி இயக்குனர் ராஜேந்திரன் மற்றும் விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். கலெக்டர் ராஜேஷ் கூறியது: மஞ்சமேடு பகுதியில் தென்னையில் நத்தை புழுக்களின் தாக்குதலை கட்டுப்படுத்த மாவட்ட நிர்வாகம் மற்றும் வேளாண் துணையினர் விவசாயிகளுடன் இணைந்து ஒருங்கிணைந்த மருந்து தெளிக்கும் முறையை செயல்படுத்தியுள்ளனர். மருந்து தெளித்தல் மட்டுமன்றி விவசாயிகள் தங்கள்

தென்னந்தோப்புகளை உழவு செய்து, சுத்தமாக வைத்துகொள்ள வேண்டும். தென்னையில் ஊடு பயிராக கொள்ளுபயிர், சணல்பை, தக்கைப்பூண்டு போன்ற பயிர்களை பயிரிடவேண்டும். ஆண்டுக்கு இரண்டு முறை அரைவட்ட பாத்தியின் மூலம் உரம் இடுவதும், அளவுக்கு அதிகமான தண்ணீரை வெளியேற்ற வடிகால் வசதி செய்வதும் நத்தை புழுக்களின் தாக்குதலை பெருமளவு குறைக்கும். வேளாண் துறையினர் இந்த பகுதியில் முகாமிட்டு புழுக்களின் தாக்குதலை கண்காணிப்பார்கள். நத்தை புழுக்களின் தாக்குதல் மேலும் பரவாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கூறினார்.

## வேளாண் பட்டதாரி சங்க மாநில செயற்குழு கூட்டம்

கிருஷ்ணகிரி: தர்மபுரி மாவட்ட தமிழ்நாடு அரசு வேளாண் பட்டதாரிகள் சங்கம் சார்பில், கிருஷ்ணகிரியில் அச்சங்க மாநில செயற்குழு கூட்டம் நடந்தது. மாநில தலைவர் ஸ்டான்லி தலைமை வகித்தார். தர்மபுரி மாவட்ட தலைவர் செல்வம் வரவேற்றார். "தமிழக அரசின் திட்டங்களை மக்களுக்கு சென்றடையும் வகையில் பணிபுரிவது, சங்க உறுப்பினர்கள் டாகா குடும்ப நல நிதியில் சேர வேண்டும்' உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றினர். பணி மாறுதல் பெற்று சேலம் மாவட்டம் செல்லும் தர்மபுரி வேளாண் துணை இயக்குனர் மாதுவை பாராட்டி பரிசு வழங்கப்பட்டது. மாநில செயலாளர் சுரேஷ் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். ஏற்பாடுகளை தர்மபுரி மாவட்ட தலைவர் செல்வம், செயலாளர் எழில் முருகன், பொருளாளர் தினேஷ், இணை செயலாளர்கள் பாஸ்கர், சுப்பிரமணி, அமுதவள்ளி, முனிகிருஷ்ணன் ஆகியோர் செய்திருந்தனர்.

## தாளவாடி பகுதியில் பரவலாக மழை விவசாயிகள் உழவு பணி தீவிரம்

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் அடுத்துள்ள தாளவாடி மலைப்பகுதியில், நடப்பு ஆண்டில், பரவலாக பலத்த மழை பெய்துள்ளதால், விவசாயிகள் உழவு பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். தாளவாடி மலைப்பகுதி, கடல் மட்டத்தில் இருந்து, ஆயிரம் அடி உயரம் கொண்டதாகும். தாளவாடியை சுற்றிலும் உள்ள, நூற்றுக்கணக்கான கிராமங்களிலும், விவசாயம் முக்கிய தொழிலாக விளங்குகிறது. இப்பகுதி விவசாயிகள், கடந்த இரண்டு ஆண்டுகளாக மழையின்றி, பெரிதும் பாதிக்கப்பட்டனர். இப்பகுதியில், வானம் பார்த்த பூமியே அதிகமாக உள்ளதால், மழை வந்தால் மட்டுமே, தாளவாடி

பகுதியில் விவசாயம் செழிக்கும். இல்லையேல், இப்பகுதி விவசாயிகள் சாப்பாட்டுக்கே தள்ளாடும் நிலை ஏற்படும். இந்நிலையில், கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக, தாளவாடி பகுதியில் பலத்த மழை பெய்து வருகிறது. இம்மழையால், வனப்பகுதியில் உள்ள குளம், குட்டைகள் தண்ணீர் நிறைந்தது மட்டுமின்றி, காட்டாறுகளிலும் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. தாளவாடி பகுதியில் பல்வேறு இடங்களில் உள்ள தடுப்பணைகளில் தண்ணீர் நிறைந்தது. இதனால் வறண்டுபோன விவசாய கிணறுகளில், தற்போது தண்ணீர் மட்டம் மேல்நோக்கி உயர்கிறது. மானாவாரி நிலங்களுக்கு, போதிய மழை கிடைத்து விட்டதால், விவசாயிகள் தற்போது உழவு பணியில் ஈடுபட்டுள்ளனர். குறிப்பாக, நெல் நடவுப்பணியையும், முன்னதாக விடப்பட்ட நாற்றுகளை பறித்து, நடவு செய்யும் பணியிலும் மும்முரம் காட்டி வருகின்றனர். வரும் மாதங்களில் பரவலாக மழை பெய்தால் கூட, இந்தாண்டுக்கான பயிரை காப்பாற்றிவிடலாம், என்ற நம்பிக்கையை விவசாயிகள் பெற்றுள்ளனர்.மலைப்பகுதியில், பணப்பயிர்கள் சாகுபடியிலும் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

## அறுவடைக்கு தயாரான செண்டு மல்லிப்பூ ஆயுத பூஜையில் விலை உயர்வுக்காக காத்திருப்பு

கோபிசெட்டிபாளையம்: ஆயுத பூஜையை முன்னிட்டு, கோபி பகுதியில் செண்டுமல்லி பூ அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. விலை உயருமா என விவசாயிகள் எதிர்பார்ப்புடன் உள்ளனர். கோபி அரக்கன்கோட்டை, தடப்பள்ளி, கீழ்பவானி, குண்டேரிப்பள்ளம் அணை பாசன பகுதிகளில், நெல், வாழை மற்றும் கரும்புக்கு அடுத்தபடியாக கத்தரிக்காய், வெண்டை, தக்காளி, பாகற்காய், காலிஃபிளவர், புடலை, சின்ன வெங்காயம், பூசணி வகைகள், முள்ளங்கி, கீரை மற்றும் பூ வகைகள் சாகுபடி செய்யப்படுகின்றன. ஆயுத பூஜை பண்டிகை முன்னிட்டு, கோபி சுற்று வட்டாரத்தில் தனியாகவும், வாழையில், ஊடுபயிராகவும் செண்டுமல்லி சாகுபடி செய்யப்பட்டுள்ளன. 90 நாட்கள் பயிராக செண்டு மல்லி, நன்கு விளைச்சலாகி அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. நடப்பாண்டு, தண்ணீர் பற்றாக்குறையால் பூ விளைச்சல் குறைவாக உள்ளது. இதுபற்றி விவசாயிகள் கூறியதாவது: விவசாய கூலி ஆட்கள் பற்றாக்குறை அதிகளவில் உள்ளது. பெண்களுக்கு, 150 முதல், 200 ரூபாய் வரை கூலி கொடுத்தால் கூட, வேலைக்கு வர தயங்குகின்றனர். பல ஆண்டுகளாக விவசாய கூலி செய்யும் நபர்கள் மட்டுமே, விவசாய கூலி பணி செய்து வருகின்றனர். இளைய தலைமுறையினர், விவசாய

பணிக்கு வரவில்லை. விவசாய கூலி ஆள் பற்றாக்குறையால், தோட்டக்கலை பயிர்களான காய்கறி மற்றும் பூ வகைக்கு மாறி உள்ளோம். வாழை மற்றும் மஞ்சளில், செண்டுமல்லி ஊடுபயிராக செய்யலாம். ஒரு கிலோ பாக்கெட் செண்டுமல்லி விலை, 2,000 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு, ஒரு கிலோ விதை பயன்படுத்தலாம். அறுவடைக்கு தயாரான பின், எட்டு வாரங்கள் வரை பூ அறுவடை செய்யலாம். பூவில் கருப்பு புள்ளி விழுந்தால், பூ விலை மிகவும் குறைந்து விடும். அறுவடை செய்யப்படும் பூக்களை, கம்பெனி மற்றும் பூ மார்க்கெட்டில் விற்பனை செய்கிறோம். மொத்த விலையில் பூ விற்பனை செய்யும் போது, ஒரு குறிப்பிட்ட தொகைக்கு விற்பனை செய்து வருகிறோம். ஆயுத பூஜை பண்டிகைக்கு பூ விலை அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. வெளிமாநில பூ வரத்தால், ஒரு வேளை பூ விலை குறையும் வாய்ப்புள்ளது. ஒரு ஏக்கருக்கு, எட்டு டன் பூ வரை கிடைக்கும். மஞ்சள் மற்றும் வாழையில் ஊடுபயிராக பயிரிட்டுள்ளதால், விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கும். நஷ்ட ஏற்பட வாய்ப்பில்லை.இவ்வாறு அவர் கூறினார்.

## டெல்டா மாவட்டங்களில் குறுவைநெல் வாங்க சுறுசுறுப்பு : 157 கூடுதல் கொள்முதல் நிலையங்கள் திறப்பு

தஞ்சாவூர்: தஞ்சை, நாகை, திருவாரூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களில் குறுவை நெல் மூட்டைகளை விவசாயிகளிடம் இருந்து நேரடியாக வாங்கும் வகையில், கூடுதலாக 157 கொள்முதல் நிலையங்களை திறக்க, அந்தந்த மாவட்ட கலெக்டர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். டெல்டா மாவட்டங்களான தஞ்சை, திருவாரூர், நாகை உள்பட டெல்டா மாவட்டங்களில் காவிரி நீரை நம்பி குறுவை, சம்பா, தாளடி, கோடை என, நான்கு போக நெல் சாகுபடி நடந்து வருகிறது. நடப்பாண்டு சாகுபடிக்காக மேட்டூர் அணையிலிருந்து ஆக., 2ம் தேதியும், கல்லணையில் இருந்து ஆக., நான்காம் தேதியும் தண்ணீர் திறக்கப்பட்டது. கல்லணையில் தண்ணீர் திறப்பு மூலம் டெல்டாவில் திருவாரூர், நாகை, புதுகை, கடலூர் ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 12.97 லட்சம் நிலப்பரப்பு பாசன வசதியை பெறும்; இதுதவிர ஆழ்குழாய் கிணறுகள் மூலம் ஏற்கனவே பயிரிடப்பட்டுள்ள 1.63 லட்சம் ஏக்கர் குறுவை பயிர்களுக்கும் காவிரி நீர் சென்று சேரும் என, பொதுப்பணித்துறை அமைச்சர் ராமலிங்கம் அறிவித்தார். தஞ்சை, திருவாரூர், நாகை உள்ளிட்ட மாவட்டங்களில் குறுவை நெல் அறுவடை பரவலாக துவங்கி, நடந்து வருகிறது. ஆனால், இம்மாவட்டங்களில் ஆங்காங்கே போதிய அளவில் நெல்

கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு இயங்கிய நிலையில், சீஸன் காலம் முடிந்ததை காரணம் காட்டி, இவற்றை மூடுவதற்கு நுகர்பொருள் வாணிபக்கழக அதிகாரிகள் திடீர் நடவடிக்கை எடுத்தனர். இதன்படி, தஞ்சை மாவட்டத்தில் 352 நேரடி நெல்கொள்முதல் நிலையங்களும், எட்டு சிறப்பு கொள்முதல் நிலையங்களும் இயங்கிய நிலையில், இவற்றில் 338 கொள்முதல் நிலையங்கள் திடீரென மூடப்பட்டு, 22 கொள்முதல் நிலையங்கள் தான் ஆக., மாத நிலவரப்படி இயங்கின. ஆனால், குறுவை அறுவடை துவங்கி விட்ட நிலையில், விளைச்சலான நெல் மூட்டைகளை நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் கீழ் இயங்கும் நேரடி கொள்முதல் நிலையங்களில் விற்க முடியாமல் விவசாயிகள் திணறினர். அதேசமயத்தில், விளைவித்த நெல்கள் பதம் போய் கெட்டு விடும் என்பதால் நஷ்டத்தை தவிர்க்க வேறு வழியின்றி, ரோட்டில் கொட்டி வைத்து, தனியார் வியாபாரிகளுக்கு விற்கும் நிலைக்கு டெல்டா விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர் என, செப்., 23ம் தேதி "காலைக்கதிர்' நாளிதழில், "கொள்முதல் நிலையங்கள் திடீரென மூடல், தனியாருக்கு, "அடிமாட்டு' விலைக்கு நெல் விற்பனை' என்னும் தலைப்பில், முதல் பக்க செய்தி வெளியானது. "விவசாயிகள் நஷ்டத்தில் தனியார் வியாபாரிகளுக்கு நெல் கொள்முதல் செய்வதை உணர்ந்து, தேவையான இடங்களில் கூடுதல் கொள்முதல் நிலையங்களை திறக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, விவசாயிகள் வலியுறுத்தினர். இதையடுத்து, விவசாயிகளின் மேற்கண்ட கோரிக்கையை ஏற்று, தஞ்சை மாவட்டத்தில் குறுவை அறுவடையையொட்டி கூடுதலாக 72 கொள்முதல் நிலையங்களை உடனடியாக திறக்குமாறு, தஞ்சை கலெக்டர் பாஸ்கரன் நுகர்பொருள் வாணிபக்கழக அதிகாரிகளுக்கு அதிரடியாக உத்தரவிட்டார். இதுகுறித்து, கலெக்டர் பாஸ்கரன் கூறுகையில், ""தஞ்சை மாவட்டத்தில் நடப்பு நெல் கொள்முதல் பருவத்தில் 24 நெல்கொள்முதல் நிலையம் இயங்கி வந்தன. குறுவை அறுவடை துவங்கியதால் செப்.,23ம் தேதி முதல் கூடுதலாக 72 நேரடி கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டுள்ளன," என்றார். இதன்படி, குறுவை அறுவடை நெல் மூட்டைகளை அரசு கட்டுப்பாட்டில் இயங்கும் நுகர்பொருள் வாணிபக்கழகத்துக்கு விவசாயிகள் நேரடியாக வழங்கும் வகையில், கடந்த 23ம் தேதி முதல் தஞ்சை மாவட்டத்தில் 72, நாகையில் 43, திருவாரூரில் 42 என, கூடுதலாக மொத்தம் 157 கொள்முதல் நிலையங்களை கூடுதலாக திறக்கப்பட்டுள்ளன. இதற்குரிய நடவடிக்கையை அந்தந்த கலெக்டர்கள் எடுத்துள்ளனர். இதனால், குறுவை நெல் விற்பனையில் தனியார் வியாபாரிகளிடம் சிக்காமல், நஷ்டத்தில்

இருந்து மீளமுடியும் என்னும் நம்பிக்கையில், டெல்டா விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## விளைபொருட்களை விவசாயிகள் சேமித்து வைக்க கிட்டங்கி வசதி

திண்டுக்கல்:""மாவட்டத்தில் இதுவரை 110 கூட்டுறவு கடன் சங்கங்களில் கிட்டங்கி வசதிகள் செய்துதரப்பட்டுள்ளது. மீதமுள்ள கூட்டுறவு சங்கங்களிலும் விரைவில் கிட்டங்கிகள் ஏற்படுத்தப்படும்," என, கலெக்டர் வெங்கடாசலம் தெரிவித்தார். பலக்கனூத்து தொடக்கவேளாண்மை கூட்டுறவு வங்கியில் கட்டப்பட்டுள்ள கிட்டங்கியை கூட்டுறவு சங்க இணைபதிவாளர் செல்வகுமரன், கலெக்டர் வெங்கடாசலம் ஆகியோர் ஆய்வு செய்தனர். கலெக்டர் கூறியதாவது: மாவட்டத்தில் மொத்தம் 197 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் உள்ளன. இவற்றில், ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியிலிருந்து 110 கிட்டங்கிகள் கட்டப்பட்டுள்ளன. இதன் மூலம் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை கிட்டங்கியில் வைத்து பாதுகாத்துக்கொள்வதுடன், விளை பொருட்களை வைத்து அடமான கடனும் பெறலாம். பின் நல்ல விலை கிடைக்கும் போது எடுத்து விற்றுக்கொள்ளலாம். அடுத்த ஆண்டுக்குள் அனைத்து கூட்டுறவு சங்கங்களிலும் கிட்டங்கி வசதி ஏற்படுத்தப்படவுள்ளது. கெட்டுப்போகாத நெல், மக்காச்சோளம் போன்ற நீண்ட நாட்கள் வைத்திருக்ககூடியவை மட்டுமே கிட்டங்கியில் சேமித்து வைக்கமுடியும். மாவட்டத்தில் ஒட்டன்சத்திரம் உள்ளிட்ட ஐந்து இடங்களில் குளிர்பதன கிட்டங்கிகள் கட்டப்பட்டு வருகிறது, என்றார். ஆய்வின் போது, கூட்டுறவு சங்க துணைபதிவாளர் நடராஜன், கூட்டுறவு ஒன்றிய மேலாண்மை இயக்குனர் செல்வராஜ் உட்பட கூட்டுறவு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## மலேசியாவிற்கு மக்காச்சோளம் ஏற்றுமதி வேளாண் துறை முடிவு

திண்டுக்கல்:மக்காச்சோளத்தை, மலேசியாவிற்கு ஏற்றுமதி செய்ய வேளாண்மை துறை முயற்சிமேற்கொண்டுள்ளது. அதற்காக விவசாய சங்கங்களை உருவாக்கும் முயற்சியை துவக்கியுள்ளனர். தமிழகத்தில் பெரம்பலூருக்கு அடுத்து திண்டுக்கல்லில் மக்காச்சோளம் அதிகமளவில் பயிரிடப்படுகிறது. இந்த ஆண்டு 10 ஆயிரம் ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 2.50 லட்சம் மெட்ரிக் டன் மகசூல் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கால்நடைகளுக்கு தீவனமாகவும், அழகு சாதன பொருட்கள்,

மருந்துகள் தயாரிக்கவும் மக்காச்சோளம் பயன்படுத்தப்படுகிறது. இதை இறக்குமதி செய்ய மலேசியா அரசு முன்வந்துள்ளதால், வேளாண்மை துறை சார்பில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, முதல்கட்டமாக ஒரு லட்சம் மெட்ரிக் டன் மக்காச்சோளத்தை ஏற்றுமதி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான விலையை நிர்ணயம் செய்வது, நிரந்தமாக சாகுபடி செய்யும் வகையில் அதற்கான விவசாய சங்கங்களை அமைப்பதற்கான முயற்சியை வேளாண்மை துறையினர் மேற்கொண்டுள்ளனர். தற்போது மக்காச்சோளம் குவிண்டாலுக்கு ரூ. 1300 க்கு விற்கப்படுகிறது. ஏற்றுமதிக்கான மக்காச்சோளத்திற்கு ரூ. 2 ஆயிரம் விலை நிர்ணயிக்க வேண்டுமென விவசாயிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. திண்டுக்கல் வேளாண்மை துறை இணை இயக்குனர் மனோகரன் கூறுகையில்;""முதல் முறையாக மக்காச்சோளத்தை மலேசியாவிற்கு ஏற்றுமதி செய்ய முடிவு செய்துள்ளோம். விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைக்கும் வகையில் இறுதி விலை நிர்ணயிக்கப்படும். இதற்கான சங்கங்களை அமைத்து விவசாயிகளே நேரடியாக விற்பனை செய்யும் வகையில் வழிவகை செய்துகொடுக்கப்படும்," என்றார்.

## விவசாயிகளுக்கான தொழில் நுட்ப பயிற்சி

குஜிலியம்பாறை: குஜிலியம்பாறை ஒன்றியம் ஆர்.வெள்ளோட்டில், மாவட்ட வேளாண்மை விற்பனை மையம் மற்றும் வணிகத்துறை சார்பில், "அட்மா' திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கான தொழில்நுட்ப பயிற்சி முகாம் நடந்தது. ஒன்றிய துணை தலைவர் நல்லசாமி தலைமை வகித்தார். வெள்ளோடு ஊராட்சி தலைவர் போதும்பொண்ணு முன்னிலை வகித்தார். வேளாண்மை அலுவலர் சவுந்திரராஜன், பயிற்சியின் நோக்கம், செயல்பாடு குறித்து பேசினார். வேளாண்மை விற்பனை மைய துணை இயக்குநர் செல்வராஜ் பேசுகையில், விவசாயிகளின் நலன் கருதி, வேளாண்மை விற்பனை குழு அமைத்தல், விவசாயிகளுக்கான பட்டறிவு (சுற்றுலா) பயணம் அழைத்து செல்லுதல், முருங்கை சாகுபடி விவசாயிகளுக்கு சேமிப்பு கிட்டங்கி அமைக்க ஆவண செய்தல் குறித்து விளக்கி பேசினார். வேளாண்மை அலவலர்கள் குமரவேல்,சண்முகம், சந்திரமோகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## கால்நடை மருத்துவமனைகளில் அகத்தி நாற்றுகள் விநியோகம்

கம்பம்:கால்நடைத்துறை சார்பில், இலவச ஆடுகள் வாங்கிய பயனாளிகளுக்கு அகத்தி நாற்றுகள் விநியோகம் செய்யப்படுகிறது. ஒவ்வொரு மருத்துவமனைக்கும் 2000

நாற்றுகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழக அரசு சார்பில், இலவச ஆடு, மாடுகள் வழங்கப்பட்டுள்ளன. ஆடு, மாடுகளுக்கு தீவனம் கிடைப்பதில் பெரும் சிரமம் உள்ளது. எனவே ஆடு மாடுகளுக்கு தீவனத்திற்காக அரசு அகத்தி நாற்றுகள் வழங்க திட்டமிட்டது.அதன்படி ஒவ்வொரு கால்நடை மருத்துமனைக்கும் 2000 அகத்தி நாற்றுகள் வழங்கப்பட்டுள்ளன. இலவச ஆடு வாங்கிய பயனாளி ஒவ்வொருவருக்கும், 5 நாற்றுகள் வழங்கப்படுகிறது. இந்த நாற்றுக்களை நடவு செய்து, வளர்த்து, ஆடுகளின் தீவன பிரச்னையை தீர்த்துக் கொள்ள வேண்டும். கால்நடைபராமரிப்புத்துறை அதிகாரிகள் கூறுகையில், "ஆடுகள் வழங்காத பகுதிகளில் மாடுகள் வைத்திருப்போர், இந்த நாற்றுகளை வாங்கி கொள்ளலாம்,' என்றனர்.

## மீன்பாடு அதிகரிப்பு விலையோ சரிவு

ராமநாதபுரம்:புரட்டாசியில் வாங்குவோர் குறைவால், மீன்களின் விலை கணிசமாக குறைந்துள்ளது. ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம், பாம்பன், மண்டபம் உள்ளிட்ட கடலோர பகுதிகளில் மீன்பாடு அதிகமாக உள்ளதால், சில நாட்களாக மீன்களின் விலை குறைந்து காணப்படுகிறது. கடந்த வாரம் ஒரு கிலோ 180 ரூபாய்க்கு விற்ற இறால் 160க்கும், 160க்கு விற்ற கிழங்கன் 140க்கும், 100க்கு விற்ற பாறை (சிறியது) 80க்கும், 80க்கு விற்ற சூடை 70க்கும், 80க்கு விற்ற திருக்கை 70க்கும், 180க்கு விற்ற விலமீன் 150க்கும், 140க்கு விற்ற வாலமீன் 80க்கும், 120க்கு விற்ற நெத்திலி 70க்கும், 250க்கு விற்ற பாறை 240க்கும் 250க்கு விற்ற நண்டு 240 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. வியாபாரி சதக்கத்துல்லா கூறியதாவது: காற்று வீசுவதால், ஒரளவு மீன்பாடு அதிகமாக கிடைக்கிறது. மேலும், புரட்டாசியில் பலர் மீன் வாங்குவதில்லை. இதனால் விலை சற்று குறைந்துள்ளது, என்றார்.

## விதைக்கும் கருவி மூலம் நெல் விதைப்பு

தேவகோட்டை: தேவகோட்டை பகுதிகளில் விதைப்பு பணி நடந்து வருகிறது. மானாவாரியில் திருந்திய நெல் சாகுபடி விதைப்பு கருவி மூலம் விதைக்கும் பணி ,தானாவயல், மானம்புவயல் செக்ககுடி, வசந்தனி கிராமங்களில் நடந்து வருகிறது. இது பற்றி வேளாண் உதவி இயக்குநர் பாஸ்கர மணியன் கூறுகையில், ""விதைக்கருவி மூலம் விதைப்பதால் ஒரு ஏக்கருக்கு 15 கிலோ விதை மட்டும் போதும். இக்கருவி மூலம் 30 செமீக்கு இடைவெளியில் விதைப்பதால் பிற்காலத்தில் கோனாவீடர், விசை களைக்கருவி

கொண்டு களையெடுக்கும் பணியை எளிதாகவும்,சிக்கனமாகவும் மேற்கொள்ள ஏதுவாக இருக்கும். பணியாளர்கள் தட்டுப்பாடு உள்ள நிலையில் பயனுள்ளதாக உள்ளது, என்றார்.

## நெற்பயிரில் பூச்சி தாக்குதல் கட்டுப்படுத்த ஆலோசனை

சிவகங்கை:""நெற்பயிரில் பூச்சி தாக்குதலை தவிர்க்க, வரப்பில் தட்டை பயறு பயிரிடுமாறு," சிவகங்கை உதவி இயக்குனர் தனபாலன் தெரிவித்தார். அவர் கூறியதாவது; நெற்பயிரை இலைச்சுருட்டுப்புழு, தண்டுத்துளைப்பான், புகையான், பச்சை தத்துப்பூச்சி, ஆனைக்கொம்பன் ஈ போன்ற பூச்சிகள் தாக்கி, பாதிக்கின்றன. இவற்றை, ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்த, பொறிவண்டு, சிலந்திகள், தட்டான்கள், நீளகொம்பு வெட்டுக்கிளிகள் போன்ற நன்மை செய்யும் பூச்சிகள் உதவுகின்றன. நன்மை செய்யும் பூச்சிகள் தீமை செய்யும் பூச்சிகளை உண்பதால், பாதிப்பு கட்டுக்குள் இருக்கும். நெல் வயல் வரப்பில் தட்டை பயறு பயிரிடுவதால், இச்செடிகளுக்கு பொறி வண்டுகள் ஈர்க்கப்படும். தீமை செய்யும் பூச்சிகளை உண்பதால், நெற்பயிர் பாதிப்பு குறையும். எனவே, நெற்பயிரில் பூச்சி தாக்குதலை குறைத்து, அதிக மகசூல் பெற, வயலில் தட்டை பயறு பயிரிட்டு பயன் அடையலாம், என்றார்.

## ஏரலில் தாமிரபரணி பாசன விவசாயிகள் விழிப்புணர்வு மாநாடு

ஏரல் : வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஏரலில் வரும் 29ம் தேதி தாமிரபரணி பாசன விவசாயிகள் விழிப்புணர்வு மாநாடு நடக்கிறது. தாமிரபரணி ஆறு மூலம் நெல்லை மாவட்டத்தில் 40 ஆயிரம் ஏக்கரும்,தூத்துக்குடி மாவட்டத்தில் 46,107 ஏக்கர் நஞ்சை விவசாய நிலங்கள் ஆங்கிலேயர் ஆட்சி காலத்திலிருந்து பயன் பெற்று வருகிறது. இதனால் 96 சதவீத தண்ணீர் விவசாயத்திற்கு என்ற நிலை தற்போது மாரி தொழிற்சாலைகளுக்கு தண்ணீர் கொடுப்பதிலும் விவசாயத்திற்கு போதிய தண்ணீர் திறக்காததாலும் விவசாயம் பெறிதும் பாதிக்கப்பட்டுள்ளது விவசாயத்திற்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில் பல தணியார் தொழிற்சாலைகளுக்கு தண்ணீரை அடிமாட்டு விலைக்கு தாரை வார்க்கும் திட்டங்கள் கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தை செயல்படுத்தாமல் விவசாயிகளுக்கான தண்ணீரை உறிஞ்”ம் 20 எட்.ஜி.டி.திட்டம் அண்டை மாநிலங்களுக்கு தண்ணீர் வழங்கும் திட்டம் அணைகள் குளங்கள் தூர்வாராதநிலை அட்வான்ஸ் கார் சாகுபடிக்கு பருவத்திற்கு கூட முறையாக தண்ணீர்

கிடைக்காத நிலையை விவசாயம் சீர்கேடான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது இந்நிலையில் நெல்லை, தூத்துக்குடி மாவட்டத்திற்கு 86107 ஏக்கருக்கும் பாசன சாகுபடிக்கு தண்ணீர் திறக்க 14.11.12 ல் அர” அனுமதி வழங்கிய போதும் பொதுப்பணித்துறையாளர் தண்ணீர் திறந்து விடாததால் பாசன சாகுபடி நடைபெற வில்லை தற்போது மருதூர் அணையிலிருந்து தண்ணீர் எடுத்து தூத்துக்குடி மாநகராட்சி 4வது பைப்லைன் திட்டம் கோவில்பட்டி புதூர் திட்டங்களை செயல்படுத்த வேலைகள் தொடங்கியுள்ளன. இவ்வாறு தூத்துக்குடி மாவட்ட நிர்வாகமும் திருநெல்வேலி தாமிரபரணி வடிநில கோட்ட பொதுப்பணித்துறை நிர்வாகமும் மாநில அரசிடம் உண்மை நிலையை மறைத்து உரிய முறையில் விவசாயம் சம்பந்தப்பட்ட தண்ணீர் பிரச்சிணையை கொண்டு செல்லாததால் தூத்துக்குடி மாவட்டத்தில் முறையாக பசானம் முன் கார் சாகுபடி, கார் சாகுபடிகள் நடைபெறாததாக ”மார் 20 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் தரிசாக மாரியுள்ளது ”மார் 7 லட்சம் குவிண்டால் நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது மேலும் வாழை வெற்றிலை பயிர்கள் கருகி வருகிறது. இந்த ஆண்டு மட்டும் ”மார் 200 கோடி ரூபா ய் இழப்பு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது இதனால் கிராம பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்துள்ளது மூன்று போக விவசாயத்தையும் இழந்து வருங்கால வாழ்வுக்கு வழியின்றி விவசாயிகள் தற்கொலை முடிவு செ ய்யவும் கிராமப்புறத்தை விட்டு வெளியேறவும் முடிவு செ ய்யும் நிலை உள்ளது இதனால் அரசியல்வாதிகளையும் அர” நிர்வாகத்தையும் பொறுப்புடன் செயல்பட வைக்கவும் தாமிரபரணி விவசாயத்தை பாதுகாக்கும் பொருட்டு தூத்துக்குடி மாவட்ட தாமிரபரணி நதி நீர் பாதுகாப்பு பேரவை சார்பில் விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த ஏரலில் மாபெரும் மாநாடு நடத்த முடிவு செ ய்யப்பட்டுள்ளது இந்த மாநாட்டை வலியுறுத்தி கடந்த 18ம் தேதி முதல் 21 ம் தேதி வரை தாமிரபரணி பாசன பகுதிகள் முழுவதும் மோட்டார் பைக் பேரணி நடந்தது வரும் 29ம் தேதி ஏரலில் தாமிரபரணி பாசன விவசாயிகள் வாழ்வாதார விழிப்புணர்வு மாநாடு நடக்கிறது மாநாட்டில் மாவட்ட தாமிரபரணி நதி நீர் பாதுகாப்பு பேரவை அமைப்பாளர் நயினார்குலசேகரன் தலைமை வகிக்கிறார். ம.தி.மு.க பொது செயலாளர் வைகோ, கம்யூனிஸ்ட் கட்சி நல்லகண்ணு கலந்து கொள்கின்றனர் வக்கீல் ஜோயல் சமூக ஆர்வலர் ஜெயபாலன் பாத்திமாபாபு உட்பட பலர் வாழ்த்தி பே”கின்றனர் ஸ்ரீவைகுண்டம் தாலுகா பகுதி அணைத்து விவசாய அமைப்புகளின் தலைவர்கள் உட்பட நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.

## விவசாயிகளின் மழை நம்பிக்கை.: அடிக்கும் வெயிலை பார்த்து விவசாயிகள் அச்சம்

கோவில்பட்டி : கோவில்பட்டி பகுதியில் மழைக்கான அறிகுறி தென்படாததால் விவசாயிகள் விரக்தியடைந்துள்ளனர். ஏற்கனவே ஓரிரு நாள் லேசாக பெ ய்த மழையை நம்பி விதைத்த விதைகள் முளைத்து தற்போது வெளுத்து வாங்கும் கடுமையான வெயிலில் கா ய்ந்து நிலங்களும் வறண்டு விட்டன. இந்நிலையில் இரண்டாவது விதைப்பிற்கு விவசாயிகள் தயாராகி வருவதால் மழை பெ ய்யாதா என்ற ஏக்கத்துடன் காத்திருக்கின்றனர். தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக அரசே அறிவிக்கும் அளவிற்கு கடந்தாண்டு மழை பொ ய்த்துப் போனதில் கடுமையாக விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். தமிழகத்தின் பிற மாவட்டங்களிலாவது ஒருசில நாட்கள் மழை பெ ய்தது. ஆனால் தூத்துக்குடி மாவட்டத்தில் பெயரளவிற்கு கூட மழை தலைகாட்டாமல் போனது. அதிலும் குறிப்பாக கோவில்பட்டி பகுதியில் மருந்தளவிற்கு கூட மழை பெ ய்யாததால் முளைத்த பயிர்கள் அனைத்தும் நிலத்திலேயே கருகியதாக விவசாயிகள் கூறுகின்றனர். கோவில்பட்டி பகுதியை பொறுத்தவரை முழுக்க முழுக்க மானாவாரி விவசாயத்தை நம்பியே இருப்பதால் ஒருசில இடங்களில் முளைத்த பயிர்களை கருகவிட மனமின்றி ஆயிரக்கணக்கில் செலவு செ ய்து டிராக்டர், பேரல்களில் தண்ணீர் கொண்டு சென்று ஊற்றிய சம்பவங்களும் நடந்தது. கடந்த சில ஆண்டுகளாகவே கோவில்பட்டி பகுதியை மழை புறக்கணித்து வருவதால் குளங்கள், குட்டைகள், ஏரிகள், கண்மா ய்கள் முற்றிலும் வறண்டு போனது. இந்நிலையில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் வடமாநிலங்களில் பே ய் மழை பெ ய்தபோது தமிழகத்தின் ஒருசில இடங்களில் லேசான மழை பெ ய்தது. அதேபோல் கோவில்பட்டி பகுதியிலும் ஒன்றிரண்டு தூறல்கள் விழுந்து மழை வருவதுபோல் பாவலா காட்டியது. இதனால்இந்தாண்டு மழை பெ ய்யுமென நம்பக்கூடிய ‹ழ்நிலைக்கு தள்ளப்பட்ட விவசாயிகள் அதை நிலத்தில் செயல்படுத்தவும் செ ய்தனர். விவசாயத்திற்கு தயார் செ ய்த மானாவாரி நிலங்களில் மக்காச்சோளம், சோளம், கம்பு, உளுந்து, பாசி போன்றவைகளை விதைத்துள்ளனர். ஆனால் கடந்த இரண்டு வாரங்களுக்கும் மேலாக கோவில்பட்டி பகுதியில் கடுமையான வெயில் மட்டுமே கொளுத்துகிறதே தவிர மழைக்கான எந்த அறிகுறியும் காணப்பட வில்லை. இதனால் தற்போது முளைத்த பயிர்கள் அனைத்தும் வெயிலில் வாடி வதங்கி அழிந்து போனதாக வருத்தத்துடன் கூறுகின்றனர். இந்நிலையில் அக்.15க்கு மேல் மழைக்கான வா ய்ப்புகள் இருப்பதாக ஆரா ய்ச்சி மையங்கள் தெரிவித்துள்ளதாகவும், புரட்டாசி கடைசியில் மழை

பெ ய்யும் வா ய்ப்புண்டு என்று மூத்த விவசாயிகள் கருதுவதாலும் இரண்டாவது விதைப்பிற்கு ஆயத்தமாகி வருகின்றனர். கோடைகாலத்தில் மழை பெ ய்திருந்தால் நிலத்தில் இருக்கும் ஈரப்பதம் தற்போது பயிர்களுக்கு உதவ முடியும். ஆனால் எல்லா பருவத்திலும் மழை பொ ய்த்தால் நிலங்களை எத்தனை முறை பதப்படுத்தினாலும் ஓரிரு நாட்களில் மீண்டும் வறண்டு போவதாக கூறுகின்றனர். இதனால் கிராமங்களில் மழையை வரவேற்கவும், பெ ய்கின்ற மழை தங்களது கிராமத்திற்கு முழுமையாக கிடைக்கவும் வேண்டி யாகங்கள், ஹோமங்கள் நடத்தி வருகின்றனர். விவசாயிகளும், பொதுமக்களும் மழைக்காக இதுபோன்ற காரியங்களை செ ய்து வரும் நிலையில் அர" பண்ணைக்குட்டைகளை வெட்டுமாறு உத்தரவிட்டுள்ளது. மழை பெ ய்யும் போது தண்ணீர் தங்காமல் வீணாக கடலுக்கு செல்லாமல் விவசாயத்திற்கு பயன்பட வேண்டுமென திட்டமிட்டுள்ளது. ஆனால் இப்பணிகளை தேசிய ஊரக வேலை உறுதித்திட்ட பயனாளிகள் செ ய்ய அனுமதித்தது திட்டத்தை வீணடிக்கும் வேலையென்று சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர். இத்திட்டத்தில் வேலை செ ய்யும் பெரும்பாலான பொதுமக்கள் நேரத்தை கடத்தவும், ஊர்கூடி சமையல் செ ய்து சாப்பிடவும், ஓ ய்வெடுக்கவும், ஆ ய்வு நடைபெறும் போது நிலங்களை கூட்டிப்பெருக்கவும் மட்டுமே சென்று வருவதாக கூறுகின்றனர். இந்நிலையில் பண்ணைக்குட்டைகள் பணியையும் இதுபோன்ற பயனாளிகளிடம் ஒப்படைத்தால் சரியாக இருக்குமா என்று கேள்வி எழுப்பியுள்ளனர். வறட்சி நிவாரணத்திற்கு 1300 கோடி நிதிஒதுக்கிய அர", வறட்சியே ஏற்படாமல் தடுப்பதற்கும், கிடைக்கும் மழைநீரை சேமிக்கவும் நிதிஒதுக்கீடு செ ய்யலாமே என்கின்றனர். இவ்வாறு செ ய்தால் அனைத்து பகுதிகளிலும் விவசாயம் செழிப்பதோடு நீராதாரங்களும் வறண்டு போகாமல் இருக்க உதவும். விவசாயம் செழித்தால் வறட்சி என்ற வார்த்தைக்கு விடைகொடுத்து நஷ்டத்தை விரட்டவும், அர"க்கும் நிவாரணத்திற்காக கூடுதல் நிதிஒதுக்கீடுசெ ய்யவேண்டிய அவசியமில்லை.

## மண் பரிசோதனை முடிவுகள் தாமதம்: விவசாயிகள் வேதனை

உடுமலை :வேளாண்துறையில், மண் பரிசோதனை முடிவுகள் பல மாதங்கள் கழித்து வழங்கப்படுவதால், சாகுபடியில் நஷ்டத்தை சந்திப்பதாக விவசாயிகள் வேதனை தெரிவித்துள்ளனர். உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில், விவசாயம் பிரதானமாக உள்ளது. பி.ஏ.பி., அமராவதி மற்றும் கிணற்றுப்பாசனத்திற்கு விவசாயிகள் தென்னை

உட்பட நீண்ட கால பயிர்களையும், காய்கறி பயிர்களையும் பயிரிட்டு வருகின்றனர். தொடர்ச்சியாக விளைநிலத்தில் ஒரே வகையான பயிர்களை பயிரிடுவது, உரமேலாண்மையில் ஏற்படும் பிரச்னைகள் ஆகியவற்றால், விளைச்சல் பாதிக்கப்படுகிறது. ஒவ்வொரு சாகுபடியிலும் நஷ்டத்தை சந்திக்கும் விவசாயிகள் மண் பரிசோதனை செய்து அதன் முடிவுகளுக்கேற்ப உர, நீர் மேலாண்மையை மேற்கொள்ள வேண்டும் என வேளாண் துறை விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. இதனால், விவசாயிகள் மண் பரிசோதனை செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர். வேளாண் துறை வழிகாட்டுதல் அடிப்படையில், விளைநிலங்களில் குறிப்பிட்ட இடங்களில் மண் மாதிரிகளை எடுத்து மண் பரிசோதனைக்காக வேளாண் துறையில் சமர்ப்பிக்கின்றனர். இவ்வாறு, சமர்ப்பிக்கப்படும் மண் மாதிரிகளின் முடிவுகள் பல மாதங்கள் கழித்தே விவசாயிகளுக்கு கிடைப்பதாக புகார் எழுந்துள்ளது. மண் பரிசோதனை முடிவுகள் வரும் முன், சாகுபடி சீசன் துவங்குவதால், விவசாயிகள் தங்கள் வழக்கமான நீர் மற்றும் உர மேலாண்மையை மேற்கொள்கின்றனர். இதனால், வழக்கம் போல் விளைச்சல் சரிந்து விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. சமீபத்தில், உடுமலை அருகேயுள்ள ரெட்டிபாளையம் கிராமத்தில், வேளாண்துறை சார்பில், பல்வேறு விவசாயிகளிடம் மண் பரிசோதனைக்காக மண் மாதிரிகள் பெறப்பட்டுள்ளது. இந்த மாதிரிகளின் முடிவுகள் இதுவரை விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை.,இது குறித்து விவசாயிகள் கூறியதாவது: மண் பரிசோதனை முடிவுகள் மிக தாமதமாக வழங்கப்படுகிறது. எங்கள் பகுதியில் காய்கறி சாகுபடியில் தொடர்ந்து விளைச்சல் குறைந்து வருகிறது. இப்பிரச்னைக்காக, வேளாண்துறையிடம் மண் மாதிரிகளை வழங்கினோம். ஆனால், எவ்வித முடிவுகளும் தெரிவிக்கப்படவில்லை. இதனையடுத்து, பல விவசாயிகள் நிலத்தில் வெண்டை பயிரிட்டனர். மண்ணிலுள்ள பிரச்னைகள் காரணமாக செடிகள் அதிகளவு கருகி விட்டன. இதனால், ஏக்கருக்கு பல ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இந்த அவலத்தை தவிர்க்க வேளாண் துறையினர் மண் பரிசோதனை முடிவுகளை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு விவசாயிகள் கூறினர்.

### கறவை மாடுகளுக்கு தாது உப்பு அவசியம்

திருப்பூர் :"கறவை மாடுகளுக்கு தாது உப்புக்களை உணவில் கலந்து கொடுத்தால், பால் உற்பத்தி பெருகும்,' என, பயிற்சி முகாமில் தெரிவிக்கப்பட்டது. கால்நடை மருத்துவ

பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில், கறவை மாடு வளர்ப்பு பயிற்சி முகாம், திருப்பூரில் நேற்று நடந்தது. ஆராய்ச்சி மைய உதவி பேராசிரியர் ஹரிகரன் பேசியதாவது: கறவை மாடு உள்ளிட்ட கால்நடைகளுக்கு, தீவனம் மூலம் போதிய சத்து கிடைப்பதில்லை. தாது உப்பை, அவைகளுக்கு உணவு அல்லது நீருடன் கலந்து வழங்க வேண்டும். மார்க்கெட்டில் அதிக விலையாக உள்ளதால், அரசு தரப்பில், குறைந்த விலையில் தாது உப்பு விற்கப்படுகிறது. தாது உப்பு மூலம் கால்நடைகளுக்கு கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு சத்து, மெக்னீசியம், அயோடின் உள்ளிட்டவை கிடைக்கிறது. கறவை மாடுகளுக்கு 25 முதல் 30 கிராம் தாது உப்பு தினமும் கலந்து தரலாம். இதனால், ஊட்டச்சத்து அதிகரித்து, பால் உற்பத்தி பெருகும். தாது உப்பு குறைபாட்டால் உரிய காலத்தில் பருவத்துக்கு வராதது, கரு உற்பத்தி பாதிப்பு, கருத்தரிக்காமை போன்ற பாதிப்பு ஏற்படுகிறது. கறவை மாடுகளை தேர்ந்தெடுத்து வாங்க வேண்டும்; அதிக காய்ச்சல், அசை போடாத நிலை, சிலிர்த்த ரோமம், கண்களில் சிவப்பு, மூச்சு திணறல், கண்களில் நீர் வடிதல், மூக்கு வறண்டு வெடித்திருத்தல், சாணம் கெட்டியாக அல்லது கழிசலாக இருத்தல், அடிக்கடி சிறுநீர் கழிப்பது போன்ற பாதிப்பு இருந்தால், அம்மாடுகள் நோய்வாய்ப்பட்டவை; அவற்றை வாங்காமல் தவிர்க்க வேண்டும். ஜெர்ஸி கலப்பின பசுக்கள், முர்ராய் இன எருமைகள், அதிக பால் தரும். கால்சப்பை, வாய்சப்பை எனப்படும் கோமாரி நோயை தடுக்க, தடுப்பூசி போட வேண்டும். ஆறு மாதங்கள் இடைவெளியில், ஆண்டுக்கு இரண்டு முறை தடுப்பூசி போட்டால், கோமாரி நோயை தடுக்கலாம். பிறந்த கன்றுக்கு இரண்டு முதல் நான்கு மாதங்களில் ஒரு தடுப்பூசி, அடுத்த நான்கு மாதங்களில் ஒரு தடுப்பூசி கட்டாயம் போட வேண்டும். இவ்வாறு, அவர் பேசினார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## முட்டை விலை 10 காசுகள் சரிவு 315 காசுகளாக நிர்ணயம்



நாமக்கல்,

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை நேற்று ஒரே நாளில் 10 காசுகள் சரிவடைந்து, 315 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது.

முட்டை விலை சரிவு

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை கடந்த சில நாட்களாக 325 காசுகளாக நீடித்து வந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டையின் கொள்முதல் விலையை 10 காசுகள் குறைக்க முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 315 காசுகளாக சரிவடைந்து உள்ளது. பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:– சென்னை–328, ஐதராபாத்–308, விஜயவாடா, தனுகு–317, பார்வாலா–305, மும்பை–340, மைசூர்–322, பெங்களூர்–320, கொல்கத்தா–357, டெல்லி–319.

கறிக்கோழி கிலோ ரூ.58–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. நேற்று பல்லடத்தில் நடந்த கறிக்கோழி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கிலோவுக்கு ரூ.3 உயர்த்த முடிவு செய்தனர். எனவே கறிக்கோழி விலை கிலோ ரூ.61 ஆக உயர்ந்து உள்ளது. முட்டைக்கோழி கிலோ ரூ.58–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதன் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை.

காரணம் என்ன?

புரட்டாசி மாதம் பிறந்து உள்ளதால் இந்துக்கள் அசைவ உணவை தவிர்த்து வருகின்றனர். இதனால் தமிழகம் மற்றும் கேரளாவில் பொதுமக்களிடையே முட்டை நுகர்வு குறைந்து உள்ளது. அதே சமயம் பள்ளிகளுக்கு காலாண்டு விடுமுறை அளிக்கப்பட்டு உள்ளதால், சத்துணவு திட்டத்துக்கு சப்ளை செய்யப்படும் முட்டைகளும் தடைப்பட்டு உள்ளது. எனவே விற்பனையை அதிகரிக்க விலை குறைக்கப்பட்டு உள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

## தர்மபுரி மாவட்டத்தில் வேளாண் துறைகளை ஒருங்கிணைத்து விவசாய பணிகளை மேம்படுத்த நடவடிக்கை கலெக்டர் விவேகானந்தன் பேட்டி

தர்மபுரி மாவட்டத்தில் வேளாண்துறைகளை ஒருங்கிணைத்து அதன்மூலம் விவசாய பணிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன என்று கலெக்டர் விவேகானந்தன் கூறினார்.

**கலெக்டர் ஆய்வு**

தர்மபுரி மாவட்டத்தில் வேளாண்மைத்துறை, பட்டுவளர்ச்சித்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்பொறியியல் துறை ஆகியவற்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித்திட்டங்கள் குறித்து மாவட்ட கலெக்டர் விவேகானந்தன் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். தர்மபுரி அரசு பட்டுக்கூடு அங்காடி, கர்த்தாங்குளத்தில் அமைக்கப்பட்டுள்ள கசிவுநீர் குட்டை, போலனம்பள்ளி தோட்டக்கலை பண்ணை, மூக்கனூர்பட்டி தேசிய நுண்ணியிர் பாசன திட்டத்தின்கீழ் சாகுபடி செய்யப்பட்ட தோட்டக்கலை பயிர்கள், மொரப்பூர் ஒன்றியம் கோட்ரப்பட்டி அரூர் ஒன்றியம் செட்ரப்பட்டியில் சாமை காராமணி சாகுபடி, சொட்டுநீர் பாசனதிட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள தக்காளி தோட்டம் ஆகியவற்றை பார்வையிட்டுஇந்த பகுதியில் உள்ள கிராமங்களில் வேளாண்மை துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் குறித்தும் களஆய்வு நடத்தப்பட்டது. இந்த ஆய்வின்போது கலெக்டர் விவேகானந்தன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:- தமிழ்நாட்டில் நடப்பு நிதியாண்டில் 120 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் ஒரு பகுதியாக தர்மபுரி மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 1 லட்சத்து 74 ஆயிரத்து 650 ஹெக்டேரில் உணவு தானிய சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 3.181

லட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. விதை பெருக்கு திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில் 45,630 விவசாயிகள் இதுவரை பயனடைந்து உள்ளனர்.

**<u>நீர்வள, நிலவளத்திட்டம்</u>**

விவசாயத்தை முக்கிய தொழிலாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில் விவசாயப்பணிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட உள்ளன. இதற்காக வேளாண்மைதுறையின் அனைத்து பிரிவுகளையும் ஒருங்கிணைத்து செயல்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறோம். தர்மபுரி மாவட்டம் வெண்பட்டு உற்பத்தியில் தமிழக அளவில் முன்னிலையில் உள்ளது. இதனை மேலும் மேம்படுத்துவதற்கான பல்வேறு திட்டங்கள் பட்டுவளர்ச்சித்துறையின் மூலம் செயல்படுத்தப்பட உள்ளன. தர்மபுரி மாவட்டத்தில் 200 விவசாய குழுக்கள் உள்ளன. இந்த குழுக்களுக்கு நபார்டு திட்டம் மூலம் அனைத்து துறை திட்டங்கள் தொடர்பான கருத்தரங்கம் மற்றும் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

தர்மபுரி மாவட்டத்தில் வாசனை திரவியங்கள் தயாரிப்பதற்கான விவசாய மூலபொருட்கள் அதிக அளவில் உற்பத்தியாகின்றன. இவற்றை மதிப்பு கூட்டு பொருட்களாக மாற்றி சந்தை வாய்ப்பை பெருக்குவதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டம் காரிமங்கலம் ஒன்றியத்தில் 13 வருவாய் கிராமங்களிலும், மொரப்பூர் ஒன்றியத்தில் 17 வருவாய் கிராமங்களிலும் செயல்படுத்தப்பட உள்ளது.

**<u>கிராமங்களில் விழிப்புணர்வு</u>**

மாவட்டத்தில் உள்ள 10 பேரூராட்சிகளில் குப்பைகளில் இருந்து உரம் தயாரிக்கும் திட்டத்தை மேம்படுத்தி மண்புழு உரம் தயாரிக்கும் திட்டத்தை வேளாண் ஆராய்ச்சி மையத்தின் உதவியுடன் செயல்படுத்த உள்ளோம். தர்மபுரி மாவட்டத்தில் மானவாரி பயிர்களான கேழ்வரகு, சாமை, வரகு ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. வேளாண்மை பொறியியல் துறை சார்பில் பல்வேறு திட்டங்கள் மானிய உதவிகளுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த திட்டங்கள் தொடர்பாக கிராமசபை கூட்டங்கள் மூலமாக விவசாயிகள் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாறு கலெக்டர் விவேகானந்தன் கூறினார்.

இந்தஆய்வில் வேளாண்மை துணை இயக்குனர்கள் வேணுகோபால், மாது, பெருமாள், தோட்டக்கலை துணை இயக்குனர் கலைச்செல்வி, உதவி இயக்குனர்கள் ராஜேந்திரன், பாஸ்கரன், வேளாண்பொறியியல்துறை செயற்பொறியாளர் முருகேசன், டான்சில் தலைவர் மணிவண்ணன், பட்டுவளர்ச்சித்துறை மண்டல் இணை இயக்குனர் பன்னீர்செல்வம், உதவி இயக்குனர் நாராயணன் சந்தைஅலுவலர் ஞானசேகரன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.7½ லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனை

அம்மாபேட்டை,

பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.7½ லட்சத்துக்கு விவசாய விளைபொருட்கள் விற்பனையானது.

<u>விவசாய விளைபொருட்கள் ஏலம்</u>

அம்மாபேட்டை அருகில் உள்ள பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் விவசாய விளைபொருட்கள் ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்துக்கு அம்மாபேட்டை, அந்தியூர், பூதப்பாடி, சேலம் மாவட்டம் கொங்கணாபுரம் மற்றும் பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள் விளைபொருட்களை கொண்டு வந்திருந்தனர். தேங்காய் ஏலத்துக்கு விவசாயிகள் 2 ஆயிரத்து 514 தேங்காய்களை கொண்டு வந்திருந்தனர். இதில் சிறிய தேங்காய் ஒன்று 4 ரூபாய் 40 காசுக்கும், பெரிய தேங்காய் 11 ரூபாய் 50 காசுக்கும் என மொத்தம் ரூ.13 ஆயிரத்து 690–க்கு விற்பனையானது.

<u>கொப்பரை தேங்காய்</u>

கொப்பரை தேங்காய் 54 மூட்டைகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டு இருந்தது. இது குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக 4 ஆயிரத்து 809 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 5 ஆயிரத்து 459 ரூபாய்க்கும் என மொத்தம் ரூ.53 ஆயிரத்து 385–க்கு விற்பனையானது. நெல் 72 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தது. இதில் பொன்னி ரக நெல் குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக ரூ1,600–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.1,730–க்கும், ஏ.டி.டி.–39 ரக நெல் குறைந்தபட்ச விலையாக ரூ.1,384–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.1,538–க்கும் என மொத்தம் 72 ஆயிரத்து 138 ரூபாய்க்கு விற்பனையானது.

<u>ரூ.7½ லட்சத்துக்கு விற்பனை</u>

பச்சை நிலக்கடலை 433 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தது. இது குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக 2 ஆயிரத்து 40 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 2 ஆயிரத்து 700 ரூபாய்க்கும் என மொத்தம் 5 லட்சத்து 14 ஆயிரத்து 34 ரூபாய்க்கு விற்பனையானது.

மக்காச்சோளம் 35 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தது. இது குவிண்டால் ஒன்று குறைந்தபட்ச விலையாக ரூ1,536–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.1,552–க்கும் என 50 ஆயிரத்து 29 ரூபாய்க்கு விற்பனையானது. வெள்ளை எள் 9 மூட்டைகள் கொண்டு வரப்பட்டு இருந்தது. இது குறைந்தபட்ச விலையாக குவிண்டால் ஒன்று 10 ஆயிரத்து 169 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக 11 ஆயிரத்து 139 ரூபாய்க்கும் என மொத்தம் 57 ஆயிரத்து 175 ரூபாய்க்கு விற்பனையானது. அனைத்து விவசாய விளைபொருட்களும் 7 லட்சத்து 60 ஆயிரத்து 451 ரூபாய்க்கு விற்பனையானது. இந்த பொருட்களை ஈரோடு, சேலம், கோவை, விருதுநகர் பகுதிகளில் இருந்து வந்திருந்த வியாபாரிகள் வாங்கிச்சென்றனர்.

## உடுமலை அருகே வேளாண்மை மாணவிகளுக்கு இயற்கை விவசாய பயிற்சி



உடுமலை,

கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமான வானவராயர் வேளாண்மைக் கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த இறுதி ஆண்டு இளங்கலை வேளாண்மை மாணவிகளுக்கு வேளாண்மை மற்றும் இயற்கை உரம் தயாரிப்பு குறித்த பயிற்சி முகாம் கடந்த 15 நாட்கள் உடுமலையை அடுத்த மொடக்குப்பட்டி கிராமத்தில் நடைபெற்றது.

இதில் மாணவிகள் திவ்யபாரதி, இந்துமதி, ஜெனுஷியா, கவிதா, கிருத்திகா, கிருஷ்ணகுமாரி, லிபி அந்தோனி ஆகியோர் மண்புழு, கம்போஸ்ட், பஞ்சகாவ்யா, உயிர் உரம் ஆகிய இயற்கை விவசாயம் குறித்த நடைமுறை பயன்பாடுகள் பற்றி அறிந்து கொண்டனர்.

பயிற்சியில் உடுமலை தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் இளங்கோவன் கலந்து கொண்டு கொண்டு இயற்கை உரத்தின் பயன்பாடு குறித்து மாணவிகளுக்கு விளக்கி பேசினார். பயிற்சியின் முடிவில் மாணவிகள் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப் பட்டது.

## துவரை சாகுபடி செய்தால் கூடுதல் மகசூல் கிடைக்கும் வேளாண்மை இணை இயக்குனர் தகவல்

புதுக்கோட்டை,

விவசாயிகள் நடவு முறையில் துவரை சாகு படி செய்தால் கூடுதல் மகசூல் கிடைக்கும் என்று வேளாண்மை இணை இயக்குனர் தெரி வித்தார்.

விவசாயிகளுக்கு பயிற்சி

புதுக்கோட்டை மாவட்டத் தில் துவரை பயிர் சாகுபடி பரப்பை அதிகப் படுத்தவும் துவரை உற்பத்தித் திறனை அதிகப்படுத்தி கூடுதல் மகசூல் பெற்று பயறு உற்பத்தியினைப் பெருக்கிடும் நோக்கத்தோடு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், பயறு இயக்கத்தின் கீழ் நடவு முறையில் துவரை சாகுபடி எனும் புதிய தொழில்நுட்பம் மூலம் 110 எக்டேர் பரப்பளவில் செயல் விளக்கங்கள் அமைக்கப்பட உள்ளது. நடவு முறையில் துவரை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஒரு எக் டேருக்கு ரூ.7 ஆயிரத்து 500 மானிய மதிப்பில் தேவை யான இடுபொருட்கள் வழங் கப்படுகின்றன. நடவு முறையில் துவரை சாகுபடி செயல்விளக்கங்கள் அமைக்கும் விவசாயிகளுக்கு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில் முதல் கட்டமாக நடவு முறையில் துவரை சாகுபடி செயல் விளக்கம் அமைக்கும் அனைத்து வட்டாரத்தை சேர்ந்த 30 விவசாயிகளுக்கு குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத்தின் மூலம் வம்பன் வேளாண் அறிவியல் மையத்தில் பயிற்சி அளிக்கப் பட்டது.

கூடுதல் மகசூல்

இந்த பயிற்சியை புதுக் கோட்டை மாவட்ட வேளா ண்மை இணை இயக்குனர் ஷாஜகான் தொடங்கி வைத்து, விவசாயி களுக்கு தொழில் நுட்பம் குறித்த வழிகாட்டியை வழங்கி பேசினார். அவர் பேசுகையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் பெரும்பாலும் துவரைப்

பயிர் ஊடுபயிராக சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. துவரை மகசூல் சராசரியாக ஏக்கருக்கு 250 முதல் 350 கிலோ மட்டுமே பெறப்படுகிறது. துவரையில் கூடுதல் மகசூல் பெற்று உற்பத்தியை அதிகப்படுத்தும் நோக்கில் நடவு முறையில் துவரை சாகுபடி எனும் தொழில்நுட்பம் விவசாயிகளிடையே பிரபல மாகி வருகிறது. இதன் மூலம் ஏக்கருக்கு 1000 கிலோ வரை மகசூல் கிடைக்க வாய்ப் புள்ளது என்பதால், துவரைப் பயிரை நடவு முறையில் தனிப் பயிராக சாகுபடி செய்து கூடுதல் மகசூல் பெற வேண் டும், என்றார்.

<u>ஊக்கத்தொகை</u>

புதுக்கோட்டை மாவட்ட மாநில அரசுத் திட்ட வேளா ண்மை துணை இயக்குனர் பாலன், உழவர் பயிற்சி வேளாண்மை அலுவலர் எஸ்.ராஜசேகரன் ஆகியோர் பேசினர். வம்பன் வேளாண் அறிவியல் நிலைய தலைவர் மற்றும் பேராசிரியர் அசோகன் மற்றும் உதவி பேராசிரியர் கதிரவன் ஆகியோர் பயிற்சி அளித்தனர். வேளாண் இணை இயக்குனர் அலுவலக மத்திய திட்ட வேளாண்மை அலுவலர் ஜெகதீஸ்வரி பேசினார். பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு பயிற்சி ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. முடிவில் குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் ராஜசேகரன் நன்றி கூறினார்.

## கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி

ராமநாதபுரம்,

ராமநாதபுரம் மாவட்டத் தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற உள் ளது.

<u>கோமாரி தடுப்பூசி</u>

தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களிலும் தேசிய கால் மற்றும் வாய் கோமாரி நோய் தடுப்பூசி திட்டத்தின் கீழ் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் பணி நடைபெற்று வருகிறது. தற்போது ராமநாத புரம் மாவட்டத்தில் அனைத்து கிராமங்களிலும் உள்ள சுமார் 57,000 பசு மற் றும் எருமைகளுக்கு தடுப்பூசி போடப்பட உள்ளது. இதற் கான மருந்துகள் தயார் நிலை யில் வைக்கப்பட்டுள்ளது. மேலும் இதுதொடர்பாக கிராம விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகை யில் சிறப்பு கிராமசபை கூட்டம் நடத்தப்பட உள் ளது.

கால் மற்றும் வாய் கோமாரி நோயானது கலப்பின மாடு களை அதிகம் தாக்கக் கூடி யது. இந்த நோயினால் இறப்பு விகிதம் குறைவாக இருந்த போதிலும் கறவை மாடுகளில் பால்

உற்பத்தி குறைவு, எருது களின் வேலைத்திறன் குறைவு, சினை பிடிப்பு தடைபடுவது, இளங்கன்றுகள் இறப்பு போன்ற பாதிப்புகள் ஏற்படும். மேலும் இந்த நோய் குளிர் மற்றும் பனிக்காலங்களிலும், சுகாதாரமற்ற கால்நடை வளர்ப்பு, தடுப்பூசி போடாமல் இருத்தல், காற்று, பாதிக்கப் பட்ட மாடுகளின் சிறுநீர், பால், உமிழ்நீர், சாணம் போன் றவற்றின் மூலம் பரவுகிறது. எனவே விவசாயிகள் தங்களது கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டு பாதுகாத்துக் கொள் ளலாம்.

<u>கால்நடை முகாம்</u>

ராமநாதபுரம் மாவட்டத் தில் வருகிற 1-ந்தேதி முதல் கால்நடை பாதுகாப்பு முகாம் கள் நடைபெற உள்ளது. இதன் படி வருகிற 1-ந்தேதி போக லூர் யூனியன் பைரவனேந்தல் கிராமத்திலும், 4-ந்தேதி கட லாடி யூனியன் புனவாசல் கிராமத்திலும், 5-ந்தேதி நயி னார் கோவில் யூனியன் சிறு வயலிலும், மண்டபம் யூனிய னில் பிரப்பன்வலசையிலும், 8-ந்தேதி திருப்புல்லாணி யூனி யன் காவல்காரன்வலசை, ராமநாதபுரம் யூனியன் கலை யனூர், ஆர்.எஸ்.மங்கலம் யூனியன் பனிக்கோட்டை ஆகிய கிராமங்களிலும், 9-ந் தேதி திருவாடானை யூனியன் சிறுமலைக்கோட்டையிலும் முகாம் நடைபெற உள்ளது. இதேபோல 11-ந்தேதி கட லாடி யூனியன் உச்சிநத்தத்தி லும், ராமநாதபுரம் யூனியன் கழுவூரணி கிராமத்திலும், 12-ந்தேதி மண்டபம் யூனியன் அருப்புக்காடு கிராமத்திலும், 14-ந்தேதி நயினார் கோவில் யூனியன் எஸ்.வி.மங்கலத்தி லும், 17-ந்தேதி மண்டபம் யூனி யன் ராமேசுவரத்தை அடுத் துள்ள தெற்கு கரையூர், ராம நாதபுரம் யூனியன் காரேந்தல், திருவாடானை யூனியன் மாவூர் ஆகிய ஊர்களிலும், 18-ந்தேதி ஆர்.எஸ்.மங்கலம் யூனியன் சாத்தனூரிலும், 21-ந் தேதி பரமக்குடி யூனியன் ஏனாதிக்கோட்டையிலும், 22-ந்தேதி திருப்புல்லாணி யூனியன் புதுமாயாகுளத்தி லும், 28-ந்தேதி நயினார்கோ வில் யூனியன் தேத்தங்கல் கிரா மத்திலும், 30-ந்தேதி கமுதி யூனியன் டி.வி.எஸ்.புரம், பர மக்குடி யூனியன் வாலான்குடி ஆகிய ஊர்களிலும் கால்நடை பாதுகாப்பு முகாம் நடைபெற உள்ளது.

தினகரன்

**நெல் கொள்முதல் ஆதார விலை குவிண்டாலுக்கு ரூ.70 வரை உயர்வு**




சென்னை : நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை நிர்ணயம் செய்ய தலைமை செயலகத்தில் முதல்வர் ஜெயலலிதா தலைமையில் நேற்று ஆய்வு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கை: நெல் பயிரிடும் விவசாயிகளின் நலன்களை கருத்தில் கொண்டு, சாதாரண நெல்லுக்கு குவிண்டால் ஒன்றிற்கு மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள 1,310 ரூபாயுடன் கூடுதலாக தமிழக அரசின் சார்பில் ரூ.50 வழங்கவும், சன்ன ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றிற்கு மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள 1,345 ரூபாயுடன் கூடுதலாக தமிழக அரசின் சார்பில் ரூ.70 வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன். இதன்படி, சாதாரண நெல்லுக்கு குவிண்டால் ஒன்றிற்கு 1,360 ரூபாயும், சன்ன ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றிற்கு 1,415 ரூபாயும் அக்டோபர் 1ம் தேதி முதல் வழங்கப்படும்.

மேலும், நெல் விளையும் பூமியான காவிரி பாசன பகுதிகளில், தேவைக்கேற்ப நேரடி கொள்முதல் நிலையங்களை திறக்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு அனுமதி வழங்குமாறு அந்தந்த மாவட்ட ஆட்சி தலைவர்களுக்கு உத்தரவிட்டுள்ளேன். காவிரி பாசன பகுதி அல்லாத இடங்களில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், கூட்டுறவு விற்பனை சங்கங்கள் மற்றும் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் நேரடி நெல்

கொள்முதல் நிலையங்களை திறக்க அனுமதி வழங்கப்படும். இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

## பெரியாறில் புதிய அணை கட்ட தமிழக விவசாயிகளிடம் ஆதரவு கேட்டு வந்த கேரள போராட்ட குழு



கூடலூர் : கேரளாவை சேர்ந்த முல்லைப் பெரியாறு போராட்டக்குழு தலைவர் பாதிரியார் சி.பி.ராய் தலைமையில் 4 பேர் கொண்ட குழு தேனி மாவட்டம் கம்பத்திற்கு வந்தது. கேரள குழு இந்த பேச்சுவார்த்தை குறித்து தமிழக, கேரள அரசுகளுக்கு எவ்வித தகவலும் தெரிவிக்கவில்லை. கம்பத்தில் 5 மாவட்ட விவசாயிகள் சங்கத் தலைவர் அப்பாசை சந்தித்தது. அப்போது இப்பகுதியை சேர்ந்த விவசாய சங்கத் தலைவர்களும் உடனிருந்துள்ளனர்.

கேரளாவை சேர்ந்த குழுவினர் கூறுகையில், 'பெரியாறு கரையோர குடியிருப்பில் வாழும் 5 ஆயிரம் குடும்பங்கள் அணை உடைந்து விடுமோ என்ற அச்சத்தில் உள்ளனர். இதனால் பெரியாற்றில் புதிய அணை கட்டவேண்டும், புதிய அணை கட்டினாலும் தமிழகத்துக்கு எப்போதும்போல் தண்ணீர் தருவோம். எனவே தமிழக விவசாயிகள் புதிய அணை கட்ட ஆதரவு தர வேண்டும்' என்றனர்.

இதற்கு பதில் அளித்து தமிழகத்தை சேர்ந்த முல்லைப்பெரியாறு அணை மீட்புக்குழு தலைவர் ரஞ்சித்குமார் பேசியது: பெரியாறு அணையின் பலம் குறித்து கேரள அரசுக்கும், கேரள பொறியாளர்களுக்கும் நன்கு தெரியும். கேரள மக்களுக்கு அணை குறித்த அச்சம் இருந்தால் தமிழகத்தில் ஓய்வு பெற்ற பொதுப்பணித் துறை உயரதிகாரிகளை அழைத்து வந்து அச்சத்தைப்போக்குவோம்.

பெரியாறு கரையோர குடியிருப்பில் உள்ள 5 ஆயிரம் குடும்பங்கள் மீது கேரள அரசுக்கும், போராட்டக்குழுவினருக்கும் உண்மையான அக்கறையிருந்தால் பெரியாறு அணை பலப்படுத்தும் பணிகளுக்கும், மராமத்து பணிகளுக்கும் ஒத்துழைப்பு தாருங்கள். இவ்வாறு அவர் பேசினார். பிற தமிழக விவசாயிகள் சங்க தலைவர்களும் இதே கருத்தை வலியுறுத்தினர். இதனால் கேரள போராட்டக்குழுவினர் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர்.

எக்ஸ்ட்ரா தகவல் பெரியாறு அணை பிரச்னையில் கடந்த 2006ல் உச்சநீதிமன்றத்தில் தமிழகத்துக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது. அப்போது இருந்தே தினமும் ஒரு பிரிவினர் வீதம் பெரியாறு அணை போராட்டக் குழுவினர் தொடர் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

## 50 ஆயிரம் மரக்கன்று நடும் பணி துவக்கம்

சின்னசேலம், : விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி கோட்டப்பகுதியில் கோமுகி வன சரகம் மற்றும் சமூக காடு வளர்ப்பு துறை சார்பில் 50 ஆயிரம் மரக்கன்று களை நடும் பணி கோமுகி வனசரகர் கொளஞ்சியப்பா தலைமையில் நேற்று துவங்கியது. கோமுகி வளாகம், கச்சிராயபாளையம்- சின்னசேலம், கடுவனூர்- மூங்கில்துறைப்பட்டு உள் ளிட்ட 10க்கும் மேற்பட்ட சாலை பகுதிகளில் வேம்பு உள்ளிட்ட மரங்கள் நடும் பணி நடந்து வருகிறது. இதனால் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுவதுடன், சுத்தமான காற்று, மண் அரிப்பு போன்றவை தடுக்கப்படும். இது பொதுமக்கள் இடையே வரவேற்பை பெற்றுள் ளது.
இம்முறைகளை பல்வேறு பகுதிகளிலும் நடைமுறைப்படுத்த சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## யூகலிப்டஸ் மரங்கள் வெட்டும் பணி துவக்கம்

ரிஷிவந்தியம், : ரிஷிவந்தியம் ஒன்றியம் பகண்டைகூட்ரோடு அடுத்த அத்தியூர் வனப்பகுதியில் யூகலிப்டஸ் மரங்கள் வெட்டும் பணி தொடங்கியுள்ளது. விழுப்புரம் மாவட்டம் ரிஷிவந்தியம் அருகே உள்ள கடுவனுர், சங்கராபுரம் சரக வனப்பகுதியில் சுமார் 3500 ஹெக்டேர் நிலப்பரப்பில் வனத்தோட்ட கழகத்தின் மூலம் யூகலிப்டஸ் மரங் கள் வளர்க்கப்படுகின் றன. இந்த பகுதியில் உள்ள இயற்கை காடுகளை

அழித்து சமூக காடு வளர்ப்பு திட்டத் தின் கீழ் வியாபார நோக்கில் யூகலிப்டஸ் மரங்கள் வனத்துறையால் பாதுகாக்கப்படுகிறது. ரிஷிவந்தியம், சங்கராபுரம் பகுதியில் உள்ள நர்சரி பண்ணைகளில் யூகலிப்டஸ் மர விதைகன்று, ஒட்டுகன்று ஆகிய முறை களில் உற்பத்தி செய்யப்படுகிறது. பின்னர் வனப் பகுதிக்கு சொந்தமான இடத் தில் நடப்பட்டு பராமரிப்பு செய்யப்படும். பின் னர் ஒரு வருடம் வரைடிராக்டர்கள் முலம் தண்ணீர் விடப்படுகிறது. தொடர்ந்து ஐந்து ஆண்டு கள் கழித்து நன்றாக வளர்ந்த மரங்கள் ஒப்பந்ததாரர்கள் மூலம் வெட்டப்படுகிறது. இந்நிலையில் அத்தியூர் வனப்பகுதியில் முதிர்ந்த நிலையில் உள்ள யூகலிப்டஸ் மரங்கள் வெட்டப்பட்டது. மரக்கட்டைகளில் தோள் உரிப்பதற்கு தனியாக இயந்திரத்தின் மூலம் உரிக்கப்படுகிறது. அதன்பின் கட்டைகள் லாரிகள் மூலம் கருர் மாவட்டத்தில் உள்ள அரசு காகித தொழிற்சாலைக்கு அனுப்பப்படுகிறது.

இதன்மூலம் அதிக வருவாய் வனத்தோட்ட கழகத்தின் முலம் அரசுக்கு கிடைத்து வருகிறது. வன காப்பாளர்கள். வனக்காவலர்கள் பணிகளுக்கு அதிக இடம் காலியாக உள்ளதால் பணிகள் பாதிக்கப்படுகிறது. எனவே காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டுமென கோரிக்கை எழுந்துள்ளது.

### சிறுவாணி அணையில் மழை ஓய்ந்தும் உபரிநீர் வெளியேற்றம்

கோவை, : சிறுவாணி அணை நீர் பிடிப்பு பகுதியில் மழை ஓய்ந்தது. இருப்பினும் அணையில் உபரி நீர் வெளியேற்றம் நீடிக்கிறது.கோவை மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள சிறுவாணி அணை கடந்த மாதம் 1ம் தேதி நிரம்பியது. அணையில் இருந்து 7 செ.மீ உயரத்திற்கு நீர் வெளியேற்ற பாதை வழியாக உபரி நீர் வழிந்தோடியது. கடந்த மாதம் 14ம் தேதி வரை அணையிலிருந்து நீர் தொடர்ந்து உபரியாக வெளியேறியது. இந்நிலையில் அணையின் நீர் பிடிப்பு பகுதியில் மழை ஓய்ந்து, உபரி நீர் வெளியேற்றம் கட்டுபாட்டிற்குள் வந்தது. படிப்படியாக அணையின் நீர் மட்டம் குறைந்து வந்தது. அணையின் நீர் மட்டம் 16 செ.மீ வரை குறைந்தது. இந்நிலையில், அணையின் நீர் பிடிப்பு பகுதியில் மீண்டும் மழை பெய்தது. ஒரே வாரத்தில் அணையின் நீர் மட்டம் மீண்டும் உயர்ந்தது. கடந்த மாதம் 16ம் தேதி அணை நிரம்பி வழிந்தது. கடந்த 2 நாளாக அணையின் நீர் பிடிப்பு பகுதியில் மழை பெய்யவில்லை. இருப்பினும் அணையிலிருந்து 10 செ.மீ உயரத்திற்கு நீர் வழிந்து உபரியாக சிறுவாணி ஆற்றில் பாய்கிறது. கடந்த 9

நாளில் அணையிலிருந்து சுமார் 200 கோடி லிட்டர் தண்ணீர் உபரியாக வெளியேறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

## கணினி மூலம் பயிர்களுக்கு சொட்டு நீர்பாசனம் வேளாண் மையத்தில் விளக்கம்

திண்டுக்கல்: ஒவ்வொரு பயிருக்கும் குறிப்பிட்ட இடைவெளியில் எவ்வளவு லிட்டர் நீர் சென்றடைய வேண்டும் என கணினி மூலம் வடிவமைக்கப்பட்டு, சொட்டுநீர் பாசனம் மூலம் விவசாயம் மேற்கொள்ளலாம் என திண்டுக்கல்லில் நடந்த பசுமை வேளாண் மையத்தில் விளக்கம் அளிக்கப்பட்டது.

திண்டுக்கல் திருச்சி பைபாஸ் அருகே பசுமை வேளாண் மையம் துவங்கப்பட்டுள்ளது. சொட்டுநீர் பாசன கருவிக்கான உதிரிபாகங்கள் ஒரே இடத்தில் கிடைக்கும்வகையிலும், அரசு மானியத்தில் சொட்டுநீர் பாசனம் அமைக்கும் விவசாயிகளுக்கு வட்டார அளவில் தொடர் பயிற்சி முகாம் அமைக்கும் நோக்கிலும் இந்த மையம் துவங்கப்பட்டுள்ளது. கலெக்டர் வெங்கடாசலம் தலைமை வகித்து துவக்கிவைத்தார். வேளாண்மை இணை இயக்கநர் மனோகரன், கண்காணிப்பொறியாளர் தெய்வேந்திரன், தோட்டக்கலை துணை இயக்குநர் சந்திரசேகரன், பொறியியல்துறை செயற்பொறியாளர் ராஜேந்திரன் கலந்துகொண்டனர்.

சொட்டுநீர்பாசனத்தில் ஏற்படும் சந்தேகங்களை இங்கு வந்து நிவர்த்தி செய்து கொள்ளலாம். சொட்டுநீர் பாசனக்கருவிகளில் உப்பினால் அடைப்பு ஏற்பட்டால் அமிலசிகிச்சை செய்வது, நவீன கணினி செட்டிங்ஸ் மூலம் ஒவ்வொரு பயிருக்கு எவ்வளவு லிட்டர் நீர், எவ்வளவு இடைவெளியில் சென்றடைய வேண்டும் என்று பதிவு செய்து அதற்கேற்ப நீர்பாய்ச்சுவது உள்ளிட்ட பல்வேறு[a] தாழில் நுட்ப விளக்கங்கள் விவசாயிகளுக்கு இங்கு இலவசமாக அளிக்கப்படும் என கூறப்பட்டது. சொட்டுநீர் பாசன நிறுவன பிரதிநிதிகள் அன்பழகன், ஈஸ்வரமூர்த்தி, தண்டபாணி, கோபால் கலந்துகொண்டனர்.

## பாலாறு அணையில் இருந்து 75 கனஅடி தண்ணீர் திறப்பு பழநி நகராட்சி நிர்வாகம் கொதிப்பு

பழநி: பழநி நகருக்கு கொடைக்கானல் சாலையில் உள்ள நீர்தேக்கத்தில் இருந்தும், பாலசமுத்திரம் அருகே உள்ள பாலாறு அணையில் இருந்தும் குடிநீர் பெறப்படுகிறது.

போதிய மழை பெய்யாதநிலையில் பாலாறு அணையில் இருந்து விவசாயத்திற்கு நீர் திறக்கப்பட்டது. இதனால் அணை வறண்டு பஞ்சம் ஏற்பட்டது. போதிய குடிநீர் விநியோகம் செய்ய முடியாத நிலையில் தனியார் கிணறுகளில் இருந்து லாரிகள் மூலம் குடிநீர் பெறப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வந்தது.

கடந்த சில தினங்களுக்கு முன்பு மேற்கு தொடர்ச்சி மலையில் பெய்த ம¬ழையின் காரணமாக பாலாறு அணைக்கு நீர் வரத்து உள்ளது. இதனால் 65 அடி கொள்ளளவு கொண்ட பாலாறு அணையில் தற்போது 35 அடிக்கு நீர் இருப்பு உள்ளது. இதற்கிடையே திடீரென அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. விவசாயத்திற்கு திறந்து விடப்பட்டதா அல்லது குடிநீர் தேவைக்கு திறந்து விடப்பட்டதா என்ற சந்தேகத்தில் நகராட்சி நிர்வாகம் கொதிப்படைந்துள்ளது.

இதுகுறித்து பழனி நகர்மன்றத்தலைவர் வேலுமணி கூறுகையில், ‘‘அணையில் இருந்து விவசாயத்திற்குதான் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. பொதுப்பணித்துறையினர் சார்பில் 75 கன அடி நீர் மட்டுமே திறந்த விடப்படுகிறது என கூறுகின்றனர்.நிர்ப்பந்தம் காரணமாக அணையில் நீர் திறந்து விடப்படுகிறது. பழநி நகருக்கு மீண்டும் குடிநீர் பஞ்சம் ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. அணையில் இருந்து நீர் திறப்பது நிறுத்தப்பட வேண்டும்,’’என்றார்.

### மாநில வன உயிரின வாரவிழா

திருப்புத்தூர்: மாநில வன உயிரின வார விழாவை முன்னிட்டு திருப்புத்தூர் ஆறுமுகம்பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட அளவில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு ஓவியப்போட்டி, பேச்சப்போட்டி நடந்தது. போட்டியை மாவட்ட வன அலுவலர் சொர்ணப்பன் தலைமை வகித்து துவக¢கி வைத்தார். திருப்புத் தூர் வனச்சரகர் சண்முகம் வரவேற்றார். மாவட்ட அளவில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக¢கான ஓவியப்போட்டி, பேச்சுப்போட்டி நடந்தது. இதில் சுமார் 200க¢கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர். ஓவியப்போட்டிக¢கு நடுவர்களாக ஆசிரியர்கள் பூண்டி ஜெயராஜ், செந்தில்குமார், முத்துப்பாண்டியன், பேச்சுப்போட்டிக¢கு ஆசிரியர்கள் கண்ணதாசன், தமிழரசன், நாகரத்தினம், மீனாட்சிசுந்தரம், கல்லூரி பேராசிரியர்கள் மரியரத்தினம், அமல்ராஜ் ஆகியோர் பங்கேற்றனர்.

ஓவிய போட்டியில் ஆறாவயலை சேர்ந்த தீபதர்ஷினி, கோவிலூரை சேர்ந்த அன்புகṭகண்ணன், புகழேந்தி, காரைகṭகுடியை சேர்ந்த முத்துகṭகுமார் ஆகிய பள்ளி மாணவர்களும், காரைகṭகுடியை சேர்ந்த சதாம், அமராவதிபுதுரை சேர்ந்த வீரமுத்து ஆகிய கல்லூரி மாணவர்களும் வெற்றி பெற்றனர். மானமதுரையை சேர்ந்த முத்துமாரி, திருப்புத்தூரை சேர்ந்த அபனா பானு, தேவகோட்டையை சேர்ந்த ஷர்மிளா தேவி ஆகியோர் பேச்சுப்போட்டியிலும் வெற்றி பெற்றனர். வெற்றி பெற்ற அனைவரும் அகṭ.8ம் தேதி சென்னை கிண்டி சிறுவர் பூங்காவில் நடைபெற உள்ள மாநில அளவிலான போட்டியில் பங்கேற்க உள்ளனர்.

## மருதூர் அணை கீழக்கால் திறப்பு சிவகளை குளத்திற்கு தண்ணீர் வந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி

ஏரல்: தாமிரபரணி ஆற்றில் மருதூர் கீழக்கால் மூலம் 7ஆயிரத்து 785 ஏக்கர் நிலங்கள் பயன்பெறுகிறது. இதில் தோழப்பன்பண்ணை குளம், பட்டர்குளம், ஸ்ரீவைகுண்டம், பேரூர், சிவகளை, பெருங்குளம் உட்பட குளங்கள் மூலம் 4 ஆயிரத்து 815 ஏக் கர் நிலங் கள் பயன்பெறுகின்றன. இக்குளங்கள் எல்லாம் தூர்வாரப்படாததால் நாள டைவில் மணல் மேடாகி, குளங்களில் அதிகளவு தண் ணீரை சேமிக்க முடி யாமல் போனது. இதனால், இப்பகுதியில் ஒருபோக விளைச்சலுக்கே விவசாயி கள் கடந்த 10 ஆண்டுகளாக தொடர்ந்து போராடி வருகின்றனர். பெரும்பாலான இடங்களில், விவசாயிகள் தங்கள் நிலங்களை தரிசாக போட்டுள்ளதால் அவற்றில் உடைமரங்கள் வளர்ந்துள்ளன. மேலும், கடந்த 2 வருடங்களாக குளத்தில் ஒரு சொட்டு தண்ணீரே இல்லா மல் வறண்டு போனது. இதனால் குளத்தில் உடைமரங்கள் தளிர்த்து குளங்களும் காடாக மாறின.

இந்நிலையில், கடந்த வாரம் மருதூர் அணை கீழக்காலில் உள்ள பாசன குளங்களுக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இத்தண்ணீர் தோழப்பன்பண்ணை குளம், பட்டர்குளம், ஸ்ரீவை, பேரூர் உட்பட குளங்கள் வழியாக சிவகளை குளம் வரை வந்துள்ளது. இதனால் இப்பகுதிகளில் வாழை போட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும், நிலத்தடி நீரும் தற்போது உயர்ந்து வருகிறது.

சிவகளை குளம் நிரம்பியதும் இரண்டு நாட்களில் மறுகால் மூலம் தண்ணீர் கடைசி குளமான பெருங்குளம் வந்து சேரும் என விவசாயிகள் எதிர்பார்த்து கொண்டுள்ளனர். இருந்தாலும் மணல் மேடாகியுள்ள இப்பகுதி குளங்களை எல்லாம் தூர்வாரி ஆழப்படுத்தினால் தான் இப்பகுதி விவசாய நிலங்களுக்கு போதுமான தண்ணீரை குளங்களில் சேமிக்க முடி யும். எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இக்குளங்களை எல்லாம் தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஓமலூரில் தொடரும் கறவை மாடுகள் பலி அதிகாரிகள் அலட்சியத்தால் விவசாயிகள் வேதனை

ஓமலூர், : ஓமலூர் பகுதியில் விவசாய தொழிலுடன் கால்நடைகள் வளர்ப்பும் பிரதானமாக உள்ளது. ஓமலூர் வட்டத்தில் மட்டும் சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. கடந்த சில நாட்களாக மர்ம நோயால், கறவை மாடுகள் பாதிப்படைவதும், உயிரிழப்பதும் தொடர்ந்து நடந்த வண்ணம் உள்ளது. ஓமலூர் அருகேயுள்ள பள்ளக்காட்டூர் பகுதியை சேர்ந்த விவசாயி பெருமாள் என்பவருக்கு சொந்தமான 2 கறவை மாடுகள் அடுத்தடுத்து உயிரிழந்தன. இந்நிலையில் அவருக்கு சொந்த மான கன்றுக்குட்டி ஒன்றும் உயிரிழந்தது. மேலும், அதேபகுதியை சேர்ந்த விவசாயி கோவிந்தன் என்பவரது கறவை மாடு மற்றும் கன்றுக்குட்டியும் நோய் தாக்குதலால் பாதிக்கப்பட்டிருந்து நிலையில் உயிரிழந்தன. மூன்று நாட்களில் 5 கறவை மாடுகள் உயிரிழந்து விட்ட நிலையில் சம்பந்தப்பட்ட கிராமங்களில் எவ்வித பாதுகாப்பு நடவடிக்கையும் இதுவரை தொடங்கப்படவில்லை. பிரேத பரிசோ தனை ஏதும் செய்யாமலே மாடுகளின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. கால்நடைகள் பலியாவதால் வேதனை அடைந்துள்ள விவசாயிகள் இதை தடுக்க நடவடிக்கை எடுக்காமல் கால்நடைத்துறை அதிகாரிகள் அலட்சியமாக இருப்பதாக குற்றம்சாட்டுகின்றனர்.

## 32,500 ஏக்கர் பாசனவசதி பெறும் மேட்டூர் உபரிநீர் கால்வாய் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் விவசாயிகள் வலியுறுத்தல்

சேலம், :தமிழகத்தில் 32.500 ஏக்கர் பாசன வசதிக்கு பயன்படும் மேட்டூர் அணை உயர்மட்ட உபரிநீர் கால்வாய் திட்டத்தை துரித கதியில் செயல்படுத்த வேண்டும் என்று

தமிழக விவசாயிகள் கட்சி கோரிக்கை வைத்துள்ளது. தமிழகத்தில் டெல்டா மாவட்டங்களின் பாசனத்திற்கு மேட்டூர் அணை நீரே பயன்படுகிறது. சேலம் மாவட்டத்தில் மேட்டூர் அணை இருந்தாலும் சேலம் மற்றும் அதைச்சுற்றியுள்ள மாவட்டங்களுக்கு அணைநீரால் எந்த பயனும் இல்லை. இந்நிலையில் மேட்டூர் அணையிலிருந்து உபரியாக வெளியேறி கடலில் கலக்கும் நீரை, சேலம் உட்பட 4மாவட்டங்களின் பாசனத்திற்கு திருப்பி விடும் வகையில் திட்டம் செயல்படுத்த வேண்டும் என்று விவசாயிகள் பல வருடங்களாக கோரிக்கை வைத்து வருகின்றனர். சமீபத்தில் இது குறித்து ஆய்வு செய்ய தமிழக அரசு முதற்கட்டமாக ரூ.50 லட்சம் ஒதுக்கியுள்ளது. இந்த திட்டத்தை துரிதகதியில் செயல்படுத்த வேண்டும் என்று தமிழக விவசாயிகள் கட்சி கோரிக்கை வைத்துள்ளது.

இது குறித்து தமிழக விவசாயிகள் கட்சி மாநில தலைவர் ராமராஜன் கூறியதாவது: அணை கட்டப்பட்டு 79ஆண்டுகளில் 37முறை 120 அடிக்கும் அதிகமாக நிரம்பியுள்ளது. இந்த வகையில் இதுவரை கோடிக்கணக்கான லிட்டர் நீர் வீணாக கடலில் கலந்துள்ளது. தற்போது இதை தடுக்கும் வகையில் உயர்மட்ட உபரிநீர் கால்வாய் திட்டத்தை செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக முதற்கட்ட ஆய்வு பணிகளுக்கு ரூ.50லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டம் நிறைவேறினால் சேலம், நாமக்கல், திருச்சி, பெரம்பலூர் மாவட்டங்களில் உள்ள 32ஆயிரத்து 500ஏக்கர் நிலம் பாசனவசதி பெறும். இதனால் விவசாயத்தை நம்பியுள்ள லட்சம் குடும்பங்கள் பயன்பெறும். எனவே இந்த திட்டத்தை துரிதகதியில் செயல்படுத்த தமிழக அரசின் பொதுப்பணித்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் உரமானியம் ரத்து, சிறுவிவசாய கடன் தள்ளுபடி முறைகேடுகள், விளைபொருட்களுக்கு உரிய விலை நிர்ணயம் இல்லாமை போன்றவற்றால் விவசாயிகள் மிகவும் அவதிப்பட்டு வருகின்றனர்.

எனவே மத்திய அரசு இந்த நிலையை மாற்ற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு ராமராஜன் தெரிவித்தார். மாநில செயலாளர் மணிவேலு, மூக்கனேரி விவசாயிகள் சங்கத்தை சேர்ந்த குருமூர்த்தி மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## மழையின்மையால் வெங்காய உற்பத்தி குறைந்தது

தர்மபுரி, : தர்மபுரி மாவட்டத்தில் இந்தாண்டு மழை குறைந்ததால் வைகாசி பட்டத்தில் சின்ன வெங்காயம் உற்பத்தி குறைந்துள்ளது. இதனால் வியாபாரிகள் வெளியூரில் இருந்து வெங்காயம் வாங்கி வந்து விற்பனை செய்கின்றனர். தர்மபுரி மாவட்டத்தில் அதகபாடி, ஆட்டுகாரம்பட்டி, பாலக்கோடு, புலிகரை, சோமனஅள்ளி ஆகிய பகுதிகளில் சின்ன வெங்காயம் பயிரிடப்படுகிறது. வைகாசி பட்டத்தில் பயிரிட்ட வெங்காயப்பயிருக்கு ஆனி, ஆடியில் போதிய மழை தர்மபுரி மாவட்டத்தில் பெய்யாததால் புரட்டாசி அறுவடையில் விளைச்சல் குறைந்துவிட்டது. இதனால் ஆட்டுக்காரம்பட்டி பகுதியில் மொத்த விற்பனையாளர்கள் திருச்சி, ராசிபுரம், உடுமலை, மைசூர் போன்ற பகுதிகளில் இருந்து சின்ன வெங்காயத்தை வாங்கி வந்து தரம் பிரித்து தர்மபுரி மார்க்கெட்டிற்கு அனுப்பி வைக்கின்றனர். கடந்த சில நாட்களாக ராசிபுரம் மற்றும் திருச்சி பகுதியில் இருந்து சின்னவெங்காயத்தை விற்பனைக்காக வாங்கி வருகின்றனர்.

இதுபற்றி ஆட்டுகாரம்பட்டி வெங்காய மொத்த வியாபாரி மாது கூறும் போது, வைகாசி பட்டத்தில் விதைக்கப்பட்ட வெங்காய பயிருக்கு போதிய மழை பெய்யாததால் தர்மபுரி மாவட்டத்தில் விளைச்சல் பாதியாக குறைந்துவிட்டது. தற்போது திருச்சி பகுதியில் இருந்து சின்ன வெங்காயத்தை கிலோ ஸி30க்கு வாங்கி தரம் பிரிக்கிறோம். தரம் பிரிக்கப்பட்ட சின்ன வெங்காயத்தை உலர வைத்து கிலோ ஸி35 முதல் 40 வரை விற்பனை செய்கிறோம். சின்னவெங்காயத்தின் தேவை அதிகரிப்பால் தற்போதைக்கு விலை குறைய வாய்ப்பில்லை. கார்த்திகை பட்டத்தில் சின்ன வெங்காயம் பயிரிடப்படும், அதன் அறுவடை தை மாதத்தில் கிடைக்கும் போது தான் விலை குறையும். அதுவரை சின்ன வெங்காயத்தின் விலை குறையாது என கூறினார். தர்மபுரி மார்க்கெட்டில் சின்ன வெங்காயம் சில்லரை விலையில் ஸி60க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதே போல் பெரிய வெங்காயம் ஸி45க்கு விற்பனை செய்யப்படுகிறது.

## விளைச்சல் குறைவால் சின்ன வெங்காயம் விலை அதிகரிப்பு 3 மாதத்திற்கு பின் விலை சரிய வாய்ப்பு

தர்மபுரி: கண்ணில் நீர் வரவழைக்கும் வெங்காயம் உணவில் முக்கிய இடம் பிடிக்கிறது. வெங்காயம் நாள் தோறும் சாம்பார், ஆம்லெட், தோசை, கூழ், பழைய சோறு, தயிர்

பச்சடி, பிரியாணி, கீரை ரகங்கள் உள்ளிட்ட வடஇந்திய, தென்னிந்திய உணவிலும் இடம் பிடிக்கிறது. தற்போது தமிழகத்தில் விளைச்சல் குறைவால் வெங்காயத்தின் விலை கிலோ ஸி50 வரை அதிகரித்து விட்டது. இதனால் ஓட்டல்களில் வெங்காயம் பயன்படுத்துவதை குறைத்துவிட்டனர்.

தர்மபுரி மாவட்டத்தில் அதகபாடி, ஆட்டுகாரம்பட்டி, பாலக்கோடு, புலிகரை, சோமனஅள்ளி ஆகிய பகுதிகளில் சின்ன வெங்காயம் பயிரிடப்படுகிறது. வைகாசி பட்டத்தில் பயிரிட்ட வெங்காயப்பயிருக்கு ஆனி, ஆடியில் போதிய மழை தர்மபுரி மாவட்டத்தில் பெய்யாததால் புரட்டாசி அறுவடையில் விளைச்சல் குறைந்துவிட்டது. இதனால் ஆட்டுக்காரம்பட்டி பகுதியில் மொத்த விற்பனையாளர்கள் திருச்சி, ராசிபுரம், உடுமலை, மைசூர் போன்ற பகுதிகளில் இருந்து சின்ன வெங்காயத்தை வாங்கி வந்து தரம் பிரித்து தர்மபுரி மார்க்கெட்டிற்கு அனுப்பி வைக்கின்றனர். கடந்த சில நாட்களாக ராசிபுரம் மற்றும் திருச்சி பகுதியில் இருந்து சின்னவெங்காயத்தை விற்பனைக்காக வாங்கி வருகின்றனர்.

இதுபற்றி ஆட்டுகாரம்பட்டி வெங்காய மொத்த வியாபாரி மாது கூறும் போது, வைகாசி பட்டத்தில் விதைக்கப்பட்ட வெங்காய பயிருக்கு போதிய மழை பெய்யாததால் தர்மபுரி மாவட்டத்தில் விளைச்சல் பாதியாக குறைந்துவிட்டது. தற்போது திருச்சி பகுதியில் இருந்து சின்ன வெங்காயத்தை கிலோ ஸி30க்கு வாங்கி தரம் பிரிக்கிறோம். தரம் பிரிக்கப்பட்ட சின்ன வெங்காயத்தை உலர வைத்து கிலோ ஸி35 முதல் 40 வரை விற்பனை செய்கிறோம். சின்னவெங்காயத்தின் தேவை அதிகரிப்பால் தற்போதைக்கு விலை குறைய வாய்ப்பில்லை. கார்த்திகை பட்டத்தில் சின்ன வெங்காயம் பயிரிடப்படும், அதன் அறுவடை தை மாதத்தில் கிடைக்கும் போது தான் விலை குறையும். அதுவரை சின்ன வெங்காயத்தின் விலை குறையாது என கூறினார். தர்மபுரி மார்க்கெட்டில் சின்ன வெங்காயம் சில்லரை விலையில் ஸி60க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதே போல் பெரிய வெங்காயம் ஸி45க்கு விற்பனை செய்யப்படுகிறது.

## வரத்து சரிவால் விலை உயர்வு ரூ28 லட்சத்திற்கு தக்காளி விற்பனை கூடைரூ400 ஆக அதிகரிப்பு

ராயக்கோட்டை: ராயக்கோட்டையில் தக்காளி வரத்து சரிந்ததால் கூடை ரூ400 ஆக அதிகரித்துள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம் ராயக்கோட்டை பகுதியில் தக்காளி சாகுபடி பிரதானமாக

உள்ளது. இங்குள்ள உள்ளுக்குறுக்ககை, திம்சேபள்ளி, பாளையம், எடவனஅள்ளி, தொட்டதிம்மனஅள்ளி, நெல்லூர், லிங்கனம்பட்டி, சச்சலப்பட்டி, கொப்பகரை உட்பட 60க்கும் மேற்பட்ட கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் தக்காளி சாகுபடி செய்துள்ளனர். இங்கு அறுவடை செய்யப்படும் தக்காளியை ராயக்கோட்டையில் உள்ள மண்டிகளுக்கு மொத்தமாக கொண்டு வந்து விற்பனை செய்து வருகின்றனர். சேலம், சென்னை, கோவை, திருச்சி, கர்நாடகம், ஆந்திரா மற்றும் புதுச்சேரியில் இருந்து வரும் வியாபாரிகள் தக்காளியை மொத்தமாக கொள்முதல் செய்கின்றனர். இதனால், ஆண்டு முழுவதும் ராயக்கோட்டை தக்காளி மார்க்கெட்டில் விற்பனை களை கட்டியவாறு காணப்படும். இந்நிலையில், நேற்று நடைபெற்ற ஏலத்தில் கிலோ தக்காளி ரூ16 ஆக விலை உயர்ந்தது. 25 கிலோ கொண்ட ஒரு கூடை தக்காளி ஸி400க்கு விற்பனை செய்யப்பட்டது. ஆக மொத்தம் நேற்று ஒரேநாளில் 7,000 கூடை தக்காளி வரத்து காணப்பட்டது. 175 டன் தக்காளி ஸி28 லட்சத்திற்கு விற்பனையானது. இதுகுறித்து வியாபாரிகள் கூறியதாவது:

தொடர் மழையால் வயல்களில் தண்ணீர் தேங்கியுள்ளது. இதனால், தக்காளி உடைந்து அழுகி வருவதால் வரத்து சரிந்துள்ளது. விலையும் உயர்ந்துள்ளது. கடந்த வாரம் நாள்தோறும் 10,000 கூடை தக்காளி வரத்து காணப்பட்டது. இதனால், கிலோ 12 ரூபாய்க்கும், ஒரு கூடை 300 ரூபாய்க்கும் விற்பனையானது. தற்போது 7,000 கூடையாக சரிந்துள்ளதால் விலை அதிகரித்துள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

### அரவக்குறிச்சி பகுதியில் வறட்சி பொங்கல் வைத்து சிறப்பு வழிபாடு

அரவக்குறிச்சி: அரவக்குறிச்சி பேரூராட்சி பூலாம்வலசில் மழை வேண்டி ஏராமான பெண் கள் சாமிக்கு சுத்துப் பொங்கல் வைத்து வழிபட்டனர். கடந்த மாதம் கரூர் மாவட்டத்தில் ஓரளவு மழை பெய்தாலும், அரவக்குறிச்சி சுற்று வட்டாரப் பகுதியில் சுத்தமாக மழையே இல்லை. இதனால் கடும் வறட்சி ஏற்பட்டு முருங்கை, வாழை, தென்னை, நெல் உள்ளிட்ட பயிர்கள் கருகிய நிலையில், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இதனால் விவசாயிகள் உள்ளிட்ட பொதுமக்கள் மிகவும் கஷ்டத்தில் உள்ளனர். இதனையொட்டி அரவக்குறிச்சி பேரூராட்சி பூலாவலசில் மழைவேண்டி, சுற்று பகுதியைச் சேர்ந்த ஏராள மான பெண்கள்

சாமிக்கு சுத்துப் பொங்கல் வைத்து வழிபட்டனர். பின் னர் ஆடுகளை பலியிட்டு சுவாமிக்கு படையல் செய்த னர்.

கழுகூர் பகுதியில் பரவும் மர்ம காய்ச்சல் தடுப்பு நடவடிக்கையில் சுகாதாரத்துறை தோகைமலை: கரூர் மாவட்டம் தோகை மலை ஒன்றியம் கழுகூர் ஊராட்சியில் உள்ள மாகாளிபட்டி, கழுகூர், முனையம்பட்டி, கீழகம்பேஸ்வரம், அ.உடையாபட்டி, குன்னாகவுண்டம்பட்டி ஆகிய பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் உள் பட 100க்கும் மேற்பட் டோர் கடந்த ஒரு மாத காலமாக கை, கால்கள் வீக்கம், வயிற்றுப்போக்கு மற்றும் மர்ம காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த மர்ம காய்ச்சலால் கழுகூர் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. இதனை அடுத்து சுகாதாரத்துறை அதிகாரிகள் அந்த பகுதியில் சிறப்பு மருத்துவ முகாம் அமைத்து ரத்த பரி சோதனை செய்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிகிச்சை அளித்து வந்தனர். இந்நிலையில் மர்ம காய்ச்சல் பாதிப்பு பகுதியில் சிறப்பு மருத்துவ முகாம் அமைத்து தேவையான நடவடிக்கை எடுக்குமாறு கலெக்டர் ஜெயந்தி உத்தரவிட்டார். இதனையடுத்து கழுகூர் அ.உடையாபட்டியில் 7நாட்கள் சிறப்பு மருத்துவ குழுவினர் சிகிச்சை அளித்திடவும், கழுகூர் ஊராட்சி நிர்வாகத்தின் மூலம் நாள்தோறும் 30 பணியாளர்கள் வீதம் அனைத்து ஊர்களிலும் உள்ள குடிநீர் தொட்டிகளில் குலோரினேசன் செய்த சுத்தமான தண்ணீர் கொடுக்கவும், சாக்கடைகள், தெருக்கள், மழை நீர் குட்டைகளில் நோய்கள் பரப்பும் கொசு களை ஒழிக்க மருந்துகள் தெளிக்கவும் முடிவு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து தோகைமலை ஒன்றிய ஆணையர்கள் ரத் தினம், செந்தில் வேல், வட் டார மருத்துவ அலுவலர் கலை செல்வி, கழுகூர் ஊராட்சி தலைவர் செல்வலெட்சுமி ராதாகிருஷ்ணன், ஒன்றிய கவுன்சிலர் முருகேசன் மண்டல பூச்சியியல் வல்லு நர் சிவக்குமார் ஆகியோர் கிணறுக ளில் மருத்துகள் தெளித்தல் போன்ற நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

## அரசின் இலவச கால்நடைகளுக்கு 29ம் தேதி சிறப்பு சிகிச்சை முகாம்

கரூர்: தமிழக அரசின் இலவச கால்நடை வழங்கும் திட்டத்தின் கீழ் கால்நடைகளை வாங்கிய பயனாளிகள் அதற்கான மருத்துவ முகாமில் பங்கு பெற்று பயனடைய வேண்டும் என கலெக்டர் ஜெயந்தி வேண்டுகோள் விடுத்துள்ளார். கரூர் மாவட்டத்தில் 2011-12ம் நிதியாண்டில் ஒரு பயனாளிக்கு 3 பெட்டை ஆடு, ஒரு கிடா வீதம் 1842 பயனாளிகளுக்கு 7368ஆடுகளை 24 பஞ்சாயத்துக்களில் வாங்கி

100சதவீத இலக்கு எட்டப்பட்டது. அதேபோல் 2012-13ல் மொத்தம் உள்ள 39 பஞ்சாயத்துக்களில் 3003 பயனாளிகளுக்கு 12012 ஆடுகள் வழங்கப்பட்டது. 2013-14ம் நிதியாண்டில் ஆகஸ்ட் 2013 முடிய 12 பஞ்சாயத்துக்களில் 924 பயனாளிகளுக்கு 3696 ஆடுகள் வழங்கப்பட்டன. இதுநாள் வரை வழங்கப்பட்ட ஆடுகள் 16787 குட்டிகள் ஈன்றுள்ளன. இதன் மூலம் கிராமப்புற ஏழைப் பெண்களின் வாழ்க்கை தரம் உயர்ந்துள்ளது.

மேலும், விலையில்லா வெள்ளாடுகள், செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் செப்டம்பர் 2012 முதல் ஆகஸ்ட் 2013 வரை வழங்கப்பட்ட ஆடுகளுக்கு வரும் 29ம் தேதி அந்தந்த கிராமங்களில் ஆய்வு மற்றும் குடற்புழு நீக்க சிகிச்சை முகாம் £ல்நடை பராமரிப்புத்துறையினரால் நடத்தப்படவுள்ளன. எனவே அனைவரும் பயன்பெற வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## அகணி ஊராட்சியில் காரைக்கால் வேளாண்மை கல்லூரி ஊரக வளர்ச்சி முகாம்

சீர்காழி: காரைக் கால் பண்டித ஜவகர்லால் நேரு வேளாண்மை கல்லூரி மாணவிகள் சார்பில் சீர்காழி அருகே அகணி ஊராட்சியில் ஊரக வளர்ச்சி முகாம் நடைபெற்றது. பொருளாதார விரிவுரையாளர் புஷ்பராஜ் தலைமை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குநர் ராமகிருஷ்ணன் முன்னிலை வகித்தார். ஊராட்சி தலைவர் கலைசெல்விராமசந்திரன் வரவேற்றார்.

விழாவில் உயரரிய உரங்களின் பயன்பாடுகள், வாழையில் நார் புழுக்களின் விளைவுகள், அதை கட்டுப்படுத்தும் முறைகள், விதை நேர்த்தி, அசோலா வளர்ப்பு, வீட்டு தோட்டம் தொடர்பான செயல்முறை விளக்கங்கள் அளிக்கப்பட்டது. மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு சிறுதொழில்கள், மண்புழு உரம் தயாரிப்பு, காளான் வளர்ப்பு பற்றி மாணவிகள் அலுரிஹைமா, டெல்பினா, எலிசெபத், எழில்மதி, காயத்ரி, ஸ்ரீவித்யா பயிற்சி அளித்தனர். இதில் ஊராட்சி துணை தலைவர் அன்பழகன், முன்னாள் ஊராட்சி தலைவர் அய்யப்பன், கூட்டுறவு வங்கி அதிகாரிமுருகன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கறவை பசுக்களுக்கு நாளை இனப்பெருக்க, குடற்புழு நீக்க முகாம்

நாகை: இலவச கறவைப்பசு மற்றும் வெள்ளாடுகளின் பால் உற்பத்தித்திறனை பெருக்கவும், வெள்ளாடுகள், கறவைப்பசுக் களின் எடையை அதிகரிக்கவும், தமிழகம் முழுவதும் நாளை (28ம் தேதி) கறவைப்பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும், வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் நடைபெற உள்ளது.

முகாமில் இலவச கறவைப்பசு வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற பயனாளிகள் மட்டுமின்றி அனைத்து கால்நடை வளர்ப்பாளர்களும் தங்கள் கால்நடைகளுடன் கலந்து கொண்டு பயன்பெறலாம். இந்த தகவலை நாகை கலெக்டர் முனுசாமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளனர்.

சமுதாய வள பயிற்றுனர் பணி விண்ணப்பிக்க 5ம் தேதி கடைசி

நாகை: நாகை மாவட்டத்தில் சமுதாய வள பயிற்றுனர் பணிக் கான காலியிடத்திற்கு விண்ணப்பிக்க 5ம் தேதி கடைசி நாளாகும். இதற்கு விண்ணப்பிக்கலாம் என்று நாகை கலெக்டர் முனுசாமி அழைப்பு விடுத்துள்ளார்.

மாநில ஊரக வாழ்வா தார இயக்கத்தின் சார்பில் நாகை மாவட்டத்தில் ஊராட்சிகளில் அடிப் படை விவரம் சேகரித்தல், மக்கள் பங்கேற்புடன் இலக்கு மக்களை கண்டறிதல், அவர்களுக்கு பயிற்சி அளித்தல் போன்ற பணிகளுக்கு சமுதாய வள பயிற்றுனர் தேர்வு செய்யப்பட உள்ளனர். இவர்களுக்கு மாத ஊதியம் ஏதுமில்லை. இவர்கள் நடத்தும் பயிற்சி வகுப்புகளுக்கு தக்கவாறு பயிற்றுனர் மதிப்பூதியம் மட்டும் வழங்கப்படும். சமுதாய வள பயிற்றுனர் பணிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், 18 வயது முதல் 35 வயதிற்குட்பட்டவர்களாக இருக்க வேண்டும். மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினராக குறைந்தது 2 ஆண்டுகள் இருந்திருக்க வேண்டும். சமுதாய பணிக ளில் ஈடுபாடு உள்ளவராக இருக்க வேண்டும்.

விண்ணப்பிப்பவர்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தை சேர்ந்த வட்டாரங்களான நாகை, தலை ஞாயிறு, கீழையூர், வேதாரண்யம், கொள்ளிடம், சீர்காழி, செம்பனார்கோவில் ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். விண்ணப்பங்களை நாகை கலெக்டர் அலுவலக வளாகத்தில் 3வது தளத்தில் இயங்கி

வரும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க அலுவலகம் மற்றும் தொடர்புடைய வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் பெற்று கொள்ளலாம்.

விண்ணப்பங்களை வரும் 5ம் தேதிக்குள் அனுப்பி வைக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு வாழ்வாதார இயக்க அலுவலகத்தை நேரிலோ அல் லது 04365 253061 என்ற தொலைபேசி எண்ணை யோ தொடர்பு கொண்டு அறியலாம். இந்த தகவலை நாகை கலெக்டர் முனுசாமி தெரிவித்துள்ளார்.

### கருகும் சம்பா பயிரை காப்பாற்றக் கோரி பாங்கலில் அனைத்து கட்சியினர் திடீர் மறியல்

கீழ்வேளூர்: போதிய தண்ணீர் இன்றி கருகும் சம்பா பயிரை காப்பாற்ற கோரியும், முறை வைக்காமல் தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று வலியுறுத்தியும் அனைத்து கட்சி சார்பில் நாகை மாவட்டம் பாங்கல் கடைத்தெருவில் நேற்று திடீர் மறியல் போராட்டம் நடைபெற்றது. திமுக மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் சுபாசந்திரபோஷ் தலைமை வகித்தார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி திருவாரூர் மாவட்ட செயலாளர் நாகராஜன், ஒன்றிய விவசாய சங்க செயலாளர் இடும்பையன், திமுக இளைஞர் அணி அமைப்பாளர் பிரகாஷ், அனைத்து விவசாய சங்க தலைவர் கலியப்பெருமாள், விவசாய பாதுகாப்பு சங்கம் தரணி ஆழ்வார், பனங்குடி ஊராட்சி தலைவர் சவுந்தராஜன், மதிமுக விவசாய சங்க செயலாளர் ரவிக்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சிதம்பரநாதன், கீழ்வேளூர் இன்ஸ்பெக்டர் கார்த்திகைசாமி ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதில் போதுமான அளவு தண்ணீர் திறந்து விடுவதாகவும், நாளை வாய்க்கால்களுக்கு தண்ணீர் வந்து விடும் என்று உறுதி அளித்தனர். இதனால் போராட்டத்தை கைவிட்டு அனைவரும் கலைந்து சென்றனர். திருவாரூர்திருத்துறைப்பூண்டி நெடுஞ்சாலையில் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

### வேளாண்மை கல்லூரி மாணவர்களுக்கு பயிற்சி

தேனி: வைகை அணை அருகே தனியார் வேளாண் தொழில் நுட் பக் கல்லூரியில் பயி லும் மாணவ, மாணவியர் 48 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. வைகை அணை அருகே குள்ளப்புரம் ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் வேளாண்

தொழில்நுட்பக் கல்லூரி உள்ளது. இக்கல்லூரியில் நான்காம் ஆண்டு பயிலும் 48 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் 8 குழுக்களாக பிரிந்து தேனி, மதுரை, திண்டுக்கல், சிவ கங்கை, திருப்பூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள வேளாண் பொருள்களை மையமாகக் கொண்டு செயல்படும் தொழிற்சாலைகளில் 2 வாரங்கள் தங் கியிருந்து பயிற்சி பெற்று வருகின்றனர்.

இப்பயிற்சி முடிந்தவுடன் மாணவ, மாண வியர் தங்கள் பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு தொழிற்சாலைகளில் தாங் கள் பெற்ற பயிற்சி குறித் தும், தொழிற்சாலைகளின் செயல்பாடுகள் குறித்தும் விளக்க உள்ளனர். இதில் சுற்றுப்புறச் சூழல் பராமரிப்பு, விதை உற்பத்தி, தரம் பிரித்தல், தங்கள் விளைநிலங்களில் விளையும் பொருள்களை சந்தைப்படுத்துதல், கொள்முதல் மற் றும் சந்தைகளுக்கு விற் பனை செய்தல் போன்றவற் றில் உள்ள தற்கால தொழில் நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு மாணவ, மாண வியர் விளக்க உள் ளனர். இத்தகைய பயிற் சியை கல் லூரி முதல்வர் சிவசுப்பிரமணியன் துவக்கி வைத்துள்ளார். மாணவ, மாணவியரின் பயிற்சியை உதவி பேராசிரியர் சுந்தர் மேற்பார்வையிட்டு வருகிறார்.

### சுய உதவி குழு பெண்களுக்கு மலர் சாகுபடி பயிற்சி

காட்டுமன்னார்கோவில் அருகே குருங்குடியில் பெரும்பாலானோர் மலர் சாகுபடி செய்து வருகின்றனர். இதை கருத்தில் கொண்டு புது வாழ்வு திட்டம், தோட்டக்கலை துறை சார்பில் புது வாழ்வு திட்ட சுய உதவி குழு பெண்களுக்கு மலர் சாகுபடி பயிற்சி அளிக்க மாவட்ட திட்ட மேலாளர் அறிவுறுத்தினார்.

இதன்படி தோட்டக்கலை துறை சார்பில் பெண்களுக்கு துறையினால் அளிக்கப்படும் சலுகைகள் பற்றியும், சாகுபடி முறைகள் பற்றியும் விரிவாக கூறப்பட்டது. மேலும் காய்கறிகள் தோட்டங்களில் பயிர் செய்து சமையலுக்கு பயன்படுத்தி கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டது.

பயிற்சி முகாமில் கண்டமங்கலம், குருங்குடி பகுதியை சேர்ந்த சுய உதவி குழு பெண்கள், தோட்டக்கலை துறை அலுவலர் கள் இன்பம், நீலகண்டன், ஆனந்தன், செல்வம் மற்றும் அணி தலைவர் பாண்டியன், சுய உதவி குழு செல்வி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கொள்முதல் விலையை உயர்த்த கோரி பால் உற்பத்தியாளர்கள் ஆர்ப்பாட்டம்

நாமக்கல்,: பால் கொள்முதல் விலையை உயர்த்த கோரி பால் உற்பத்தியாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

மாவட்ட தலைவர் முத்துசாமி தலைமை வகித்து கோரிக்கையை விளக்கி பேசினார். பால்கொள்முதல் விலையை பசும்பாலுக்கு லிட்டருக்கு ஸி 5ம், எருமைபாலுக்கு லிட்டருக்கு ஸி 7 ம் உயர்த்தவேண்டும். ஆரம்ப கூட்டுறவு சங்க பணியாளர்களை பணி நிரந்தரம் செய்து சம்பள உயர்வு அளிக்கவேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் ரங்கசாமி, முன்னாள் செயலாளர் கந்தசாமி உள்ளிட்ட பால் உற்பத்தியாளர்கள் பலர் கலந்து கொண்டு கோரிக்கையை விளக்கி கோஷமிட்டனர்.

## சிறுதானிய பயன்பாடு குறித்து மாணவர்களிடம் விழிப்புணர்வு சிஇஓ வலியுறுத்தல்

தாமதமாக வந்த நல்லாசிரியர் ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொள்ள 10 தலைமை ஆசிரியர்கள் தாமதமாக வந்தனர். காவேரி ஆர்.எஸ். உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் தணிகாசலம் தாமதமாக வந்ததுடன் சி.இ.ஓ.வுக்கு பெரிய கும்பிடு போட்டார். இதை பார்த்த சி.இ.ஓ. குமார், நல்லாசிரியர் விருது பெற்றவரே தலைமை ஆசிரியர்கள் கூட்டத்துக்கு தாமதமாக வரலாமா? என கண்டித்தார். அனைவருக்கும் பல பணிகள் இருக்கலாம். வீட்டை விட்டு வெளியே வந்தால் டிராபிக்ஜாம் ஏற்படும். பஸ் கிடைக்காது என பல காரணத்தை சொல்லலாம். ஆனால் எதையுமே திட்டமிட்டு செய்தால் குறித்த நேரத்துக்கு வந்துவிடலாம் என்றார்.

நாமக்கல்,: சிறுதானியங்கள் குறித்து மாணவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் குறும்படம் வெளியிடப்பட்டுள்ளது. அதனை தலைமை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு போட்டு காட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தவேண்டுமென சிஇஓ வலியுறுத்தியுள்ளார்.

நாமக்கல்லில் நேற்று உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் குமார் தலைமை வகித்து பேசியதாவது:

சிறுதானிய பயிர்களான கம்பு, சோளம், கேள்வரகு போன்றவற்றின் பயன்பாடுகள், அதில்

உள்ள சத்துக்கள் குறித்து இன்றைய மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்த பள்ளிகல்வித்துறை உத்தரவிட்டுள்ளது. அதை ஒரு குறும்படமாக தயாரித்து வெளியிட்டுள்ளது. அந்த குறுந்தகடு அனைத்து பள்ளிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தலைமை ஆசிரியர்கள் அதை மாணவர்களுக்கு போட்டு காட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தவேண்டும்.

காலாண்டு தேர்வு விடுமுறைக்குபின் பள்ளிகள் திறக்கும் முதல் நாளில் இரண்டாம் பருவ பாடபுத்தகம் மற்றும் நோட்டுகளை மாணவ, மாணவிகளுக்கு வழங்கவேண்டும். காலண்டு தேர்வு முடிவுகளை தலைமை ஆசிரியர்கள் ஆராய்ந்து மெல்ல கற்கும் மாணவர்கள் யார் என்பதை கண்டறிந்து அவர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கவேண்டும். மாநில அளவிலான தேர்ச்சி பட்டியலில் நாமக்கல் முதலிடம் வரவேண்டும். இதற்கு 100 சதவீத தேர்ச்சி அனைத்து பள்ளிகளிலும் வரவேண்டும். பிளஸ்2, 10ம் வகுப்புக்கு பாடம் எடுக்கும் அனைத்து ஆசிரியர்களையும் நேரில் சந்தித்து விட்டேன். அனைத்து பள்ளிகளுக்கும் நேரில் வந்து ஆய்வு செய்ய உள்ளேன். மெல்ல கற்கும் மாணவர்களை நானே நேரில் சந்தித்து அவர்களின் கல்வி தரம் குறித்து ஆராய்வேன். எனவே, மெல்ல கற்கும் மாணவர்களை தேர்ச்சி பெறவைப்பதை ஒரு சபதமாக நினைத்து ஆசிரியர்கள் பணியாற்றவேண்டும். இதற்கு தலைமை ஆசிரியர்கள் முன்னோடியாக இருக்கவேண்டும். இவ்வாறு முதன்மை கல்வி அலுவலர் குமார் பேசினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் பாலசுப்பிரமணியம் (உயர்நிலைக்கல்வி), மாவட்ட சுற்றுசூழல் ஒருங்கிணைப்பாளர் மகேஸ்குமர் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

## தென்மேற்கு பருவமழை காலம் முடிவுக்கு வருவதால் வெப்பம் அதிகரிக்க வாய்ப்பு

## வானிலை மையம் தகவல்

நாமக்கல்,: தென்மேற்கு பருவமழை காலம் முடிவுக்கு வருவ தால், மேகமூட்டம் குறைந்து வெப்பம் உயர வாய்ப்புள்ளதாக கால் நடை வானிலை மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து நாமக்கல் கால்நடை கல்லூரி வானிலை ஆய்வு மையம் பண்ணையாளர்கள், விவசாயிகளுக்காக வெளியிட்டுள்ள வானிலை அறிக்கை:

தென்மேற்கு பருவமழை காலம் முடிவுக்கு வரும் தருவாயில் உள்ளதால், மேகமூட்டம் குறைந்து அதிகபட்ச வெப்பம் உயர்ந்து காணப்படும். இதனால், தீவன மூலபொருட்களில்

ஈரத்தன்மை குறையக்கூடும் என்பதுடன், பூஞ்சான நச்சின் தாக்கமும் குறைவாக இருக்கும்.

மழைகாலங்களில் கோழிகளுக்கு ஏற்படும் வெள்ளைகழிச்சல் நோயை கட்டுப்படுத்த சின்ன சீரகம் 100 கிராம், கசகசா 5 கிராம், வெந்தயம் 5 கிராம், மிளகு 5 எண்ணி க்கை, மஞ்சள் தூள் 5 கிராம், பெருங்காயம் 5 கிராம் ஆகியவற்றை நன்கு வறுத்து இடித்துக் கொள்ள வேண்டும்.வெங்காயம் 5 பல், பூண்டு 5 பல் ஆகியவற்றை சேர்த்து நன்கு அரைத்து வறுத்த பொருட்களுடன் கலந்து அந்தக் கலவையை தீவனம் அல்லது அரிசி குருணையுடன் கலந்து 5 முதல் 10 கோழிகளுக்கு வாய் வழியாகக் கொடுத்து கழிச்சலைக் கட்டுப்படுத்தலாம்.

விவசாயிகளுக்கான வானிலை அறிக்கையில்:
மரவள்ளியில் மாவுபூச்சியின் தாக்குதல் பெருமளவில் காணப்படுவதால் இதை கட்டுப்படுத்த அசிரோபேகஸ் ஒட்டுண்ணியை ஏக்கருக்கு 100 என்ற அளவில் விடலாம். ஒட்டுண்ணி உற்பத்தி செய்யும் முறை குறித்து நாமக்கல் வேளா ண் விரிவாக்க நிலையத்தை தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

## பால் கொள்முதல் விலை உயர்த்தக் கோரி ஆவின் நிறுவனம் முன் உற்பத்தியாளர்கள் ஆர்ப்பாட்டம்

பவானி, : பசும்பால் லிட்டருக்கு ரூ.5ம், எருமைப்பால் லிட்டருக்கு ரூ.7ம் உயர்த்தி வழங்கக் கோரி சித்தோடு ஆவின் நிறுவனம் முன்பாக தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்டத் தலைவர் ராமகிருஷ்ணன் தலைமை தாங்கினார். அந்தியூர் காலநி அருள், வேதகாரன்குட்டை அலெக்சாண்டர், சத்தி லட்சுமணன், காவிலிபாளையம் தங்கவேல், விஜயமங்கலம் சின்னச்சாமி, கொளப்பலூர் பச்சியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சங்கத்தின் மாநிலத் தலைவர் ஏ.எம்.முனுசாமி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட உதவிச் செயலாளர் கொளந்தசாமி ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி சிறப்புரையாற்றினர்.

ஒரு லிட்டர் பசும்பாலு க்கு ரூ.5ம், எருமைப்பாலுக்கு ரூ.7ம் உயர்த்தி வழங்க வேண்டும்.

கர்நாடகம், பிற மாவட்டங்களில் உள்ளது போன்று உற்பத்தியாளர்களுக்கு லிட்டருக்கு ரூ.3 ஊக்கத்தொகை வழங்க வேண்டும். ஆவின் கால்நடை தீவனத்தை தரமானதாக உற்பத்தி செய்வதோடு , 50 சத மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். வட்டியில்லாமல் பயிர்க்கடன் வழங்குவதுபோன்று விவசாயிகளுக்கு கறவைமாடுகள் வாங்கவும், பராமரிக்கவும் கடன் வழங்க வேண்டும். கூட்டுறவு அமைப்புகளில் விவசாயிகளுக்கு தாமதமின்றி போனஸ் வழங்க வேண்டும் உள்பட பல்வேறு கோரிக்கைகளை ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன. மாவட்டச் செயலாளர் ஆனந்தராசு, பொருளாளர் செல்லிகவுண்டர், உதவிச் செயலாளர் வெங்கிடுசாமி, முன்னாள் செயலாளர் அருள்மொழி, தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் அய்யாவு, பொருளாளர் முத்துப்பழனிசாமி, தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத் தலைவர் கோபிநாத் உள்பட 100க்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

## தோட்ட தொழிலாளர் சங்க கூட்டம்

குன்னூர்: மாவட்ட தோட்ட தொழிலாளர் சங்க(ஐ.என்.டி.யூ.சி) 38வது மகாசபை கூட்டம் குன்னூரில் நடந்தது. தலைவராக முகமது, பொது செயலாளர்களாக ராஜ், பாலன், பொருளாளராக கோவிந்தன், செயலாளராக பாலசுப்பிரமணியம், துணை செயலாளராக ராமகிருஷ்ணன் மற்றும் 60 நிர்வாக கமிட்டி உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர். கூட்டத்தில், தனியார் தேயிலை தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தை விட டான்டீ தொழிலாளர்களுக்கு ரூ.7 வழங்கப்படுவதால் இவர்களுக்கு சம்பள இழப்பு ஏற்படுகிறது. எனவே அரசு உடனடியாக தனியார் தோட்ட தொழிலாளர்களுக்கு இணையாக டான் டீ தொழிலாளர்களுக்கும் சம்பளம் வழங்க வேண்டும். ஆண்டுதோறும் தொழிற் சங்க சந்தா தொழிலாளர் சம்பளத்தில் இருந்து ரூ.180ம், சூப்ரதவைசர், திறன்படைத்தவர்களின் சம்பளத்தில் இருந்து ரூ.240 பிடித்தம் செய்து நிர்வாகம் வழங்க தர வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## கால்நடைகளுக்கான குடற்புழு நீக்க முகாம்

ஊட்டி: தமிழக முதல்வரால் கடந்த 15.09.2011 அன்று இலவச கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டம் துவக்கப்பட்டது. தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக, ஒரு பயனாளிக்கு 4 வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகள் வீதம் 31 மாவட்டங்களில், 3 லட்சத்து 10 ஆயிரத்து 868 பயனாளிகளுக்கு 12 லட்சத்து 43 ஆயிரத்து 472 வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து தமிழகத்தில் மீண்டும் வெண்மை புரட்சியை உருவாக்கும் வகையில் 21 மாவட்டங்களில் 28 ஆயிரத்து 246 பயனாளிகளுக்கு 28 ஆயிரத்து 246 கறவை பசுக்களும் ஜூலை 2013 முடிய வழங்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் இத்திட்டம் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது. இதன் படி 2011 - 12ம் ஆண்டில் ஒரு பயனாளிக்கு 4 வெள்ளாடுகள் அல்லது செம்மறி ஆடுகள் வீதம் 210 பயனாளிகளுக்கு 840 கால்நடை வழங்கப்பட்டது. 2012 - 13ம் ஆண்டில் 200 பயணிகளுக்கு, 800 கால்நடை வழங்கப்பட்டுள்ளது. 2013 -14ம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 300 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு 1200 கால்நடைகள் வழங்கப்பட உள்ளது. இதுவரை 200 பயனாளிகளுக்கு 800 கால்நடைகள் வழங்கப்பட்டுள்ளன. விரைவில் மீதமுள்ள 100 பயனாளிகளுக்கும் வழங்கப்பட உள்ளது. இலவச கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் பயன்பெறும் பயனாளிகள் தங்கள் கால்நடைகளை கொள்முதல் செய்த பிறகு நன்கு பராமரிக்க வேண்டும் என தமிழக முதல்வர் வலியுறுத்தி உள்ளார். பயனாளிகளை ஊக்கப்படுத்தும் பொருட்டு, 2011-12 மற்றும் 2012-13ல் கால்நடைகளை சிறப்பாக பராமரித்த பயனாளிகளுக்கு அந்த ஆண்டுகளின் தமிழ் புத்தாண்டு தினத்தில் பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்நிலையில் விலை யில்லா வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளின் எடையினை அதிகரிக்கும் வகையில் தமிழகம் முழுவதும் வரும் 27, 28 ஆகிய தேதிகளில் வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம் நடைபெற உள்ளது. நீலகிரி மாவட்டத்திலும் இம்முகாம் நடக்கிறது. இதன்படி ஊட்டி ஊராட்சி ஒன்றியம் பாலகொலா, எப்பநாடு

ஊராட்சி ஆனைகட்டி கிராமத்திலும், குன்னூர் ஊராட்சி ஒன்றியத்தில் பேரட்டி, வண்டிசோலை, பர்லியாறு ஆகிய பகுதிகளிலும், கோத்தகிரி ஊராட்சி ஒன்றியத்தில் ஜக்கனாரை, கடினாமாலா, கொணவக்கரை ஆகிய பகுதிகளிலும், கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தில் சேரங்கோடு, நிலாக்கோட்டை, மசினகுடி சுற்று வட்டார பகுதிகளிலும் முகாம் நடக்கிறது. இலவச வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தின் மூலம் பயன்பெற்ற பயனாளிகள் மட்டுமல்லாமல் அனைத்து விவசாயிகளும் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளலாம். இவ்வாறு கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

## தண்ணீர் பற்றாக்குறை போக்க கிணறு, தடுப்பணை அமைக்க நடவடிக்கை

குன்னூர்: குன்னூர் நகர பகுதியில் குடிநீர் தட்டுபாடு நாளுக்குநாள் அதிகரித்து வருவதால் பொதுமக்கள் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். சமீபத்தில் பெய்த மழையும் எதிர்பார்த்தார்போல் இல்லை. நகரின் முக்கி நீராதாரமாக விளங்கும் அணையின் நீர்மட்டம் தற்போது 8.5 அடியாக உள்ளது. நாளொன்றுக்கு 17 லட்சம் லிட்டர் தண்ணீர் கொடுத்து வந்த இந்த அணையில் தற்போது 25 ஆயிரம் லிட்டர் தண்ணீர் மட்டுமே கிடைக்கிறது. இதனால் நகரப்பகுதியிலுள்ள 30 வார்டுகளிலும் நீராதார பகுதிகள் குறித்து ஆய்வு செய்து தண்ணீர் தட்டுப்பாட்டை போக்க வேண்டுமென நகராட்சி உயரதிகாரிகள் உத்தரவிட்டதின் அடிப்படையில் அனைத்து இடங்களிலும் இதற்கான ஆய்வு மேற்கொள்ளபட்டு வருகிறது.

இதுகுறித்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் மற்றும் நகராட்சி அதிகாரிகள் இணைந்து ஆய்வு மேற்கொண்டதில் 5க்கு மேற்பட்ட இடங்களில் கிணறு வெட்ட பரிந்துரை செய்துள்ளனர்.

இந்நிலையில் நகராட்சி ஆணையர் ஜான்சன் மற்றும் பொறியாளர் சண்முகம் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினர் கடந்த 3 நாட்களாக நகரப்பகுதிகளில் ஆய்வு செய்து வருகின்ற னர். இதன்படி வரும் பருவமழைக்கு முன்னதாக நீராதார பகுதிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தண்ணீரை சேமிக்கும் வகையில் கிணறுகள் மற்றும் தடுப்பணைகள் அமைக்கப்படும் என அதிகாரிகள் உறுதி அளித்துள்ளனர்.

## திருமானூர் விவசாயிகள் இடுபொருள் பெற அழைப்பு

திருமானூர்: திருமானூரில் உள்ள விவசாயிகளுக்கு குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தின்கீழ் விவசாய இடுபொருட்கள் வழங்கப்படுகிறது. இதை வாங்கி விவசாயிகள் பயன்பெற அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

திருமானூர் வேளாண் வட்டாரத்திற்கு உட்பட்ட 22 காவிரி டெல்டா கிராமங்களுக்கு தமிழக முதல்வரின் சிறப்பு திட்டமான குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தின்கீழ் விவசாய இடுபொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் திருமானூர் வேளாண் வட்டார காவிரி டெல்டா பகுதி கிராம விவசாயிகளுக்கு முழு மானியத்தில் ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சம், நெல் நுண்சத்து 5 கிலோ, உயிர் உரங்கள் 8 கிலோ மேலும் தாவர பூச்சி கொல்லி மருந்து 1 கிலோ மற்றும் நீர்கடத்தும் குழாய்கள் திருமானூர் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் வழங்கப்படுகிறது. இதை விவசாயிகள் பெற்று பயனடையலாம். இவ்வாறு வேளாண்மை இணை இயக்குனரின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விதை கிராம திட்ட பயிற்சி

திருமானூர்: திருமானூர் வட்டார வேளாண்துறை சார்பில் வட்டாரத்திற்கு உட்பட்ட பளிங்காநத்தம், மல்லூர், கோவில் எசனை ஆகிய கிராமங்களில் விதை கிராம திட்ட பயிற்சி நடந் தது. விதைகள், அவற்றை உற்பத்தி செய்யும் முறைகள் பற்றி வேளாண்மை உதவி இயக்குனர் பாபு எடுத்துரைத்தார். விதை கிராம திட்டம் பயன் குறித்து வேளாண் அலுவலர் செல்வகுமார், விதை பண்ணை குறித்து துணை வேளாண் அலுவலர் உலகநாதன் ஆகியோர் விளக்கினர்.

## ராமநதி, ஜம்புநதி மேல்மட்ட கால்வாய் திட்டத்தை நிறைவேற்றக்கோரி பாவூர்சத்திரத்தில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

சுரண்டை: ராமநதி, ஜம்புநதி மேல்மட்ட கால்வாய் திட்டத்தை நிறைவேற்ற கோரி பாவூர்சத்திரத்தில் விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ராமநதி ஜம்புநதி மேல்மட்ட கால்வாய் திட்டத்தை நிறை வேற்றக்கோரி, அரியப்புரம், ஆவுடையானூர் திப்பணம்பட்டி, வெங்கடாம்பட்டி, தெற்கு மடத்தூர் ஆகிய ஊராட்சி பகுதி விவசாயிகள் பாவூர்சத்திரத்தில் நேற்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஆர்ப்பாட்டத்திற்கு தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் லிங்கம் தலைமை வகித்தார். சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் குணசேகரன், பஞ்சாயத்து தலைவர்கள் அரியப்புரம் ஜாண் ஜெயபால், ஆவுடையானூர் இந்திரா செல்லப்பா, வெங்கடாம்பட்டி கணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆவுடையானூர் பஞ்சாயத்து துணைத் தலைவர் ராஜாசிவன் வரவேற்றார். ஆர்ப்பாட்டத்தில் சண்முகம், சிதம்பரம், மகாராஜா, செல்லத்துரை, ஜெகன், அருணாசலம், ராஜாதுரை, தனராஜ், முருகன், பன்னீர் செல்வம், ராஜேந்திரன், சண்முக சுந்தர்ராஜ், பிரபாகரன், ஜயப்பன், சரவணன், டேனியல் ஆபிரகாம், இருதயராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர். முருகன் நன்றி கூறினார்.

## வேளாண் பணிகளுக்கு வழங்கப்படுவதுபோல் மீன் வளர்ப்பிற்கும் மின்கட்டண சலுகை கலெக்டர் சமயமூர்த்தி தகவல்

நெல்லை: வேளாண் பணிகளுக்கு மின் கட்டண சலுகை வழங்கப்படுவது போல மீன் வளர்ப்பிற்கும் மின் கட்டண சலுகை வழங்கப்படுவதாக கலெக்டர் சமயமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியிருப்பதாவது:

வேளாண்மை பணிகளுக்கு மின் கட்டணத்தில் சலுகை வழங்கப்பட்டிருப்பது போல மீன் வளர்ப்பிற்கும் தமிழக அரசு சலுகையை விரிவுபடுத்தியுள்ளது. இதன் படி மீன் அல்லது இறால் வளர்ப்பு மேற்கொள்வோருக்கு மின் கட்டணம் டேரிப் 3 ஏ (1)ல் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

மாதம் ஒன்றுக்கு 250 யூனிட் அல்லது இரண்டு மாதங்களுக்கு 500 யூனிட் மின்சாரம் உபயோகிப்பவர்களுக்கு யூனிட் ஒன்றிற்கு ரூ.3.50 வீதமும், இந்த வரையறைக்கு மேல் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு யூனிட் மின்சாரத்திற்கும் யூனிட் ஒன்றுக்கு ரூ.4 வீதமும் வசூலிக்கப்படும்.

இதுதவிர வேளாண் பணியுடன் இணைந்த மீன் வளர்ப்பு அல்லது இறால் வளர்ப்பு மேற்கொள்வோருக்கு டேரிப் 4ல் வகைப்படுத்தப்பட்டு மின் கட்டணம் முழுமையாக விலக்கு அளிக்கப்படுகிறது. எனவே வேளாண் பணி களை மேற்கொள்ளும் விவசாயிகள் வேளாண் பணியுடன் மீன் வளர்ப்பையும் மேற்கொண்டு அரசு அளிக்கும் மின் கட்டண சலுகையை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளலாம். மீன் வளர்ப்பில் கிடைக் கும் கூடுதல் வருவாயை ஈட்டி பயனடையலாம். இது

தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு பாளையங்கோட்டை பஸ் நிலையம் எதிரில் எண்.1 லெட்சுமி நரச¤ம்மபுரம் தெருவில் இயங்கி வரும் மீன் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ள லாம்.
இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## நாங்குநேரியில் கிடப்பில் போடப்பட்ட செட்டிமடை கால்வாய் சீரமைப்பு பணி விரைந்து முடிக்க விவசாயிகள் வலியுறுத்தல்

நாங்குநேரி:நாங்குநேரியில் அரைகுறையாக கிடப்பில் போடப்பட்டு உள்ள செட்டி மடைக் காய்வாய் சீரமைப்பு பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்துகின்றனர்.
நாங்குநேரி பெரிய குளப்புரவிலுள்ள செட்டிமடை வாய்க்கால் பாசனத்திற்குட்பட்டது மேட்டுப்பத்து, மற்றும் தெற்குபத்து வயல்கள்.

இந்நிலங்களுக்கு நாங்குநேரி பெரியகுளம் செட்டி மடையிருந்து நாங்குநேரி ஊருக்குள் வரும் வாய்க்கால் வழியாக தண்ணீர் பாய்ந்து வந்தது. ஆனால் செட்டிமடை வாய்க்கால் பல ஆண்டுகளாக முழுமையாக தூர் வாரப்படாததாலும், ஆக்கிரமிப்புகள் அகற்றப்படாததாலும் இப்பகுதியிலுள்ள சுமார் 200 ஏக்கருக்கும் மேலான விளைநிலங்கள் பாசன வசதியின்றி தரிசாக கிடந்தன.

இதனால் இந்த விளை நிலங்களை வீட்டு மனைகளாக்கி விற்பனை செய்ய முயற்சித்து வருகின்றனர். மேலும் அவ்வப்போது விவசாயிகள் ஒன்று சேர்ந்து சொந்த பணத்தை செலவு செய்து வாய்க்காலை ஓரளவு சரி செய்து குறைந்த அளவிலான பரப்பளவில் சாகுபடி செய்தனர்.
அதிகம் தண்ணீர் வரத்து இல்லாததால் சில இடங்களில் வாய்க்காலை ஆக்கிரமித்து கட்டிடங்கள் கட்டியும், குப்பைகள், மற்றும் கட்டிடக்கழிவுகளை போட்டும் அடைத்துள்ளனர்.
இந்த கால்வாயை சீரமைக்க வேண்டும் என விவசாயிகள் தரப்பில் நீண்ட வருடங்களாக எழுந்த கோரிக்கைகளை தொடர்ந்து கடந்த 2012ஆம் ஆண்டு மே மாதம் நாங்குநேரி பேரூராட்சி மூலம் முதற்கட்டமாக ரூ.20 லட்சம் செலவில் செட்டிமடைக்காய்வாய் சீரமைக்கும் பணிகள் துவங்கி நடந்து வந்தது. அதில் சில இடங்களில் காங்ரீட் கால்வாய் அமைக்கப்பட்டது. அப்போது பணிகள் தரமாக இல்லை என புகார்கள் எழுந்தன. அதன்

பின் கடந்த 6 மாதங்களாக கால்வாய் பணி நடைபெறாமல் நிறுத்தப்பட்டு அரைகுறையாக கிடப்பில் போடப்பட்டுள்ளது.

பருவமழை தொடங்கும் காலம் நெருங்கி வருவதால் பெரியகுளம் நிரம்புவதற்குள் இப் பணியை முழுமையாக முடிக்க வேண்டும் . இல்லா விட்டால் விவசாயம் பாதிக்கும் சூழல் உள்ளதாக விவசீயிகள் கவலையில் உள்ளனர். மேலும் செட்டிமடைக் கால்வாயில் ஏற்கனவே நடந்த சீரமைப்பு பணிக்காக ஆங்காங்கே கழிவு நீர் செல்ல விடாமல் அணை போட்டு தடுத்து வைத்துள்ளனர். அதனால் பல மாதங்களாக அங்கு கழிவு நீர் தேங்கி நிற்பதால், துர்நாற்றம் வீசுவதுடன், கொசுக்கள் உற்பத்தியாகி சுகாதாரக் கேடு ஏற்பட்டு வருகிறது.

எனவே அரைகுறையாக நிறுத்தப்பட்டுள்ள செட்டிமடைக் கால்வாய் சீர மைப்பு பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.